அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்

முஸ்லிம் மதகுருமார்களின்

# புரோகித மாயை – லீலைகள்

தொகுப்பு :

**அபூ அப்தில்லாஹ்**

ஆசிரியர், அந்நஜாத் மாத இதழ்

வெளியீடு :

**ஜமாஅத் அல் முஸ்லிமீன்**

பேபி வாட்ச் மாடி

வட்டவிளை சந்திப்பு

கோட்டர். நாகர்கோவில்.

# நூல் பற்றிய விபரம்!


நூலின் பெயர்: xüoD \>zò\Vìï¹ [
புரோகித மாயை – லீலைகள்

தொகுப்பு : அபூ அப்தில்லாஹ்,
gEöBì, ¶ÍåÛVÝ \V> Ö>µ

முதல் பதிப்பு : ஜ.அவ்வல் 1430 மே, 2009

நூல் வடிவம் : 1 x 8 டெம்மி

தாள் : **16 Kg.**

பக்கங்கள் : **80**

விலை : ரூ. **15/-**

வெளியீடு : ஜமாஅத் அல் முஸ்லிமீன்
பேபி வாட்ச் மாடி
வட்டவிளை சந்திப்பு,
கோட்டர், நாகர்கோவில்.

அச்சிட்டோர் : ஏசியன் பிரிண்டர்ஸ்,
68/33, கிலேதார் தெரு,
திருச்சிராப்பள்ளி – 620 002.
தொலைபேசி : 2700888, 2711388

## முன்னுரை!

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும்(வரஹ்)

எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கும் உங்கள் அனைவருக்கும் சத்தியத்தை-நேர்வழியை-இஸ்லாத்தை உள்ளது உள்ளபடி அறிந்து அதில் உறுதியாக நின்று, அதன்படி செயல்பட அருள் புரிய அவனிடமே இறைஞ்சுகிறேன்.

இப்போது உங்கள் கைகளில் இருக்கும் இந்நூல், பொழுது போக்காகவோ, பிரயாணத்தில் இருக்கும் போதோ, படுத்துக் கொண்டு தூக்கம் வரும் வரையிலோ முழுக் கவனமில்லாமல் படிக்கும் (Light reading) நூல் அல்ல.

இதைப் படிப்பதெற்கென்றே நேரம் ஒதுக்கி பொறுமையாக, உரத்த சிந்தனையுடன் படிக்க வேண்டிய நூல்; படிக்கும்போது பக்கத்தில் அவசியம் அல்குர்ஆன் மொழிபெயர்ப்பை வைத்துக் கொள்ளுங்கள். இந்நூலில் காணப்படும் அனைத்து இறைவாக்குகளையும் உடனுக்குடன் அல்குர் ஆனிலேயே பார்த்து உறுதி செய்து கொள்ளுங்கள். உதாரணமாக 30:32 என்று குறிப்பிட்டிருந்தால் முதலில் இருக்கும் எண் 30 அத்தியாய எண்; அடுத்துள்ள எண் 32 வசன எண். அல்குர்ஆனை திறந்து பார்க்கும் போது அதன் மேல்பகுதியில் பெரும்பாலும் பாகம் அல்லது பகுதி அல்லது அந்த பாகத்தின் ஆரம்பத்திலுள்ள வசனம் குறிப்பிடப்பட்டிருக்கும். அடுத்து அத்தியாய எண்ணும் அத்தியாயத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும். பாகம் (ஜுஸ்வு)1 லிருந்து 30 வரையும், அத்தியாய எண்கள் 1லிருந்து 114 வரையும் குறிப்பிடப்பட்டிருக்கும். அத்தியாயத்தின் ஏறு வரிசையில் பார்த்துக் கொண்டு போனால் அத்தியாயம் 30 வரும்போது நீங்கள் 30ம் அத்தியாயத்தின் பெயரையும் அர்ரூம் என்று அறிந்து கொள்ளலாம். 30 அர்ரூம் என்றிருக்கும் பக்கங்களில் வரிசையாக மேலிருந்து கீழாக வசனங்களின் எண்கள் குறிப்பிட்டு வசனங்களும் எழுதப்பட்டிருக்கும். அதில் 32-ம் வசனம் நீங்கள் பார்க்க வேண்டிய வசனம். இப்படி இந்நூலிலுள்ள அனைத்து வசனங்களையும் நீங்கள் நேரடியாக அல்குர்ஆனில் பார்த்து உறுதி செய்து கொள்ள முடியும். அப்போதுதான் இவை நமது எஜமானன் அல்லாஹ்வின் நேரடிக்கட்டளைகள் என உணர்ந்து இறையச்சத்துடன், இறை உணர்வுடன் (தக்வா) நடக்கும் ஆர்வம் ஏற்படும்.

முஸ்லிம்களில் 99.9%-னரை இப்புரோகிதர்கள் அல்குர்ஆனை விட்டுத் தூரப்படுத்தி வைத்திருப்பதால் இப்படி விளக்கும் கட்டாயம் ஏற்படுகிறது.

இன்று முஸ்லிம் சமுதாயத்தினர் எந்த அளவு நயவஞ்சகப் புரோகிதர்களின் பிடியில் சிக்கி இருக்கிறார்கள்; அவர்கள் பற்றிப் பிடிக்க வேண்டிய அல்லாஹ்வின் இறுதி வழிகாட்டும் நூல் அல்குர்ஆனிலிருந்து தூரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள்? அதனால் எந்த அளவு மூட நம்பிக்கைகளிலும், மூடச் சடங்குகளிலும் மூழ்கி இருக்கிறார்கள்? என்பதை

எல்லாம் பார்க்கும்போது, உலகை வழி நடத்திச் செல்லக் கட்டளை இடப்பட்ட சமுதாயம் நடுநிலைச் சமுதாயம்; சாட்சி சொல்லும் சமுதாயம்; இப்படிப்பட்ட சமுதாயத்தின் நிலை இதுவா? என வேதனைப் பட நேரிடுகிறது.

இன்றைய முஸ்லிம்களில் மிகமிகப் பெரும்பான்மையினர், முஸ்லிமாக இருப்பதற்கு அடிப்படையான உறுதி மொழி "லாஇலாஹ இல்லல்லாஹ்"- "கடவுளே இல்லை; ஒரேயொரு கடவுளைத்தவிர" என்பதையே அறியாதிருக்கின்றனர். அதனால்தான் திருமணம் முடிக்கும் மாப்பிள்ளைக்கு, இப்புரோகிதர்கள் "கலிமா" என்ற உறுதி மொழியைச் சொல்லிக் கொடுத்து திருமணம் முடித்து வைக்கின்றனர்.

கலிமாவே தெரியாத முஸ்லிம்கள் அல்குர்ஆனைப் பற்றி என்ன தெரிந்திருக்கப் போகிறார்கள்? அவர்களைப் பொறுத்தமட்டிலும் அதனுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாதவர்களாகவே தங்கள் வாழ் நாளைக் கழிக்கின்றனர். 99% இத்தகையவர்களிடம் ஒரு முஸ்லிமின் அடையாள மான ஐங்கால தொழுகை இருப்பதில்லை; அவர்கள் நம்பிக்கை வைத்துள்ள புரோகித மவ்லவிகள் உபதேசப்படி மூடநம்பிக்கைகள் அடிப்படையிலான சடங்கு சம்பிரதாயங்களைக் கொண்டு அல்லாஹ்வின் பொருத்தமும், சுவர்க்கமும் கிடைத்து விடும் என்ற மூட நம்பிக்கையில் இருப்பவர்கள்; பெரும் நஷ்டவாளிகள்.

பேணுதலற்ற தொழுகையாளிகளின் நிலையும் பரிதாபத்திற்குரியதே. அவர்களின் தொழுகை மத்ஹபுகளின்படி இருக்கும். இவர்களுக்கும் அல்குர்ஆனின் தொடர்பு இருக்காது. அவர்களில் ஒரு சிலர் பள்ளிக்கு வரும்போது தொழுகைக்குப்பின் அங்கிருக்கும் அல்குர்ஆனை எடுத்து முகர்ந்து விட்டு, தலையில் வைத்துவிட்டு மீண்டும் அங்கேயே வைத்து விடுவார்கள். அதுவும் தொழுகைக்கு செய்த ஒளூ இருக்கிறது என்ற தைரியத்தில். ஒளூ இல்லாமல் குர்ஆனைத் தொடக் கூடாது என்று அவர்கள் நம்பியுள்ள புரோகிதர்கள் பயம் காட்டி வைத்திருக்கிறார்களே!

அடுத்து! நாங்கள் தக்லீதை விட்டு விடுபட்டு விட்டோம். குர்ஆன், ஹதீஸ்படி நடக்கிறோம் என பொய்யாகக் கூறும் புதிய மத்ஹபினராகிய **ஜாக், ததஜ** போன்ற இயக்கவாதிகளின் நிலையும் பரிதாபத்திற்குரியதே. அவர்கள் ஒளூ இன்றி குர்ஆனை தொடலாம் என்பதை ஒப்புக் கொள்வார் கள். பொருள் அறியவும் முற்படுவார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கை வைத்துள்ள **ஜாக், தவ்ஹீத்,** மவ்லவி(?)கள் மொழி பெயர்த்த ஷிர்க், பித்அத்கள் நிறைந்த குர்ஆன் மொழி பெயர்ப்பில் முழு நம்பிக்கை வைத்து அதையே கண்மூடி ஏற்பார்கள்.

இந்த அனைத்து வகைப் புரோகித மவ்லவிகளின் பிடியிலிருந்து விடுபட்டு சுயமாக தன்னம்பிக்கையுடன் அல்குர்ஆனிலுள்ள இந்நூலில் காணப்படும் குர்ஆன் வசனங்களைப் படித்து உணர்ந்து, எவ்வித சுய விளக்கமும் இல்லாமல், அவற்றின்படி நடப்பவர்களே வெற்றியாளர்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அந்த நேர்வழி நடக்கும் சிறுபான்மைக் கூட்டத்தில் நம் அனைவரையும் இணைத்தருள்வானாக.

# இயக்கங்களால் சமுதாயத்திற்கு பலமா? பலவீனமா?

21:92, 23:52 இரண்டு இடங்களில் "நிச்சயமாக உங்கள் உம்மத்-சமுதயம் ஒரே சமுதாயம்தான்" என்று அல்லாஹ் உறுதியாகச் சொல்கிறான். மேலும் 21:92-ல் "நானே உங்கள் இறைவன்: எனக்கே நீங்கள் அடிபணிந்து நடங்கள்" என்று கட்டளையும் இடுகிறான். 23:52-ல் நானே உங்கள் இறைவன்: எனக்கே நீங்கள் தக்வா-பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள் என் நேரடியாகக் கட்டளையிடுகிறான். அல்லாஹ்வையும், மறுமையையும், கேள்வி கணக்கையும், சுவர்க்க-நரகத்தையும் உறுதியாக நம்பி இருப்பவர்கள் அல்லாஹ்வின் இந்த 21:92, 23:52 இறைக் கட்டளைகளை உறுதியாக ஏற்று சமுதாய ஒற்றுமையைக் கட்டிக் காப்பார்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

அல்லாஹ்வின் இந்தக் கட்டளைகளை 2:39-ல் அல்லாஹ் சொல்வது போல் நிராகரித்து நிரந்தர நரகை அடைகிறவர்கள் என்ன செய்வார்கள் என்பதை அடுத்தடுத்து வரும் 21:93, 23:53 இறைக் கட்டளைகளில் அல்லாஹ் தெளிவு படுத்தியும் இருக்கிறான்; அவையாவன:

**(முஸ்லிம்களாகிய) அவர்கள் தங்களுக்கிடையே தங்கள் (மார்க்க) காரியங்களில் பிளவுபட்டனர். அனை வரும் நம்மிடமே மீள்வார்கள். (நாம் அவர்களுக்கிடையே தீர்ப்பளிப்போம்) (21:93)**

**(முஸ்லிம்களாகிய) அவர்களோ தம் (மார்க்க) காரியங்களில் சிதறுண்டு தம்மிடையே பல பிரிவுகளாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவினரும் தம்மிடம் இருப்பதைக் கொண்டே (ஜாக், ததஜ போன்றவை) மகிழ்கிறவர்களாய் இருக்கின்றனர்.** (23:53)

இப்படிப்பட்ட பிரிவுகள் கூடாது. அனைத்தும் வழிகேடு, நரகில் கொண்டு சேர்ப்பவை என அல்லாஹ் 3:103,105, 6:153,159, 30:32, 42:13,14 ஏழு இடங்களில் மிகக் கடுமையாக எச்சரித்துள்ளான்.

அல்லாஹ் நேர்வழியாகக் கொடுத்துள்ளது ஒரேயொரு

வழி மட்டுமே. மத்ஹபுகள், தரீக்காக்கள், இயக்கங்கள், அமைப்பு கள் என வெவ்வேறு பிரிவுகளில் செயல்படுவது உங்களை நேர்வழியில் இருந்து பிரித்து வழி கேடுகளில் இட்டுச் சென்று நரகில் சேர்க்கும் என்பதை 6:153 இறைவாக்கு எச்சரிக்கிறது இதோ:

**நிச்சயமாக (ஒரே வழியான) இதுவே என்னுடைய நேரான வழியாகும். ஆகவே இதனையே பின்பற்றுங்கள். இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம். அவை உங்களை அவனுடைய (நேர்)வழியிலிருந்து பிரித்து விடும் (நரகில் கொண்டு சேர்த்து விடும்) நீங்கள் (நேர்வழி யைப் பின்பற்றி) பயபக்தியுடையவர்களாக இருப்பதற்கு இவ்வாறு அவன் உங்களுக்குப் போதிக்கிறான்.** (6:153)

இதற்கு மேலும் மக்களுக்கு இவ்வாறு அறிவித்துவிடுமாறு அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

**(நபியே!) நீர் சொல்வீராக! இதுவே என்னுடைய (நேர்)வழியாகும். நான் அல்லாஹ்வின் பால் (உங்களை) அழைக்கிறேன். நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஞானத்தின் மீதே இருக்கிறோம். அல்லாஹ் மிகத் தூய்மையானவன். அவனுக்கு இணை வைப்போரில் நானும் ஒருவனல்லன்.** (12:108)

மேலே நாம் எடுத்து எழுதியுள்ள அல்குர்ஆனின் வாக்குகளை நடுநிலையோடு படித்து விளங்குகிறவர்கள் அல்லாஹ் ஒன்றுபட்ட ஒரே சமுதாயம் என்று தெளிவாகக் கூறி இருக்கும் நிலையில், முஸ்லிம் சமுதாயத்தை நான்கு மத்ஹபு, மஸ்லக்களின் பேராலோ, தரீக்காக்களின் பேராலோ, ஜாக், ததஜ போன்ற இயக்க, ஜமாஅத், அமைப்புகளின் பெயராலோ பிளவு படுத்துகிறவர்கள் 2:39 கூறுவதுபோல் அல்லாஹ்வின் கட்டளைகளை நிராகரித்து நரகில் சேர்கிறார்கள். 42:21 கூறுவதுபோல் அல்லாஹ்வின் தனி அதிகாரத்தை அதுவும் மறுமையில் தான் தீர்ப்பு என்ற அல்லாஹ்வின் வாக்குக்கு மாறாக தங்கள் கையில் எடுத்து முஸ்லிம்களுக்கு முஷ்ரிக், கா∴பிர் என தீர்ப்பளித்து சமுதாயத்தைப் பிளவு படுத்துவது கொடிய இணை(ஷிர்க்) வைக்கும் செயல் என்பதை விளங்க முடியும். மேலும் 49:16-ல் அல்லாஹ் கூறுவதுபோல் மவ்லவிகளான

இப்புரோகிதர்கள் அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்க முற்பட்டு கொடிய முஷ்ரிக் ஆக முற்படுகிறார்கள் என்பதையும் விளங்க முடியும். இவ்வுலகில் அல்லாஹ்வின் கட்டளைப்படி முஸ்லிம் சமுதாயத்தினுள் அவர்கள் இருந்தாலும் நாளை மறுமையில் 2:39 இறைக் கட்டளைப்படி நிரந்தர நரகத்திற்குரியவர்கள் ஆவார்கள்.

அல்லாஹ்வின் இப்படிப்பட்ட நேரடிக்கட்டளைகளை நிராகரித்து முதுகுக்குப் பின்னால் போட்டுவிட்டு சமுதாயத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து இவ்வுலகில் அற்ப உலக ஆதாயம் அடையலாம். ஆனால் மறுமையிலோ மிகக் கடுமையான, கொடூர மான, நிரந்தரமான தண்டனைகள் அவர்களை எதிர்பார்த்திருக் கின்றன என்பதையும் பல இறைவாக்குகள் எச்சரிக்கின்றன.

(பார்க்க 2:39, 159-162, 174, 33:66-68)

இந்தப் புரோகித மவ்லவிகள் பின்னால் செல்கிறவர் களுக்கும் நாளை மறுமையில் 33:66-68 கூறுவது போல் மிகக் கடுமையான வேதனைகள் இருப்பது மட்டுமல்லாமல் இவ்வுலகிலும் மாபெரும் துன்பங்களை அனுபவிப்பவர்களாக இருக்கிறார்கள். 8:46 இறைவாக்கு கூறுவதுபோல் முஸ்லிம் சமுதாயத்தின் பலம் குன்றி கோழைகளாக ஆகும் நிலையும், அதனால் பல பின்னடைவுகளும் ஏற்படும். மற்ற சமுதாய மக்களால் முஸ்லிம் சமுதாய மக்கள் நாயிலும் கேடாக மதிக்கப்படுகிறார்கள். நேர்வழியைத் தெளிவாக அறிவிக்கும் அல்குர்ஆனைப் பெற்றிருந்தும், அற்ப உலக மயக்கத்தில், இப்புரோகித மவ்லவிகள் பின்னால் சென்று ஷைத்தானின் சூழ்ச்சி வலையில் சிக்கிச் சீரழிவதால் அல்லாஹ் 7:175யிலிருந்து 179வரை எச்சரித்துக் கூறும் பரிதாப நிலைக்கு முஸ்லிம் சமுதாயம் தள்ளப்பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் உலகளாவிய அளவில் முஸ்லிம் சமுதாயத்தைவிட இழிவு படுத்தப்படும் பிறிதொரு சமுதாயம் இருப்பதாகத் தெரியவில்லை. 1430 வருடங்களுக்கு முன்னர் இப்றாஹீம் (அலை) அவர்களின் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டு அன்றைய உலமா சபையினராகிய “தாருந்நத்வா” புரோகிதர்களின் வசீகர உடும்புப் பிடியில் சிக்கி, எண்ணற்ற பிரிவுகளில் ஆனதால், இப்றாஹீம் (அலை) அவர்களின் சந்ததிகளான குறைஷ்கள் நரகின் விளிம்பில் நின்று கொண்டிருந்ததாக அல்குர்ஆன் 3:103

இறைவாக்கு எச்சரிப்பது போல், நபி(ஸல்) அவர்கள் நிறைவுபடுத்திய இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றும் முஸ்லிம்கள் இன்றைய தாருந்நத்வாவி னராகிய "ஜமாஅத் அல் உலமா" புரோகித மவ்லவிகளின் வசீகர உடும்புப் பிடியில் சிக்கி எண்ணற்ற பிரிவுகளில் ஆகி நரகின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் மத்ஹபு பிடியிலிருந்து விடுபட்டு விட்டோம்: நாங்கள் முகல்லிதுகள் இல்லை: நேரடியாக குர்ஆன், ஹதீஸை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டு அஹ்லஹதீஸ், முஜாஹித், ஜாக், ததஜ, ஸலஃபி போன்ற இயக்கப் பிரிவுகளில் இருப்பவர்கள், குர்ஆன் ஹதீஸை பின்பற்றுகிறோம் என்று கூறுவதில் பொய்யர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் நான்கு இமாம்களின் பெயரால் செயல்படும் முகல்லிது புரோகித மவ்லவி களை தக்லீது செய்வதைத்தான் விட்டுவிட்டார்களே அல்லாமல், மிகச் சமீப காலத்தில் முகல்லிது மத்ஹபு புரோகிதர்களிடமிருந்து பிரிந்து வந்து, தங்களின் சொந்த நலனுக்காக அல்லாஹ்வின் நேரடிக் கட்டளைகளான மேலே கூறப்பட்ட அனைத்து வசனங் களையும் நிராகரித்ததோடு 4:49, 53:32 குர்ஆன் வசனங்களுக்கு முரணாக, அவற்றை நிராகரித்துவிட்டு, முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்துவிட்டு, தங்களை தவ்ஹீது மவ்லவிகள் என பீற்றிக் கொள்ளும் புரோகித மவ்லவிகளை தக்லீது செய்யும் முகல்லிதுகளாகவே இருக்கிறார்கள். ஆக மத்ஹபு முகல்லிது களுக்கும், இயக்க முகல்லிதுகளுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. நாளை மறுமையில் இந்த இரு சாராரின் முடிவும் ஒன்றே: நரகமே என்பதை மேலே கண்ட பல இறைவாக்குகள் உறுதிப்படுத்துகின்றன.

ஆயிரம் வருடங்களாக மத்ஹபு பிரிவினர் நான்கிற்குள் கட்டுப்பட்டு இருக்கின்றனர். ஆனால் இயக்கப் பிரிவினரோ கடந்த 22 வருடங்களுக்குள் ஏழு பிரிவினர்களாகியுள்ளானர். 1000 வருடங் களுக்குப் பின்னர் எத்தனைப் பிரிவினர்களாவார்களோ அல்லாஹ்வே நன்கு அறிவான். இந்த அடிப்படையில் மத்ஹபு பிரிவினர்களை விட இந்த இயக்கப் பிரிவினர் மிகவும் கேடுகெட்ட நிலையில் இருக்கிறார்கள். மேலும் மத்ஹபு பிரிவினர் நான்கு இமாம்களின் பெயரால் இஜ்மா, கியாஸ் என்ற அடிப்படையில் செயல்படுகின்றனர். இயக்கப் பிரிவினரோ குர்ஆன், ஹதீஸ் மட்டுமே மார்க்கம் என்று வாயளவில் சொல்லிக் கொண்டு, செயலில் இவர்களின் சொந்த

இஜ்மா, கியாஸை லாஜிக், பாலிசி என்ற பெயரால் நடைமுறைப்படுத்தி, அவர்களை நம்பி அவர்கள் பின்னால் செல்லும் இளைஞர், இளைஞிகளை வழிகெடுத்து நரகில் தள்ளும் கொடூர உள்ளம் படைத்தவர் களாக இருக்கின்றனர். இந்த வகையிலும் மத்ஹபு பிரிவினரை விட, இயக்கப் பிரிவினர் மிகமிக கேடுகெட்டவர்களாகவே இருக்கின்றனர்.

மத்ஹபு பிரிவினர்தான் இஜ்மா கியாஸ் என்றும் பிக்ஹு சட்டங்கள் என்றும், மார்க்கத்தில் புதியவற்றை நுழைத்துள்ளார். நாங்கள், குர்ஆன், ஹதீஸை மட்டுமே பின்பற்றுகிறோம் என்றும் இயக்கத்தினர் கூறுவதில் படு பொய்யர்களே என்பதை அவர்கள் கடைபிடிக்கும் லாஜிக் பாலிசி நிரூபிக்கும்.

இந்தப் புரோகிதர்கள் அற்ப உலக ஆதாயத்தைக் குறிக் கோளாகக் கொண்டு, உலகில் பட்டம், பதவி, சுகம் நாடி அல்குர்ஆன் தெள்ளத் தெளிவாக இருக்கும் நிலையில் தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாகவே மத்ஹபு களாக, இயக்கங்களாகப் பிரிந்து அவர்களும் வழிகெட்டு, மக்களையும் வழிகெடுத்து நரகில் தள்ளுகிறார்கள்; இவ்வுலகிலும் மக்களை இழிவடையச் செய்கிறார்கள் என்பதை 2:90,213, 3:19, 10:90, 42:14, 45:17 ஆகிய ஆறு இறைக்கட்டளைகளை நேரடி யாகப் படித்து விளங்குகிறவர்கள் உணர முடியும்.

உதாரணமாக 1985க்குப் பிறகு இப்புரோகித மவ்லவி களிடையே ஏற்பட்ட இயக்கப் பிரிவுகளின் வரலாற்றைப் பார்ப்போம்.

30.10.1984-ல் கிறித்தவ மடத்தில் மதங்களால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள் என்ற தலைப்பில் நாம் பேசிய உரை, நூல் வடிவில் வெளி வந்தது. அந்த உரையில் ஆலிம்-அவாம் வேறுபாடு இல்லை. மார்க்கப் பணிக்குக் கூலி கூடாது. சமுதாயத்தில் பிரிவுகள் இல்லை. புரோகிதர்களுக்கு மார்க்கத்தில் அனுமதி இல்லை போன்ற அனைத்தையும் விளக்கி இருக்கிறோம். இந்நூலைப் பார்த்த பின்னரே இன்று ஜாக், ததஜ எனச் செயல்படும் புரோகித மவ்லவிகள் எம்மோடு வந்து இணைந்து அந்நஜாத் மாத இதழ் வெளியிடுவதோடு, மார்க்கப் பிரசாரமும் செய்ய வாக்களித்து துணை நின்றனர்.

அந்நஜாத் ஆரம்பிக்கும் முன்னரே புரோகித மற்ற தொழில் கல்வியுடன் கூடிய மார்க்கக் கல்வி திட்டத்தை உருவாக்கி

அதைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் அதற்காக இரண்டு இடங்களில் நிலத்திற்கு முன் பணமும் கொடுக்கப்பட்டு விட்டது. அப்போது இந்தப் புரோகித மவ்லவிகள் அதைப் பெரிதாக எண்ணவில்லை. இந்த நிலையில் சில முஜாஹிதுகள் எம்மை அணுகி, எமது முயற்சிகளை "மர்கஸுஸ்ஸல.்.பி" என்ற பெயரால் ஸல.்.பியைச் சார்ந்து நடத்த முன் வந்தால், அரபு நாடுகளி லிருந்து கோடி, கோடியாகப் பெருந்தொகைகளைப் பெற முடியும் என்று கூறி, அதற்கு ஆதாரமாக கேரளாவில் அந்த அடிப்படையில் நடந்து வரும் பல கோடிகள் பணச் செலவிலான திட்டங்களை எடுத்துக் காட்டவும் செய்தனர்.

நாம் நீண்ட காலமாக எமது 42வது வயதுவரை ஷா.்.பி மத்ஹபில் நிலைத்திருந்ததற்குக் காரணமே பிரிவுகளில்லாமல் மார்க்கத்தைச் செயல் படுத்த முடியாது. எனவே பின்னால் தோன்றிய அஹ்லஹதீஸ், முஜாஹித், ஸல.்.பி போன்ற பிரிவு களைவிட, 1000 வருடங்களுக்கு முன்னால் தோன்றிய மத்ஹபு பிரிவுகளே மேலானவை என்ற அடிப்படையில் ஷா.்.பி மத்ஹபில் நிலைத்திருந்தோம். ஆனால் 1983லிலிருந்து அல்குர்ஆனையும், ஹதீஸ்களையும் நேரடியாகப் படித்து விளங்கிய பின்னரே, இஸ்லாத்தில் எந்த அடிப்படையிலும் அது மத்ஹபுகளாகட்டும், இயக்கங்களாகட்டும், மஸ்லக்கள், ஸல.்.பி ஆகட்டும் அனுமதி இல்லை. அல்லாஹ் பெயர் சூட்டியபடி (22:78) முஸ்லிம் என்ற நிலையிலும், மார்க்கப் பணி புரிகிறவர்களும் தங்களை முஸ்லிம்களில் உள்ளவர்கள் என்றே கூற வேண்டும் (41:33) என்ற தெளிவான, நேர்வழி கிடைத்த பின்னரே இம் முயற்சியில் இறங்கினோம். இதை 30.10.1984 மேற்படி உரையில் தெளிவுபடுத்தி யும் இருக்கிறோம்.

எனவே பல கோடிகள் கிடைக்கும் என்ற ஆசையில் ஸல.்.பி பிரிவை நாம் சரி காணாமல் நிராகரித்து விட்டோம். இது ஒரு காரணம். அடுத்து அந்நஜாத் ஆரம்பித்த சில மாதங்களி லேயே தமிழகத்தில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் நஜாத் முழக்கம் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்து விட்டது. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்று இன்றைக்கு 22 ஆண்டுகளாகியும் அவர்கள் இதுவரை பல இயக்கங்கள் கண்டும், மக்கள் அவர்களை அவர்களின் இயக்கத்தின் பேரால் அழைப்பதில்லை. நஜாத்காரன், நஜாத்காரன் என்றே மக்கள்

அழைக்கிறார்கள். கடந்த 18.04.2009 அன்று ததஜவினர் குறிச்சிக் குளத்தில் நடத்திய கூட்டத்திற்கு நஜாத்காரன் என்று கூறி மின்சாரம் எடுக்க விடாமல் தடுத்த சம்பவத்தை ததஜவினரே தங்களின் உணர்வு வார இதழ் மே 08-14,2009 இதழ் பக்கம் 9-ல் குறிப்பிட்டுள்ளனர். நஜாத்காரன் என்ற பெயர் கடந்த 22 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை நிலைத்திருக்கிறது என்றால் அந்நஜாத் சில மாதங்களிலேயே ஏற்படுத்திய புரட்சியை அறிய முடியும். அதனால் எமது புரோகிதமற்ற கல்வித் திட்டத்திற்குரிய சூழ்நிலை உருவாக ஆரம்பித்தது. அதுவே இந்தப் புரோகிதர்களுக்கு 2:90,213, 3:19, 10:90, 42:14, 45:17 ஆகிய இடங்களில் அல்லாஹ் கூறுவது போல், மார்க்கம் தெளிவான நிலையிலும் பொறாமைத்தீயை வளர்த்து விட்டது. புரோகிதமற்ற கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டால், புரோகிதர் களாகிய தாங்கள் செல்லாக் காசாக ஆகி விடுவோமோ என்ற அச்சம் அவர்களை ஆட்கொண்டது. எனவே அத்திட்டத்தை முறியடிக்கும் நோக்கத்துடனே, எம்மை அந்நஜாத்தை விட்டு வெளியேற்றும் சதித் திட்டத்தோடு எம்மீது பழிசுமத்தி, அட்ஹாக் கமிட்டி அமைத்து குற்றப்படுத்தும் தீய நோக்கத்துடன் பெரும் முயற்சிகள் செய்தார்கள்.

எப்படியும் அந்நஜாத்தைவிட்டு எம்மை வெளியேற்றிவிட்டு அந்நஜாத்தை அபகரிக்க இமயமலை முயற்சிகள் செய்தனர். பெரும் சதித் திட்டங்களைத் தீட்டினர். ஆனால் அல்லாஹ் 3:54, 8:30-ல் கூறுவது போல், இப்புரோகித மவ்லவிகளின் அனைத்து சதித் திட்டங்களையும் முறியடித்து, மீண்டும் அந்நஜாத்தை எம்மிடம் கொண்டு வந்து சேர்த்தான். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவர்கள் தங்கள் சதித் திட்டங்களில் பெருந்தோல்வியுற்று நம்மைவிட்டு 1987-ஜூனில் வெளியேறி ஆக்(AQH) என்ற பிரிவு அமைப்பைத் தோற்றுவித்தனர். அதையே ஒரு வருடத்தில் ஜாக்(JAQH) என மாற்றினர். புரோகித மதரஸா ஒன்றையும் ஆரம்பித்தனர். தாருந்நத்வா போல் ஜ.உ.ச. என்ற புரோகிதர்களின் சபை ஒன்றையும் ஆரம்பித்து அரசில் பதிவு செய்து கொண்டனர்.

நம்மை விட்டு வெளியேறியதிலிருந்து எம்மீது அமானித மோசடி, நம்பிக்கைத் துரோகம், வரவு செலவு கணக்கில் ஊழல் என தார்ப்பாயில் வடித்தெடுத்த பொய்களையும், அவதூறு களையும் உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் பரப்பி

எமது புரோகிதமற்ற மார்க்கக் கல்வி, தொழிற்கல்வி திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் தடுத்து விட்டனர். இத்தனைக்கும் அட்ஹாக் கமிட்டி போட்டு நாம் கொடுத்த வரவு செலவு கணக்கை வரிவிடாமல் அலசி, வரவுகள் அனைத்தும் வரவு வைக்கப் பட்டுள்ளன; செலவுகளும் சரிபார்க்கப்பட்டு ஏற்கப்பட்டன என அவர்கள் அனைவரும் எழுதிக் கையெழுத்திட்டு எம்மை வெளியேற்றும் முயற்சியில் தோல்வியுற்றே அவர்கள் வெளியேறி இவ்வாறு அவதூறு பரப்பினர்.

இவற்றை இங்கு ஏன் விவரிக்கிறோம் என்றால், மார்க்கம் தெளிவாக இருக்கும் நிலையில், இப்புரோகிதர்களிடம் ஏற்படும் பொறாமை உணர்வும், உலக ஆசையும்தான் பல இயக்கங்கள் தோன்றக் காரணமாகின்றன என்பதை புரிய வைக்கும் நோக்கமேயாகும். அவர்கள் ஸல.்.பி அடிப்படையில் ஜாக் பிரிவு இயக்கத்தை அமைத்து அதைப் பதிவு செய்து கொண்டதால், அரபு நாடுகளிலிருந்து பல பள்ளிகள் கட்டவும், மதரஸாக்கள் நடத்தவும், ஊதியமாகவும் கோடிக் கணக்கில் பெற்று வருகின்றனர். அன்று இவை அனைத்திற்கும் துணை நின்ற இன்றைய ததஜ தலைமைப் பூசாரி பீ.ஜை இன்று அவற்றை அம்பலப் படுத்தி வருவதைப் பார்க்கிறோம். இதுவும் பொறாமையின் வெளிப்பாடே.

இந்த இடத்தில் "ஸல.்.பி" பிரிவையும் அறிய வேண்டி யுள்ளது. மத்ஹபு, தரீக்கா பிரிவினர்கள் தங்களை "அஹ்ல சுன்னத் வல் ஜமாஅத்"என அழைத்துக் கொள்கின்றனர். "ஸல.். பி" பிரிவினர் இவர்களை கல.்.பிகள் என்றும், தங்களை ஸல.். பிகள் என்றும் கூறுகின்றனர். அதாவது ஹன.்.பி, மாலிக்கி, ஷா.்.பி, ஹன்பலி மத்ஹபினரும், காதிரியா, ஷாதுலியா, நக்ஷபந்தியா போன்ற தரீக்காவினரும் கல.்.பிகளான பின்னோர்களை, அதாவது ஹிஜ்ரி 400க்குப் பிறகு உள்ள பின்னோர்களைப் பின்பற்றுவதாகவும், ஸல.்.பிகளான தாங்களோ நபிதோழர்கள், தாபியீன்கள் போன்ற ஸல.்.புகளான முன்னோர் களைப் பின்பற்றுவதாகவும் கூறிக்கொள்கின்றனர். ஆனால் 2:134, 141,7:3, 33:36,66,67,68,59:7 இறைவாக்குகளைப் படித்து விளங்குகிறவர்கள், கல.்.பிகளைப் பின்பற்றுவதையும் மார்க்கம் தடை செய்துள்ளது. ஸல.்.புகளைப் பின்பற்றுவதையும் மார்க்கம் தடை செய்துள்ளது. ஆனால் குர்ஆன், ஹதீஸுக்கு முரணில்லாத வற்றில் இக்காலத்தவர்களின் சுய கருத்துக்களைவிட, நபி

தோழர்களின் சுய கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதே பாதுகாப்பானதாகும்.

1983,84,85,86களில் சமுதாயத்தைப் பிளவு படுத்தும் மத்ஹபுகள், இயக்கங்கள்தான் கூடாது. சமுதாயத்தைப் பிளவு படுத்தாமல் ISM இ.இ.இ. IAC போன்ற அமைப்புகள் தவறு இல்லை என்றே நம்பினோம். எனவே 1983-ல் நாம் ஆரம்பித்த முயற்சி ISM என்ற பெயரிலேயே இருந்தது, அப்போது துபையில் இஇஇ என்ற அமைப்பும் இருந்தது. அந்நஜாத் ஆரம்பித்த பின்னர் அங்குள்ளவர்கள் IAC என்ற அமைப்பில் செயல் பட்டதையும் நாம் தவறாக எண்ணவில்லை.

1987-ல் இப்புரோகிதர்கள் பொறாமையால் நம்மைவிட்டுப் பிரிந்து ஆக் பின்னர் ஜாக் கண்ட ஆரம்பத்தில், நாகூரில் ஒரு மாநாடு நடத்தும் முயற்சியில் IAC, JAQH அமைப்பினர் ஈடுபட்டனர். அப்போது மாநாட்டை IAC சார்பாக நடத்துவதா JAQH சார்பாக நடத்துவதா? என அவர்களுக்குள் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றி ஒருவர் எங்களுக்கு இஸ்லாத்தை விட இயக்கம்தான் முக்கியம் என பிதற்றியதுதான் அதில் ஹைலைட். இந்தத் தகறாரில் அந்த மாநாடு தடைபட்டது. அப்போது பரங்கிப் பேட்டையில் IAC அமைப்பிற்கு சிறிது செல்வாக்கு இருந்தால் அங்கு IAC பெயரில் மாநாடு நடத்தினர். பின்னர் நாகூரில் JAQH பெயரில் இவர்கள் மாநாடு நடத்தி முடித்தனர்.

இந்த சம்பவங்கள் சமுதாயத்தைப் பிளவுபடுத்தாமல் வைக்கப்படும் ISM, IIM, இஇஇ, IAC போன்ற அமைப்புப் பெயர்களும் அவர்களுக்கிடையில் போட்டி பொறாமையை ஏற்படுத்தி விடுகிறது. எங்கள் இயக்கம் தான் நேர்வழியில் இருக்கிறது. இஸ்லாத்தைவிட எங்களுக்கு இயக்கமே முக்கியம் போன்ற அகந்தையுடன் கூடிய ஆணவத்தை உருவாக்குகிறது. அதனால் மார்க்கப் பணி புரியும் யாராக இருந்தாலும் தங்களை அடையாளப் படுத்தி கொள்ள சமுதாயத்தைப் பிளவு படுத்தும் பெயராக இருந்தாலும், பிளவு படுத்தாத பெயராக இருந்தாலும் தனிப் பெயர் சூட்டிக் கொள்ளக் கூடாது. பிரசார பணி செய்கிறவர்களும் தனித்தனி பெயர்களில் செயல் படுவது சமுதாயத்தைப் பிளவு படுத்தும் பெருத்த வழிகேடு; அல்லாஹ்வின் 41:33 கட்டளைக்கு முற்றிலும் அடிபணிந்து தங்களை முஸ்லிம்களில் உள்ளவர்கள் என்று மட்டுமே சொல்ல வேண்டும். நபி(ஸல்) அவர்கள்

நடைமுறைப்படுத்தி, முஸ்லிம்களுக்காக விட்டுச் சென்ற "ஜமாஅத் அல் முஸ்லிமீன்" என்ற உலகளாவிய பேரியக்கத்தில் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பபட வேண்டும் என்ற பேருண்மை எமது அறிவில் பட்டது. பெரும்பாலான ஹதீஸ் நூல்களில் காணப்படும் "ஜமாஅத் அல் முஸ்லிமீன்" பற்றிய ஹதீஸ் எமக்கு மேலும் வலுவான உறுதியைத் தந்தது.

இந்த ஹதீஸிலுள்ள "முஸ்லிமீன்" என்ற அரபி பதத்தை யும், "ஜமாஅத்" என்ற அரபி பதத்தையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். கட்டுப்பட்டு நடப்பவர்களின் கூட்.டமைப்பு என்று தமிழில் சொல்ல வேண்டும் என்று ததஜ தலைமைப் பூசாரி கூறி வருவது வடிகட்டிய அறியாமை-பிதற்றல் என்பதை அவர் பெற்றோர் சூட்டிய அவரது பெயரான "ஜைனுல் ஆபிதீன்" என்பதை தமிழில் மொழி பெயர்த்து "அழகான வணக்கசாலி" என்று கூறுகிறாரா? அல்லது பெற்றோர்கள் சூட்டியபடி "ஜைனுல் ஆபிதீன்" என்று அரபியிலே கூறிக் கொண்டு அப்படியே தமிழிலும் கையெழுத்து இடுகிறாரா? என்பதிலிருந்து அறியலாம்.

தனது தந்தை சூட்டிய தனது பெயருக்கே இந்த அளவு மதிப்புக் கொடுக்கும் ததஜ தலைமைப் பூசாரி, அல்லாஹ் பெயர் சூட்டி (22:78) அப்படித்தான் சொல்ல வேண்டும் என்று 41:33-ல் கட்டளையிட்டிருக்கும் நிலையில், அல்லாஹ்வின் இந்தக் கட்டளைகளைச் துச்சமாகத் தூக்கி எறிந்து விட்டு, அவற்றை தமிழில் மொழி பெயர்த்துக் கூற வேண்டும் என்று ஆணவத்துடன் கூறுகிறார். பல முஸ்லிம்களின் செயல்பாடுகள் முஸ்லிம் என்ற நிலையை வெளிப்படுத்தவில்லை: எனவே அவர்களை முஸ்லிம் களாக ஏற்க முடியாது: அவர்கள் முஷ்ரிக், கா.ஃ.பிர்; அவர்கள் பின்னால் நின்று தொழக்கூடாது என்று கூறும் பீ.ஜையின் மேற்படி 'முஸ்லிம்' என்று அல்லாஹ் சூட்டியுள்ள பெயரையும், பிரசார பணி புரிகிறவர்கள் "ஜமாஅத் அல் முஸ்லிமீன்" என்று நபி(ஸல்) நடைமுறைப் படுத்திய பெயரையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்ற அவரது கூற்றும், இன்னும் அவரது பல செயல்பாடுகளும் அவரது பெயரான ஜைனுல் ஆபிதீன் என்ற நிலையை வெளிப்படுத்தவில்லை. எனவே "வழிகெட்ட வணக்க சாலி" என்று மாற்றிக் கூற அவர் ஒப்புக் கொள்வாரா?

அதல்லாமல் ஜமாஅத் அல் முஸ்லிமீனும் ஒரு பிரிவுப் பெயர்தான், அபூ அப்தில்லாஹ்வின் ஜமாஅத் என்று துணிந்து

பொய் கூறி தனது ஆதரவாளர்களை ஏமாற்றி வழிகெடுப்பவர் எப்படிப்பட்ட வழிகேடரான புரோகிதராக இருப்பார் என நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். நபி(ஸல்) அவர்களே தரையில் ஒரு நேர்கோடு போட்டுவிட்டு, இருபக்கமும் பல கோடுகள் போட்டு அந்த நேர்கோட்டைச் சுட்டிக்காட்டி இதுவே நேர்வழி என்று கூறி 6:153 அல்குர்ஆன் வசனத்தை ஓதிக்காட்டி இருக்கிறார்கள்.

**நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும்; ஆகவே இதனையே பின்பற்றுங்கள். இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம். அவை உங்களை அவனு டைய (நேர்) வழியை விட்டுப் பிரித்துவிடும்; நீங்கள் (நேர்வழியைப் பின்பற்றி) பயபக்தியுடையவர்களாக இருப்ப தற்கு இவ்வாறு அவன் (அல்லாஹ்) உங்களுக்குப் போதிக்கிறான்.** (அன்ஆம் 6:153)

இவ்வளவு தெளிவாக நேரடியாக அல்லாஹ்வும், அவனது தூதரும் 22:78 மற்றும் 41:33ஐ விளக்கி இருக்க ஜமாஅத் அல் முஸ்லிமினும் ஒரு பிரிவுப் பெயர்தான்; அபூ அப்தில்லாஹ்வின் ஜமாஅத் எனத் துணிந்து அப்பட்டமான பொய்யைக் கூறும் பீ.ஜை. நாளை அல்லாஹ்விடம் தப்ப முடியுமா? வருந்தி அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டால் தப்பினார். இதே நிலையில் மரணித்தால் 2:39, 159-162 இறைவாக்குகள் கூறும் நிலைதான்.

எனது உம்மத் 73 பிரிவினர்களாகப் பிரிவர்; 72 பிரிவினர் நரகத்தை அடைவர். ஒரே ஒரு பிரிவு மட்டுமே சுவர்க்கம் சேரும் என்று நபி(ஸல்) கூறிய போது, அந்தப் பிரிவு எது என நபித் தோழர்கள் கேட்க, நானும் எனது தோழர்களும் எவ்வாறு இருக் கிறோமோ அவ்வாறு இருப்பவர்கள் எனத் தெளிவு படுத்தியுள்ளனர். நேர்வழி நடந்து சுவர்க்கம் புகும் கூட்டத்தினரும் ஒரு பிரிவு தான். ஆனால் அந்தப் பிரிவினர் முஸ்லிம் என்று சொல்லும் யாரையும் முஷ்ரிக், கா∴பிர் என ∴பத்வா கொடுக்க மாட்டார்கள். அவர்கள் பின்னால் தொழக் கூடாது எனக் கூற மாட்டார்கள். முஸ்லிம் சமுதாயத்திலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்ட ஜாக், ததஜ, இதஜ என தனிப்பெயர் சூட்டிக் கொள்ள மாட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் நடைமுறைப்படுத்திக் காட்டியது போல், 2:8-20 இறை வாக்குகளில் அல்லாஹ் விவரிக்கும் இன்றைய தர்கா, தரீக்கா, முஸ்லிம்களைவிட கேடுகெட்ட உதட்டளவில்

முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டவர்களையும், 49:14-ல் நம்பிக்கை உள்ளத்தில் நுழையாதவர்களையும் முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ள அல்லாஹ் அனுமதித்திருப்பவர்களையும் முஸ்லிம்களாக ஏற்று சமுதாய ஒற்றுமையைக் கட்டிக்காத்தது போல், அனைத்து 72 பிரிவினரையும், அவர்கள் பற்றிய தீர்ப்பை அதிகாரம் பெற்ற அல்லாஹ்வே நாளை மறுமைக்கென்று ஒத்தி வைத்திப்பதை ஏற்று, அனைவரையும் முஸ்லிம்கள் என அரவணைத்து 21:92, 23:52 இறைவாக்குகள் கூறும் ஒன்றுபட்ட சமுதாயத்தைக் கட்டிக் காக்கும் அந்த ஒரேயொரு பிரிவினரே அல்லாஹ்வின் பொருத்தம் பெற்று சுவர்க்கம் நுழைவர்.

எனவே முஸ்லிம் என்று அல்லாஹ் சூட்டிய பெயரையும், “ஜமாஅத் அல் முஸ்லிமீன்” என்று அல்லாஹ்வின் கட்டளைப் படி (41:33) நபி(ஸல்) நடைமுறைப்படுத்திக் காட்டிய “ஜமாஅத் அல் முஸ்லிமீன்” என்ற பிளவுபடாத ஒன்றுபட்ட சமூகத்தை நிலைநிறுத்தும் பெயரையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்று பிதற்றும் ததஜ தலைமைப் பூசாரியின் ஆணவமும், அகம்பாவமும் சிந்திப்பவர்களுக்குப் புரியாமலில்லை.

இவ்வாறு கூறி, எழுதி முஸ்லிம் சமுதாயத்தை ஒன்றுபட விடாமல் தடுத்துக்கொண்டிருந்த ததஜ தலைமைப் புரோகிதர் அதன் பின்னர் எத்தனை தனித்தனி இயக்கங்களைத் தோற்றுவித்தார் என நினைத்துப் பாருங்கள். “ஜமாஅத் அல் முஸ்லிமீன்” ஐ விட்டு வெளியேறி முதலில் AQH இயக்கத்தை தோற்றுவித்தார். பின்னர் அதை JAQH-ஜாக் இயக்கமாக மாற்றினார்.

தற்போதைய ஜாக் தலைமைப் புரோகிதர் S.K. பீ.ஜையின் தவறான கூற்றுகளுக்கெல்லாம் தலையாட்டிய காலம் வரை அவரை அமீராக ஏற்று பீ.ஜை நாடகமாடினார். “ஜாக்” நிர்வாகத்தில் பீ.ஜை.யின் போக்கை S.K. மறுக்கத் துணிந்தவுடன், அவர் மீது பொறாமை ஏற்பட்டு, அதைக் கருத்து வேறுபாடு என்றும் S.K. மீது கடும் அவதூறுகள் கூறியும் அதிலிருந்து வெளியேறினார்.

உலகத் தேவைகளுக்கு தமுமுக என்றும் ஆன்மீகத்திற்கு முதலில் முஸ்லிம் முன்னணி, பின்னர் முஸ்லிம் பேரவை பின்னர் ஒருங்கிணைந்த தவ்ஹீத் ஜமாஅத் என்றெல்லாம் விதவிதமாக பல இயக்கங்களை கற்பனை செய்தார். பல பிரிவுகளை

உண்டாக்கினார். 2000-ல் தமுமுக நிர்வாகத் தலைவர்களை ஆகா, ஓகோ என வானளாவப் புகழ்ந்துத் தள்ளியவர்; அவர்கள் இவரது பொய்க் கூற்றுகளுக்குத் தொடர்ந்து உடன் படாத காரணத்தால், அதிலிருந்து வெளியேறி ததஜ என்ற புதிய இயக்கத்தை கற்பனை செய்தார். தமுமுக தலைவர்கள் மீது 2000-ல் வானளாவ புகழ்ந்துரைத்தவர் 2005-க்குப் பிறகு வானளாவ இகழ்ந்துரைக்க ஆரம்பித்துவிட்டார். பீஜையின் சுயநல கருத்துக்களுக்கு ஒத்துழைப்புத் தராதவர்கள்மீது அப்பட்டமான ஜமுக்காளத்தில் வடித்தெடுத்த அவதூறுகளையும், பொய்களை யும் வாரி இறைப்பதில் கின்னஸ் சாதனை படைத்து வருகிறார் பீ.ஜை. இதில் அவரது கைத்தடிகளையும், பக்தர்களையும் தூண்டி விடுவதிலும் கொடிகட்டிப் பறக்கிறார்.

அன்று 1986-ல் ஒன்றுபட்ட ஒரே ஜமாஅத்தாக இருந்தது இன்று 2009-ல் பல்வேறு பிரிவுகளில் சிக்கிச் சீரழிந்து சின்னா பின்னப்பட்டு வருகிறது. இதுவே இயக்கங்களால் சமுதாயத்திற்குப் பெரும் பலவீனமே என்பதை உணர்த்தப் போதுமானதாக இருக்கிறது. மத்ஹபு பிரிவினர் இந்த இயக்கப் பிரிவினர்களைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கின்றனர். காறி முகத்தில் துப்புகின்றனர். இந்த இழி நிலைகளுக்கு குர்ஆன், ஹதீஸ் மட்டுமே மார்க்கம் எனப் பொய்யாக வாயளவில் கூறிக் கொள்ளும் இந்த ததஜ, ஜாக் புரோகித மவ்லவிகள்தான் காரணம் என்பதை அவர்களால் மறுக்க முடியுமா? தங்கள் வழிகெட்ட பிரிவுக் கொள்கையை நிலைநாட்ட பொய் சொல்ல, பொய் சத்தியம் செய்ய, அல்லாஹ் மீது ஆணையிட்டே பொய், அவதூறு பரப்பத் துணிந்தவர்கள் ததஜ, ஜாக் புரோகித மவ்லவிகள். பீ.ஜையின் குர்ஆன் மொழியாக்கத்தின் விரிவுரைப் பகுதியில் 162, 236, 336 எண்களிட்ட தலைப்புகளைப் பாருங்கள். நல்ல நோக்கத்தோடு பொய் சொல்ல, தந்திரங்கள் செய்ய, ஏமாற்ற குர்ஆனே போதிக்கிறது என்று துணிந்து பொய் கூறி இருக்கிறார்.

நாம் 1984-லிலிருந்தே மார்க்கத்தை மதமாக்கி அதையே பிழைப்பாகக் கொண்ட புரோகித மவ்லவிகளை விமர்சித்தே வருகிறோம். 30.10.1984-ல் கிறித்தவ குருத்துவ மடத்தில் நாம் நிகழ்த்திய "மதங்களால் சமூகத்தில் ஏற்பட்ட சாதக பாதகங்கள்" என்ற தலைப்பின் உரை நூலாக வெளிவந்தது. அதைப் பார்ப்ப வர்கள் ஆரம்பத்திலிருந்தே நாம் புரோகித மவ்லவிகளை

விமர்சித்து வருகிறோம் என்பதை அறிய முடியும். ஆனால் அவர்கள் சத்தியத்தை ஏற்றுத் திருந்தலாம் என்ற நம்பிக்கை அன்று நமக்கிருந்தால் அப்போது அடக்கமாக அவர்களை விமர்சித்தோம். அவர்கள் திருந்துவார்கள் என்ற எமது நம்பிக்கைப் பொய்த்து விட்டது.

மேலும் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டிருப்பவர்கள் தங்கள் வயிறுகளில் நரக நெருப்பை நிரப்புகிறார்கள். (2:174) அவர்களது உள்ளங்கள் இறுகி கற்பாறைகள் போல் ஆகி விட்டன. (2:74, 5:13, 6:125) எனவே அவர்கள் புரோகிதத் தொழிலை கைவிடாதவரை நேர்வழிக்கு வரவே மாட்டார்கள். நபி(ஸல்) அவர்களது காலத்திலிருந்த தாருந்நத்வா புரோகித உலமாக்களின் நிலையிலேயே இன்றைய ஜமாஅத் அல் உலமா புரோகிதர்கள் இருக்கிறார்கள் என்ற தெளிவு கிடைத்த பின்னரே, நபி(ஸல்) அவர்கள் தாருந்நத்வா புரோகிதர்களை அடையாளம் காட்டி, அவர்களின் முகத்திரையைக் கிழித்து மக்களை அவர்களின் வசீகர உடும்புப் பிடியிலிருந்து எப்படி விடுவித்தார்களோ, அதே சுன்னத்தைப் பின்பற்றி இன்றைய புரோகித மவ்லவிகளின் தில்லுமுல்லுகளை அடையாளம் காட்டி, அவர்களின் முகத்திரையைக் கிழித்து, அவர்களின் வசீகர, உடும்புப் பிடியில் சிக்கி இருக்கும் மக்களை விடுவிக்கும் பெரும் முயற்சி காரணமாக புரோகித மவ்லவிகளை நாம் இப்போது மிகக் கடுமையாக விமர்சிக்கிறோம்.

இந்த நிலையில் ஜாக் தலைமைப் புரோகிதர் எஸ்.கே. அந்நஜாத் ஆரம்பித்த பின்னர் 1986 ஜூனில் நடந்த கோட்டாறு முனாழரா மேடையிலிருந்து நம்மை வெளியேற்றியதால் அந்த ஆத்திரத்தில் மவ்லவிகளைத் திட்டுவதாக ஜமுக்காளத்தில் வடித்தெடுத்த பொய்யை, அவர்கள்தான் தவ்ஹீதின் முன்னோடி கள் என்று பீற்றி எழுதிய நூலில் வெளியிட்டுள்ளார். நாம் அந்த மேடையில் ஏறவும் இல்லை. வெளியேற்றப்படவும் இல்லை. நிகழ்ச்சிக்கு இரு நாட்கள் இருக்க முனாழராவிற்குரிய ஏற்பாடுகளை அன்று நமது கையில் இருந்த கலாச்சார பள்ளி மாடியில் வைத்து ஆலோசித்து முடிவு செய்துவிட்டு, காயல்பட்டினம் சென்றிருந்த சமயம், மத்ஹபு மவ்லவிகளும், இந்த மவ்லவிகளும் சேர்ந்து திட்டமிட்டு, மவ்லவிகள் மட்டுமே விவாதத்தில் கலந்து கொள்வதாக முடிவு செய்து விட்டார்கள். எனவே விவாத

மேடையில் ஏறவோ, வெளியேற்றப்படவோ வாய்ப்பே இல்லை என்பதே உண்மையாகும்.

அடுத்து இந்த இயக்கங்களின் தலைமைப் புரோகிதர் கள் தவ்ஹீதை தூக்கி நிறுத்தியதே நாங்கள்தான், நாங்கள் மட்டுமே நேர்வழியில் இருக்கிறோம். எங்கள் தலைமையில் ஒன்று சேர்ந்து வெற்றி பெற்று சுவர்க்கம் நுழையுங்கள் என்று அல்லாஹ்வை மறந்து பீற்றிக் கொள்வார்கள். இந்த அவர்களின் பொருளற்ற பீற்றலே அவர்கள் பெரும் வழிகேட்டில் இருப்பதை பல குர்ஆன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. (பார்க்க 4:49, 53:32, 7:178, 6:117, 16:125, 28:56) நாங்கள்தான் நேர்வழியில் இருக்கிறோம். நாங்கள்தான் தவ்ஹீத்வாதிகள் என எவர்கள் பீற்றுகிறார்களோ அவர்கள், உண்மையில் வழிகேட்டில் இருக்கி றார்கள் என்பது குன்றிலிட்ட தீபமாக விளங்குகிறது. இதே நிலையில் மரணித்தால் அவர்களுக்கு நிரந்தர நரகமே என்பதை 2:39,159,160,161,162 இறைவாக்குகளை படித்து விளங்குகிறவர் கள் நிச்சயம் உணர முடியும்.

1985,86களில் இஸ்லாம் அல்லாத இயக்கம் எங்களுக்கு இல்லை; புரோகிதர்களுக்கு மார்க்கத்தில் அனுமதி இல்லை. ஒவ்வொரு முஸ்லிம் ஆணும், பெண்ணும் தங்களின் மார்க்கக் கடமைகளை நேரடியாக குர்ஆன், ஹதீஸ் மட்டுமே கொண்டு விளங்கிச் செயல்பட வேண்டும், நாங்கள் புரோகிதர்களை சப்ளை செய்வதில்லை போன்ற உறுதிப்பாட்டுடன் எம்மோடு இணைந்து செயல்பட்ட இந்த ஜாக், ததஜ புரோகித மவ்லவிகள், அவர் களின் இந்த உறுதிப்பாட்டில் நிலைத்து நின்று, கடந்த 24 வருடங்களாக எம்மோடு இணைந்து செயல்படடிருந்தால், பிளவுபடாமல் ஒன்றாக இணைந்து செயல்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? சிந்தித்துப் பாருங்கள்!

நாம் நம்பிக்கை வைத்து செயல்பட்டதை அல்லாஹ் ஏற்று ஒன்றுபட்ட ஒரே சமுதாயம் உருவாக வழி பிறந்திருக்கும். நான்கு மத்ஹபுகள், பல தரீக்காக்கள் என்ற வழிகேட்டு நிலைகள் மாறி ஒன்றுபட்ட முஸ்லிம் சமுதாயம் ஏற்பட வழி திறந்திருக்கும். ஷைத்தான் இதை விரும்புவானா? ஒருபோதும் விரும்ப மாட்டான். அதனால் இவர்களின் உள்ளங்களில் பொறாமைத்தீயை வளர்த்து அதனாலேயே நம்மைவிட்டு 1987 ஜூனில் வெளியேறச் செய்தான்.

அதன் விளைவு நான்கு மத்ஹபுகள் 4+7=11 மத்ஹபுகள் உருவாகக் காரணமாகிவிட்டது. அதே போல் ஒன்றுபட்டிருந்தால் சுன்னத்வல்ஜமாஅத் பள்ளிகள், அதாவது ஹன.ஃபி பள்ளிகள், ஷா.ஃபி பள்ளிகள், அஹ்லஹதீஸ் பள்ளிகள் என்ற நிலை மாறி 2:114, 72:18-ல் அல்லாஹ் கட்டளையிட்டிருப்பது போல், அனைத்தும் அல்லாஹ்வுடைய பள்ளிகளாக மாற வழி பிறந்திருக்கும். இவர்கள் 1987-ல் ஒன்றுபட்ட ஜமாஅத்தைப் பிளவுபடுத்தி வெளியேறியதன் விளைவு நான்கு ஒன்றாக ஆவதற்கு மாறாக நான்கு (4) பதினொன்று (11) என்றும் ஹன.ஃபி பள்ளி, ஷா.ஃபி பள்ளி, அஹ்ல ஹதீஸ் பள்ளி என அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாக மூன்றாக இருந்தவை, இன்று ஹன.ஃபி பள்ளி, ஷா.ஃபி பள்ளி, அஹ்ல ஹதீஸ் பள்ளி, ஜாக் பள்ளி, தமுமுக பள்ளி, ததஜ பள்ளி, இதஜ பள்ளி என அல்லாஹ்வின் பள்ளிகள் இன்று ஏழு வகை பள்ளிகளாக ஆகிவிட்டன. அல்லாஹ்வின் பள்ளிகள் இன்னும் எத்தனை விதமான பள்ளிகளாகப் பிறப்பெடுக்கப் போகின்றனவோ. இதுதான் இயக்கங்கள் சமுதாயத்திற்கு நல்லது செய்யும் இலட்சணம்.

இயக்கங்களால் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பலன்கள்(?) இவைதான். ஆக அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முரண்பட்ட இந்த இயக்கங்களால் சமுதாயத்திற்கு ஏற்பட்டது பலமா? பாவீனமா? என்பதை பாமரனும் விளங்க முடியும். மத்ஹபுகள் ஏற்படுத்தாத சீர்கேடுகளை, பலவீனத்தை 1987க்குப் பிறகு பிறப்பெடுத்த இந்த இயக்கங்கள் உண்டாக்கிவிட்டன என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த இயக்கப் பிரிவினைவாதிகள் என்ன சொல்லி தங்கள் கட்டுப்பாட்டிலுள்ளவர்களை ஏமாற்றி வருகிறார்கள் தெரியுமா? அல்லாஹ்வே அல்குர்ஆனில் இந்தச் சமுதாயம் பல பிரிவு களாகச் சிதறும் என்று கூறிவிட்டான்; இந்த நிலையில் ஒன்று பட்ட சமுதாயம் எப்படி உருவாக முடியும்? என்று கேட்டு தங்கள் ஆதரவாளர்களை ஏமாற்றி வருகிறார்கள்.

21:92, 23:52-ல் ஒன்றுபட்ட சமுதாயம் என்று கூறிய அல்லாஹ் 21:93, 23:53-ல் பிளவுபட்டவர்கள் நம்மிடமே வருவார்கள், அவர்கள் பிரிந்து மகிழ்ச்சியடைவது நீடிக்காது. நாளை மறுமையில் அதற்குரிய கடும் தண்டனைகளை அனுபவிப்பார்கள்

என்று திட்டமாகச் சொல்கிறான். அதாவது நாளை நரகை அடைகிறவர்கள் சமுதாயத்தைப் பிளவுபடுத்தி வழிகேட்டில் செல்லத்தான் செய்வார்கள். அவர்கள் பல பிரிவுகளில் ஆவார்கள். ஆனால் ஒரே நேர்வழி நடந்து சுவர்க்கம் புகும் அந்த ஒரே பிரிவு எப்படி நடக்க வேண்டும் என்பதே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது.

இவ்வுலகில் வழிகேட்டில் செல்லும் அனைத்து பிரிவினர்கள் பற்றிய தீர்ப்பை அதிகாரம் பெற்ற அல்லாஹ்வே நாளை மறுமைக்கென்று ஒத்தி வைத்துள்ளான். (பார்க்க 2:210, 10:19, 11:110, 19:39, 39:69,75, 41:45, 42:14,21) தீர்ப்பு இவ்வுலகில் இல்லை என்கிறான். நாளை மறுமையிலேயே குற்றவாளிகள் பிரிக்கப்படுவார்கள் என 36:59-ல் அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ்வின் இந்த கட்டளைகளுக்கு முற்றிலும் அடிபணிந்து நபி(ஸல்) அவர்கள், உளப்பூர்வமாக இஸ்லாத்தை ஏற்காமல், நாவளவில் தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொண்டு ஷைத்தான்களாகிய குறைஷ், முஷ்ரிக் காஃபிரகளுடன் சேர்ந்து லாத், மனாத், ஹுபல் சிலைகளை வணங்குவதோடு அவர்களின் அனைத்து வழிகேடுகளையும் இணைந்து செய்து கொண்டிருந்த நயவஞ்சகர்களை, அவர்களது ஷிர்க், பித்அத் செயல்பாடுகளை தங்களின் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தும், அல்லாஹ்வும் அவர்களின் ஈமான் கொள்ளாத நிலை மற்றும் அவர்களது வழிகேடுகள் அனைத்தையும் துல்லியமாக பல இறைவாக்குகளில் அறிவித்திருந்தும் (பார்க்க 2:8-20, 4:81,88,138,139,141,142,143,145, 8:49, 9:73,74,101) அவர்கள் முஸ்லிம்கள் இல்லை என்று தமது உம்மத்தை விட்டு வெளியேற்றவில்லை.

அந்த குஃப்ர், ஷிர்க், பித்அத்களில் மூழ்கி இருந்த நயவஞ்சகர்களும் தங்களை முஸ்லிம்கள் என்றே கூறுகிறார்கள் என்று கூறி நபி(ஸல்) அவர்கள் தமக்கு முஸ்லிம் அல்லாத பிறிதொரு பெயரைச் சூட்டிக் கொள்ளவில்லை. ஈமான் உள்ளத்தில் நுழையாத நாட்டுப் புறத்து அரபிகள் தங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொள்வதை அல்லாஹ் அனுமதித்துள்ளதையும் (49:14) தெளிவாக உணர்ந்து, முஸ்லிம்கள் என்று கூறுபவர்களின் இவ்வுலக செயல்பாடுகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும், ஷிர்க், குஃப்ர், பித்அத்கள் நிறைந்திருந்தாலும் அவர்கள் பற்றிய தீர்ப்பை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட்டு, இவ்வுலகில் அவர்கள் அனைவரையும் முஸ்லிம்களாகவே ஏற்று 21:92, 23:52 அல்லாஹ்வின்

கட்டளைப்படி ஒன்றுபட்ட ஒரே சமுதாயத்தைக் கட்டிக்காத்தார்கள். அதேபோல் இன்றும் முஸ்லிம்கள் ஷிர்க், கு.ஃப்ர், பித்அத்களில் மூழ்கி இருந்தாலும் அவர்களின் இறுதி முடிவை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட்டு, அவர்களை முஸ்லிம்களாக ஏற்று சமுதாய ஒற்றுமையைக் கட்டிக் காப்பதே நம் கடமை.

ஆனால், நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப் படி கட்டிக்காத்த சமுதாய ஒற்றுமை இந்த புரோகித மவ்லவி களுக்கு வேம்பைவிடக் கடுமையாகக் கசக்கும். காரணம் சமுதாயத்தைப் பிளவு படுத்துவதிலேயே அவர்களின் அற்ப உலக ஆதாயங்கள் இருக்கின்றன. உதாரணமாக இன்றைய தர்கா, தரீக்கா சடங்குகளில் ஈடுபடும் முஸ்லிம்களைவிட மிகவும் கேடுகெட்ட, லாத், மனாத், ஹுபைல் சிலைகளையே குறைஷ் ஷைத்தான்களுடன் இணைந்து வணங்கிக் கொண்டிருந்த (பார்க்க 2:8-20) நயவஞ்சகளர்களுக்கு கூட நபி(ஸல்) அவர்கள் கு.ஃப்ர், ஷிர்க், ஃபத்வா கொடுக்கவோ, அல்லது அந்த நயவஞ்சகர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று உதட்டளவில் சொல்லிக் கொண்டதால், முஸ்லிம் அல்லாத ஜாக், ததஜ போன்ற பெயரை தங்களுக்குச் சூட்டிக் கொள்ளவோ நபி(ஸல்) அவர்களே துணியாத நிலையில், இந்த இயக்கப் புரோகிதர்களுக்கு அப்படிப் பட்ட அசட்டுத்துணிச்சல் எதனால் ஏற்பட்டது? அவர்கள் நபிமார்களின் வாரிசாக இருந்தால் இந்த அசட்டுத்துணிச்சல் ஏற்பட்டிருக்குமா? ஒருபோதும் ஏற்பட்டிருக்காது.

அதற்கு மாறாக உலக ஆதாயங்களைக் குறியாக கொண்ட நம்ரூது, ஃபிர்அவ்ன், அபூஜஹீல் மற்றும் தாருந்நத்வா ஜாஹில்களின் வாரிசாக இருக்கப் போய்தான் இவர்களும் அற்ப உலக ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டு சமுதாயத்தை இயக்கங்களைக் கொண்டு பிளவு படுத்துகிறார்கள். அற்ப உலக ஆதாயம் அடைகிறார்கள். உதாரணமாக இவர்கள் முஸ்லிம் களுக்கு கு.ஃப்ர், ஷிர்க் ஃபத்வா கொடுத்து, அவர்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டும் தீய நோக்குடன் ஜாக், ததஜ எனத் தங்களுக்குத் தாங்களே பெயர் சூட்டிக் கொண்டுள்ளனர். அந்த முஸ்லிம்களின் பள்ளியில் அந்த இமாம்களுக்குப் பின்னால் நின்று தொழக் கூடாது என்று ஃபத்வா கொடுக்கின்றனர். அதனால் இந்த இயக்கப் புரோகித மவ்லவிகளை கண்மூடிப் பின்பற்றும் முஸ்லிம்கள் வெகு தொலைவுகளிலிருந்து, தங்கள் மஹல்லா

பள்ளிகளை விட்டு, வரும் வழியில் இருக்கும் பல பள்ளிகளையும் கடந்து இந்த இயக்கப் பள்ளிகளுக்கு வந்து தொழுகிறார்கள். அதனால் ஜும்ஆ தொழுகையில் கூட்டம் நிரம்பி வழிகிறது. ஜும்ஆ வசூலும் அதிகமாகக் கிடைக்கிறது. அதனால் இந்த இயக்கப் புரோகிதர்கள் பெரிதும் மகிழ்கிறார்கள். இக்கூட்டத்தைப் படம் பிடித்துக்காட்டி வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் வசூல் செய்ய முடிகிறது.

அதற்கு மாறாக குர்ஆன், ஹதீஸ் போதனைப்படி, அல்லாஹ்வுக்கு மாறு செய்கிறவர்களை நல்லவர்களிலிருந்து பிரித்து தண்டனை அளிப்பதை நாளைக்கு என்று அல்லாஹ்வே ஒத்தி வைத்திருக்கும் நிலையில், அவனது அடிமைகளாகிய நாம் யாருக்கும் இவ்வுலகில் கு.ஃப்ர், ஷிர்க் ஃபத்வா கொடுப்பதோ, அவர்கள் பின்னால் நின்று தொழுவது கூடாது என்று ஃபத்வா கொடுப்பதோ 42:14, 21, 49:16 இறைக் கட்டளைகள் படி இயக்கப் புரோகிதர்களை கு.ஃப்ரிலும், ஷிர்க்கிலும் மூழ்கச் செய்துவிடும் என்பதை உணர்ந்து இந்த இயக்கப் புரோகிதர்கள் தங்களின் மூடத் தனமான ஃபத்வாக்களை திரும்பப் பெற்றார்கள் என்றால் என்ன நடக்கும் தெரியுமா?

வெகு தொலைவிலிருந்து இவர்களின் பள்ளிக்கு வரும் இவர்களின் ஆதரவாளர்கள் தங்கள், தங்கள் மஹல்லா பள்ளிகளிலேயே தொழ ஆரம்பித்து விடுவார்கள். இவர்களின் இயக்கப் பள்ளிகளைச் சுற்றியுள்ள இவர்களின் ஆதரவாளர்கள் மட்டுமே இயக்கப் பள்ளிக்கு வருவார்கள். முகல்லிது புரோகித மவ்லவிகளும் இவர்களை நஜாத்காரர்கள், வஹ்ஹாபிகள், வழிகேடர்கள் என்று அவர்களின் ஆதரவாளர்களைப் பயமுறுத்தி வைத்திருப்பதால், இயக்கப் பள்ளிகளைச் சுற்றியுள்ள அப்படிப்பட்ட முஸ்லிம்களும் இவர்களின் பள்ளிக்கு வரமாட்டார்கள். அவர்களது இயக்கப் பள்ளிகள் நிறைந்து வழிந்ததும், ஜும்ஆ வசூல் நிறைந்ததும் மாறி, ஓரிரு ஸ.ஃப்புகள் கூட தேறாது. பண வசூலும் குறைந்து விடும். வெளிநாடுகளில் வசூலும் குறைந்து விடும்.

எனவே உலக ஆதாயங்களையே குறிக்கோளாகக் கொண்ட அபூ ஜஹ்லின் வாரிசுகளான இந்த இயக்கப் புரோகிதர்கள் அதற்கு முன் வருவார்களா? ஒருபோதும் முன்வரவே மாட்டார்கள். மூடத்தனமான வார்த்தை ஜாலங்களைக் கொண்டு

தங்களின் ஆதரவாளர்களை தக்க வைத்துக் கொள்வதிலேயே குறியாக இருப்பார்கள். இந்த எமது முடிவு மிகமிகச் சரியானதே என்பதை அல்ஜன்னத் செப்டம்பர் 2008 மாத இதழ் 14-ம் பக்கம் காணப்படும், நாங்க ரெடி, அவங்க ரெடியா? என்று ஜாக், நிர்வாகிகள் வெளியிட்டுள்ள அறிவிப்பும், பக்கம் 44-ல் ரூ10,000 பத்தாயிரம் ஊக்கத்தொகை போட்டியில் பங்கு கொள்ளும் மாணவனின் தந்தை ஜாக்கில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற இயக்க வெறி அறிவிப்பும், பக்கம் 25-ல் காணப்படும,

குறுக்கு விசாரணைக்குரிய தடுமாற்ற பதிலும், பக்கம் 33-ல் காணப்படும் ஜாக் கிளைகளின் நிர்வாகிகள் கவனத்திற்கு என்ற தலைப்பில் காணப்படும் ஏழு சுயநல நிபந்தனைகளும், கடைசி 48-ம் பக்க குழப்பங்கள் நிறைந்த மனம் திறந்த மடலும், அவர்களுக்கு அவர்களது ஜாக் வழிகேட்டு இயக்கம் ஒன்றுபட்ட முஸ்லிம் சமுதாயத்தை விட அதிமுக்கியம் என்பதை உணர்த்தப் போதுமானவையாக இருக்கின்றன.

1987லேயே எங்களுக்கு இஸ்லாத்தை விட இயக்கமே முக்கியம் என்று கூறியவர்களின் இயக்க வெறி 2009-ல் எந்த அளவு முற்றி இருக்கும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

அற்ப இவ்வுலக ஆதாய நோக்குடன் சமுதாயத்தைப் பிளவுபடுத்தி இயக்கங்களைக் காண்பவர்கள், தங்களின் இயக்க நலனுக்காக சமுதாய நலனை பலி கொடுக்கத் தயங்கமாட்டார் கள். தங்களதும், தங்களது இயக்கத்தினரதும் நலனுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம்களின் நலனை பலி கொடுக்கத் தயங்கமாட்டார்கள். அவர்களின் இந்த சுயநல எண்ணம் காரணமாக ஒரு இயக்கம் பல இயக்கங்களாகப் பிரிந்து சமுதாயம் மேலும் மேலும் சீரழியும் என்பதற்கு அவர்களின் ஆக், ஜாக், தமுமுக, முஸ்லிம் முன்னணி, முஸ்லிம் பேரவை, ஒருங்கி ணைந்த தவ்ஹீத் ஜமாஅத், ததஜ, இதஜ போன்ற இயக்கப் பிரிவுகளே போதிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

மத்ஹபு பிரிவுகளைவிட இயக்கப் பிரிவுகள் கேடுகெட்டவை, முஸ்லிம் சமுதாயத்தை மேலும் மேலும் பிரித்துச் சீரழிப்பவை என்று சொல்லலாம். மத்ஹபுகள் 1000 ஆண்டுகளாக நான்கிற்குள் கட்டுப்பட்டுச் செயல்படும் நிலையில், இயக்கங்கள் 20 ஆண்டு

களுக்குள் ஏழு பிரிவுகளாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் மிகக் கடுமையாகத் தாக்கிக் கொள்வதும், அவதூறுகள் பரப்புவதும் இதற்குப் போதிய சான்றாகும். மத்ஹபு பிரிவினர் இப்படி அடித்துக் கொண்டு சாகிறார்களா? அவதூறுகள் பரப்புகிறார்களா? இல்லையே!

மேலும் மத்ஹபு பிரிவினரைவிட கேடுகெட்ட முகல்லிது களாக இயக்கப் பிரிவினர் இருக்கிறார்கள். மத்ஹபு பிரிவினர் 1000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த அறிஞர்களின் குர்ஆன், ஹதீஸுக்கு முரண்பட்ட சுய கருத்துக்களை இஜ்மா, கியாஸ் என்ற பெயரால் தக்லீது செய்கின்றனர். ஆனால் இயக்கப் பிரிவினர்களோ எஸ்.கே., பீ.ஜை. போன்ற இன்றைய மவ்லவி களின் குர்ஆன், ஹதீஸுக்கு முரண்பட்ட சுய கருத்துக்களை லாஜிக், பாலிசி என்ற பெயரால் தக்லீது செய்கின்றனர். இரு சாராரும் முகல்லிதுகளே. 2:38, 7:3, 33:36,66,67,68, 59:7 மற்றும் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் மட்டுமே வழிபட, வழிப்பட வேண்டும் என்று கட்டளையிடும் எண்ணற்ற குர்ஆன் வசனங்களை நிராகரித்து, புறக்கணித்து முதுகுக்குப் பின்னால் போட்டுவிடுவதால் 2:39, 33:66,67,68 இறைவாக்குகள் எச்சரிக்கும் கடும் விளைவுகளை நாளை மறுமையில் சந்திக்க இருக்கிறார்கள். ஆயினும் இவ்வுல கில் அவர்களையும் முஸ்லிமாக ஏற்று அரவணைத்துச் செல்ல நேர்வழி நடக்கும் முஸ்லிம்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

ஆம்! இயக்கங்களால் சமுதாயத்திற்கு மேலும், மேலும் சீரழிவுகளும், பலவீனங்களும் ஏற்படுமே அல்லாது இந்த இயக்கங்களால் சமுதாயத்திற்கு ஒருபோதும் முன்னேற்றமோ, பலமோ ஏற்படப் போவதில்லை. அறிவிலியாகப் படைக்கப் பட்டுள்ள மனிதத் திட்டம் ஒருபோதும் மனிதனை வாழ வைக்காது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எவ்வித சுய விளக்கமும் கொடுக்காமல், உள்ளது உள்ளபடி அப்படியே எடுத்து நடப்பதே மனித வெற்றிக்கு வழிவகுக்கும். எனவே முஸ்லிம்களே அல்குர்ஆனைப் பற்றிப் பிடித்து ஒன்றுபடுவதற்கு, 21:92, 23:52 இறைக் கட்டளைப்படி இவ்வுலகில் ஒன்றுபட்ட சமுதாயம் அமைய அயராது உழைப்போம். அல்லாஹ் சமுதாய ஒற்றுமைக்கு அருள்புரிய வேண்டி அனைவரும் துஆ செய்வோம்.

# சர்வதேச தலைப்பிறை!

முதலில், இஸ்லாமிய நடைமுறையில் சந்திரன், பிறை இந்த இரண்டும் ஒன்றுதான் என்று மக்களின் எண்ணத்திற்கு மாறாக, சந்திரன் பூமியைச் சுற்றி வரும் ஒரு துணை கோளாக வும் அவ்வாறு அது சுற்றி வரும்போது அதன் ஒளி வளர்ந்து தேய்ந்து வருவதை பிறை என்றும் கொள்ள வேண்டும். இதைத் தான் அல்லாஹ் 36:39 இவ்வாறு கூறுகிறான்.

**இன்னும் (உலர்ந்து வளைந்த) பழைய பேரீத்த மட்டையைப் போலாகும் வரையில் சந்திரனுக்கு நாம் பல மன்ஸில்களை (தங்குமிடங்களை) ஏற்படுத்தி இருக்கிறோம்.** (யாஸீன் 36:39)

இப்படி சந்திரன் வளர்ந்து தேய்வதற்கு 29 அல்லது 30 நாட்களை எடுக்கிறது. சந்திர மாதம் துல்லியமாக 29.53059... என்றிருக்க 29 அல்லது 30 என்று கணக்கிடுவது ஆங்கில தேதி, இதர தேதிகள், மற்றும் கிழமை ஒரு நாள் முழுமையாக 24 மணி நேரம் இருப்பதுபோல், முஸ்லிம்கள் கணக்கிடும் பிறை - ஒரு நாள் முழுமையாக 24 மணி நேரம் இருக்க வேண்டும் என்பதாலேயே! . அப்படியானால் தலைப்பிறை என்பது மாதத்தின் முதல் நாளையும், அப்படியே ஒவ்வொரு மன்ஸிலும் (தங்குமிடம்) ஒரு முழு நாளைக் குறிப்பிடுகிறது என்பதை விளங்க முடியும். ஒரு முழு நாள் எனும்போது அதில் 24 மணி நேரம் மட்டுமே இருக்க முடியும். கிறித்தவ தேதி ஒரு முழுநாள் 24 மணி நேரம் இருப்பதுபோல், வாரத்தின் ஏழு கிழமைகளில் ஒரு கிழமை ஒரு முழு நாள் 24 மணி நேரம் இருப்பதுபோல், முஸ்லிம்களின் தேதியான பிறை, தலைப்பிறை முதற்கொண்டு ஒரு முழு நாள் 24 மணி நேரம் மட்டுமே இருக்க முடியும்.

அந்த அடிப்படையிலேயே முஸ்லிம்கள் உலகம் முழுவதும் ஒரு முழு நாளான வெள்ளிக்கிழமை 24 மணிக்குள் ஜும்ஆ தொழுகையை தொழுது முடித்து விடுகிறார்கள். ஜும்ஆ தொழுகை வியாழன், வெள்ளி என இரு நாள் 48 மணியோ, வியாழன், வெள்ளி, சனி என மூன்று நாள் 72 மணியோ ஒரு போதும் ஆவதில்லை. அப்படியானால் ஒரே நாளில் நடந்து முடிய வேண்டிய பெருநாள் தொழுகைகள் மட்டும் எப்படி இரண்டு

நாளோ, மூன்று நாளோ இடம் பெறுகிறது என்பதை முஸ்லிம்கள் புரோகிதர்களைப் புறம் தள்ளி சுயமாக சிந்தித்து விளங்கினால் அவர்களாலும் உண்மையைக் கண்டறிய முடியும்.

ரமழான் ஆரம்பம், இரண்டு பெருநாள்கள், இரண்டு நாள் மூன்று நாள் வரலாம், வர முடியும் என்பது புரோகிதர்களின் வாதம். இதற்கு எதை ஆதாரமாக வைக்கிறார்கள் என்றால் தலைப்பிறையை அந்தந்த பகுதி மக்கள் தங்களின் புறக் கண்ணால் பார்த்தே தீர்மானிக்க வேண்டும். இதுவே நபி(ஸல்) அவர்களின் கட்டளை என்கிறார்கள். நேரடியாகச் சொன்னால் சந்திரனின் சுழற்சி மனிதர்களின் கண்ணின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. சந்திரனின் ரீமோட் கண்ட்ரோல் மனிதக் கண்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறி இருப்பதாக மிகக் கொடுமையான ஒரு பழியை நபி(ஸல்) அவர்கள் மீது சுமத்துகிறார்கள்.

6:96, 7:54, 10:5, 13:2, 14:33, 16:12, 21:33, 29:61, 31:29, 35:13, 36:40, 39:5, 55:5, இந்த13 இறைவாக்குகளை நேரடியாகப் படித்து உணர்கிறவர்கள் சூரியனும், சந்திரனும் அல்லாஹ்வின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அவற்றை அவனே வசப் படுத்தி வைத்துள்ளான். மனிதர்களின் கண்ணின் கட்டுப்பாட்டில் சந்திரன் இல்லை. இது நபி(ஸல்) அவர்கள் மீது இந்தப் புரோகித மவ்லவிகள் ஏற்படுத்தும் மிகவும் பயங்கரமான படு அவதூறாகும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

**........இன்னும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங் களையும் தன் கட்டளைக்கு-ஆட்சிக்குக் கீழ்ப்படிந்தவை யாக (படைத்தான்) படைப்பும், ஆட்சியும் அவனுக்கே சொந்தமல்லவா?...** (அல்அ.்.ரா.்.ப் 7:54)

**....சூரியனையும், சந்திரனையும் தன் அதிகாரத்திற்குள் வைத்திருக்கிறான். இவை அனைத்தும் குறிப்பிட்டக் காலக் கணக்கின் படியே சுழன்று வருகின்றன....** (அல்.்.பாத்திர 35:13)

இவ்வளவு தெளிவாக, நேரடியாக அல்லாஹ் பல இடங்களில் கூறியிருக்க, அல்லாஹ்வின் இந்த நேரடிக் கட்டளைகளை நபி(ஸல்) அவர்கள் புறக்கணித்துவிட்டு, மனிதனின் கண் பார்வையின் கட்டுப்பாட்டில் சந்திரன் இருக்கிறது; அதனால் பிறை புறக்கண்ணின் பார்வையில் பட்டால்தான் அது தலைப்பிறை

என்று நபி(ஸல்) அவர்கள் கூறி இருப்பதாக இந்த புரோகித மவ்லவிகள் படுபயங்கரமான பொய்யை கூறி வருகிறார்கள் என்றால், அவர் எந்த அளவு ஷைத்தானுக்கு அடிமைப்பட்டு அவனது நேரடி ஏஜண்டாகச் செயல்பட்டு, மக்களை நரகில் தள்ளுவார்கள் என்பதை இந்த இறைவாக்குகள் அனைத்தையும் படித்து உணர்கிறவர்கள் நிச்சயமாக அறிந்து கொள்ள முடியும்.

அவர்கள், பொதுவாகப் பார்த்து, கண்டு என்று கூறும் ஹதீஸ்களை எடுத்துக் காட்டாமல், புறக்கண்ணால், அதாவது மண்டைக் கண்ணால் பார்த்தே தலைப் பிறையைத் தீர்மானிக்க வேண்டும் என்று கூறும் ஒரேயொரு ஹதீஸை எடுத்துக் காட்டி அவர்கள் உண்மையாளர்கள் என்று நிலை நாட்டட்டும். கடந்த 10 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களால் அப்படியொரு ஹதீஸை காட்ட முடியவில்லை. அதுவே இப்புரோகித மவ்லவிகள் அண்டப் புளுகர்கள், ஆகாசப் பொய்யர்கள், அவதூறு பேர்வழிகள், தங்களின் அற்ப உலக ஆதாயங்களுக்காக முஸ்லிம் சமுதாயத்தைப் பலியிட்டு நரகில் தள்ளும் கொடும்பாவிகள், சமுதாய துரோகிகள் என்பதை நிலைநாட்டப் போதுமானதாக இருக்கிறது.

பிறை விஷயமாக ஹதீஸ்களில் வந்திருக்கும். ரு.ஃயத், ரஅய்த்து, அரா, தரா போன்ற அரபி பதங்கள் பொதுவாக பார்த்து, கண்டு, கவனித்து, ஆய்ந்து பார்த்து போன்ற பொருள்களையே தருவன. அரபி அகராதியும் இப்படியே கூறுகின்றது. இதற்கெல்லாம் மேலாக அல்குர்ஆனில் பல திரிபுகளில் இப்பதம் சுமார் 300க்கும் மேலாக இடம் பெற்றிருக்கிறது. உதாரணமாக 2:243,246,258, 3:23, 4:44,49, 51,60,77, 14:19, 24,28, 19:83, 22:18, 22:63, 65, 24:41, 43, 25:45, 26:225, 31:29,31, 35:27, 37:102, 39:21, 40:69, 58:7,8,14, 59:11, 89:6, 105:1 இந்த இறைவாக்குகளை நேரடியாகப் படித்துப் பார்த்து நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

**பின்(அம்மகன்) அவருடன் நடமாடக் கூடிய (வயதை அடைந்த)போது அவர் கூறினார்: என்னருமை மகனே! நான் உன்னை அறுத்துப் பலியிடுவதாக நிச்சயமாகக் கனவு கண்டேன்(அரா). இதைப் பற்றி உம் கருத்து (தரா) என்ன என்பதைச் சிந்திப்பீராக.** (அஸ்ஸா.ஃப்.ஃபாத் 37:102)

பிறை சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்தையும் முறையாக ஆய்வு செய்வீர்களானால், அவற்றில் பொதுவாக பார்த்து, கண்டு என்று வரும் பதங்கள் கண்ணால் கண்டு-பார்த்து, தகவலால் கண்டு-பார்த்து, ஆய்வால் கண்டு-பார்த்து, கணிப்பால் கண்டு-பார்த்து, கணக்கீட்டால் கண்டு-பார்த்து, கணினியை கண்டு-பார்த்து என்று இடத்திற்கேற்றவாறு பொருள் கொள்ளும் வாய்ப்புள்ள நிலையில் இருப்பதை நடுநிலையாளர் கள் உணர முடியும்.

அப்படியானால் இந்தப் புரோகித மவ்லவிகள் இதில் ஏன் இப்படி வீண் பிடிவாதம் பிடிக்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? அங்குதான் இரகசியமே இருக்கிறது. அவர்கள் குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் முற்றிலும் முரணாக மார்க்கத்தை மதமாக்கி ஹராமான வழியில் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்து வரும் இந்த முறை தவறிய செயலை நன்கு அறிந்த நிலையில்தான் செய்து வருகிறார்கள் என்பதை அல்லாஹ் அல்குர்ஆன் 2:75, 146, 6:20-ல் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறான். எனவே அவர்களின் உள் மனம் அவர்களை எச்சரித்துக் கொண்டே இருக்கிறது. அதாவது தங்களின் தில்லுமுல்லுகள் அம்பலப்பட்டுப் போய் விடுமோ என அஞ்சுகிறார்கள்.

அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாமாக-சொல்லாக இருப்பது போல், நிரூபிக்கப்பட்ட விஞ்ஞானம் அல்லாஹ்வின் ஃபிஅல்-செயலாக இருக்கிறது. எனவே அல்குர்ஆனை பொது மக்களிடமிருந்து மறைத்து வைத்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் தீய செயல் விஞ்ஞானம் மூலம் வெளிப்பட்டு விடுமோ என அஞ்சிக் கொண்டே இருக்கிறார்கள். அதனால்தான் விஞ்ஞான கண்டு பிடிப்புகள் வெளிவரும் போதெல்லாம் அஞ்சி குலை நடுங்குகிறார்கள். அக்கண்டுபிடிப்புகளைக் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள்.

நேரம் அறிய கடிகாரம் கண்டுபிடிப்பதற்கு முன்னர் முஸ்லிம்கள் சூரியனின் சுழற்சியைப் பார்த்தே ஐங்கால தொழுகையின் நேரத்தை முடிவு செய்து தொழுது வந்தனர். நேரம் அறியும் கருவியான கடிகாரம் கண்டுபிடித்தவுடன் சூரியனின் சுழற்சியைப் பார்க்காமல், கடிகாரம் மூலம் நேரத்தை அறிந்து தொழ ஆரம்பிக்கும் போதும் இப்படித்தான் வானத்திற்கும் பூமிக்கும்

குதித்தார்கள். நபி(ஸல்) அவர்கள் சூரியனின் சுழற்சியைப் புறக் கண்ணால் பார்த்தே நேரத்தை அறிந்து தொழுதார்கள். என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அப்படியே தொழுங்கள் என்று கட்டளையும் இட்டிருக்கிறார்கள். எனவே கடிகாரத்தைப் பார்த்து அதன்படி தொழுவது ஹராம் என்றுதான் அன்று ∴பத்வா கொடுக்கும் நிலையில் இருந்திருப்பார்கள். காலமே அவர்களை மாற்றி இன்று ஒவ்வொரு பள்ளியிலும் தொழுகை நேர அட்டவணை மாட்டி இருக்கிறார்கள்.

இந்த எமது கூற்றை உண்மைப் படுத்தும் வகையில் இப்புரோகிதர்களின் சமீப கால ∴பத்வாக்கள் இருந்திருப்பதை நீங்களும் அறிந்திருக்கிறீர்கள். புதிதாக மின்சாரம் கண்டுபிடித்த போது, அது பயன்படுத்தப்படுவதைத் தடுத்தார்கள். புதிதாக ஒலிபெருக்கி கண்டுபிடித்தபோது அதில் பாங்கு சொல்வதைத் தடுத்தார்கள். புதிதாக தொலைபேசி கண்டுபிடித்தபோது அதில் ஷைத்தான் பேசுகிறான். அந்த தகவலை ஏற்க முடியாது என்றார்கள். இப்படி ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்பின்போதும் அது எங்கே தங்களின் ஹராமான புரோகிதத் தொழிலுக்கு வேட்டு வைத்து விடுமோ என்ற அச்சத்தில் நடுங்கி, நிரூபிக்கப் பட்ட புதிய விஞ்ஞான உண்மைகளைக் கடுமையாக எதிர்ப்பதே புரோகிதர்களின் கொள்கையாக இருக்கிறது. அதே வரிசையில் தான் நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மையான தலைப்பிறையை யும் கண்ணால் பார்த்தே தீர்மானிக்க வேண்டும் என விதண்டா வாதம் செய்கின்றனர்.

இதோ ததஜ தலைமைப் புரோகிதர் கூறுகிறார் படித்துப் பாருங்கள்.

இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். வானியல் கணிப்பை ஏற்று, முதல் பிறையைத் தீர்மானிக்கக் கூடாது என்றால் அதன் பொருளையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். வானியல் நிபுணர்களால் கணிக்கவே முடியாது என்று நாம் வாதிடுவதாகக் கருதக் கூடாது.

பல நூறு வருடங்களுக்குப் பின்னால் சென்னையில் தோன்றக் கூடிய சந்திர கிரகணத்தை இன்றைக்கே அவர்களால் கணித்துச் சொல்ல முடியும். எத்தனை மணி, எத்தனை

நிமிடத்தில் தோன்றும் என்று கணிக்கிறார்களோ அதில் எந்த மாற்றமுமின்றி அது நடந்தேறும். அந்த அளவு வானியல் வளர்ந்துவிட்டது என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம்.

இன்று இந்தப் பகுதியில் பிறை தென்படும் வகையில் இருக்கும் என்று கணித்துக் கூறினால் அந்தப் பகுதியினர் காணும் வகையில் ஆகாயத்தில் நிச்சயம் இருக்கும். ஏனெனில் அந்த அளவுக்குத் துல்லியமாகக் கணிக்க இயலும். மேகம் மற்றும் புறக் காரணங்களால் நமது பார்வைக்குத் தெரியாமல் போகவும் கூடும்.

அவர்களது கணிப்பு சரியானது தான் என்பதை ஏற்றுக் கொள்ளும் அதே சமயத்தில் தலைப்பிறையைத் தீர்மானிக்க அதை அளவுகோலாகக் கொள்ளக் கூடாது என்பதுதான் நமது வாதம். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் மாதத்தின் முதல் தினத்தைத் தீர்மானிப்பதற்குக் கண்ணால் பார்க்க வேண்டும் என்று வரையறுத்துவிட்டனர்.

(ஏகத்துவம் ஏப்ரல் 2009 பக்.31,32)

ததஜ தலைமைப் பூசாரி சொல்வதைக் கவனித்தீர்களா? அறிவியல் கண்டு பிடிப்பை இன்றைய காலத்தில் அவரால் மறுக்க முடியாது. காரணம் அது துல்லியமாக இருப்பதால், அதை மறுத்தால் அவரது ஆதரவாளர்களே அவரை நிராகரித்து விடுவார்கள். அதற்கு மாறாக நபி(ஸல்) அவர்கள் தலைப்பிறை யைப் புறக்கண்ணால் பார்க்க வேண்டும் என்று கட்டளையிட்டி ருக்கிறார்கள் என்று அவர் கூறும்போது அதன் உண்மை நிலையை அறியும் ஆற்றல் அவரது பக்தர்களுக்கு இல்லை. அதனால் துணிந்து நபி(ஸல்) அவர்கள் பெயராலேயே இட்டுக் கட்டிப் பொய் கூறுகிறார். நபி(ஸல்) அவர்கள் பெயரால் வேண்டுமென்று இட்டுக்கட்டிப் பொய் கூறுகிறவர்கள் தங்களுடைய இருப்பிடத்தை நரகில் தேடிக்கொள்ளட்டும் என்ற பல நபிதோழர்கள் அறிவிக்கும் மிகமிக ஆதாரபூர்வமான ஹதீஸ் அவரது உள்ளத்தைத் தொடாது. காரணம் ஹராமான புரோகிதத் தொழில் மூலம் அதுவும், நான் கூலி வாங்கவில்லை என்று பொய் கூறி கூலி வாங்கிச் சாப்பிடுவதால் 2:74, 5:13, 6:125 இறை வாக்குகளில் கூறி இருப்பது. போல், அவரது உள்ளம் சுருங்கி இறுகி கற்பாறை போல் ஆகிவிட்டது.

அதனால்தான் தனது அந்தஸ்து நபி(ஸல்) அவர்கள், கலீ∴பாக்கள், நபி தோழர்கள், தாபியீன்கள், தபவுதாபியீன்கள் அனைவரது அந்தஸ்துகளை விட உயர்வானது என நினைக்கிறார். அந்த மேல் எண்ணத்தில் தான் அவர்கள் அனைவரது கருத்துக்களும் மார்க்கம் ஆகாது; ஆனால் தனது சுய கருத்து மார்க்கம் ஆகும் என பீற்றிக் கொண்டு, தனது குர்ஆன் மொழியாக்கம், மற்றும் விரிவுரையின் பெரும் பகுதிகளில் தனது சுய கருத்தைக் கொண்டு நிரப்பி இருக்கிறார்.

அல்குர்ஆன் 3:7 இறைவாக்கில் இரண்டு வகை வசனங்கள் உண்டு. அல்குர்ஆனின் அடிப்படையான எடுத்துச் செயல்படுத்த வேண்டிய முஹ்க்கமாத் வசனங்கள் குறிப்பாக ஒரே பொருளைத் தருபவை. அவற்றில் இரண்டாவது கருத்துக்கு இடமே இல்லை. அதற்கு மாறாக முத்தஷாபிஹாத் வசனங்கள் ஒன்றுக்கு மேல் பொருள் தருபவை. உள்ளத்தில் நோய் ஏற்பட்டு வழிகேட்டில் செல்பவர்களே அந்த பல பொருள் தரும் வசனங்களை முஹ்க்கமாத் வசனங்களாக்கி அதாவது முத்தஷாபிஹாத் வசனங்களை முஹ்க்கமாத் வசனங்களாக - முடிவான பொருள் தரும் வசனங்களாக்கி அவற்றைப் பின்பற்றி அல்லாஹ்வின் அதிகாரத்தில் தலையிடுவார்கள் என்று தெள்ளத் தெளிவாகக் கூறி இருக்கும் நிலையில்,

ததஜ தலைமைப் புரோகிதர் இந்த 3:7-ல் காணப்படும் த∴வீலுக்கு முடிவு என்ற பொருளைத்தராமல் விளக்கம் என்ற பொருளைத் தந்து, சர்வ வல்லமை மிக்க முக்காலமும் அறிந்த அல்லாஹ்வை மனிதனைப் போல் விளங்கும் கீழ் நிலைக்கு இறக்குகிறார். அதற்கு மாறாக தன்னை அறிவில் சிறந்தவராக அவரே சுயமாக கற்பனை செய்து கொண்டு, அறிவில் சிறந்தவர்களை அல்லாஹ்வின் நிலைக்கு உயர்த்தி, அல்லாஹ்வும், அறிவில் சிறந்தவர்களும் முத்தஷாபிஹாத் வசனங்களை விளங்குவார்கள் என ஆணவத்துடன் மொழி பெயர்த்துள்ளார். (அவரது குர்ஆன் மொழி யாக்கத்தில் 3:7 வசனத்தைப் பார்க்கவும்)

அதே போல் 2:102-ல் இரண்டு மலக்குகள் ஹாரூத், மாரூத் என்று அல்லாஹ் நேரடியாக, தெளிவாகக் கூறி இருக்கும் நிலையில், அந்த இரண்டு மலக்குகளையும் ஷைத்தான்கள்

என மொழிபெயர்த்து 42:21, 49:16-ல் அல்லாஹ்வின் கட்டளை களைப் புறக்கணித்து, நிராகரித்து, முதுகுக்குப் பின்னால் போட்டுவிட்டு, அல்லாஹ் விதிக்காக பல சட்டங்களை விதித்து அல்லாஹ்வுக்கு இணையாளர் ஆகி இருக்கிறார். அல்லாஹ்வுக்கே மார்க்கம் கற்றுக்கொடுக்கிறார். “அனரப்புக்குமுல் அ.்.லா” நானே ரப்புகளுக்கெல்லாம் மேலான ரப்பு என்று ஆணவத்துடன் பீற்றிய ்.பிர்அவ்னின் வாரிசாக முற்பட்டுள்ளார் ததஜ தலைமைப் பூசாரி.

அல்லாஹ் 20:118-ல் நேரடியாக “நிச்சயமாக நீர் இதில் பசியாகவோ நிர்வாணமாகவோ இருக்க மாட்டீர் என்று கூறி இருப்பதை, தனது குர்ஆன் மொழியாக்கத்தில் மிகச் சரியாக இங்கே உமக்குப் பசிக்காது; நிர்வாணமாக மாட்டீர் என்று எழுதி இருக்கும் நிலையில், 29.3.09 தொண்டி விவாதத்தில், தான் விவாதத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற ஷைத்தானிய குறுகிய எண்ணத்தில், ஆதம்(அலை) அவர்களும் அவரது மனைவியும், தடுக்கப்பட்ட மரத்தை நெருங்கும் வரை பாலுணர்வோ, இனக் கவர்ச்சியோ இல்லாமலும், மானத்தை மறைக்கும் ஆடை இல்லாமலும் நிர்வாணமாகவே இருந்தார்கள் என பிடிவாதமாக வாதிட்டார். அப்போது இந்த 20:118 வசனம் ஓதிக்காட்டப்பட்ட போது அது தக்வாவுடைய ஆடை என மனமுரணாக வாதிட்டார்.

அதே போல் 2:30-ல் நான் பூமியில் (எனது) பிரதிநிதியைப் படைக்கப் போகிறேன் என்று தெளிவாக சொல்லியிருக்கும் நிலையில், அதற்கு ஆதாரமாக கலீ.்.பத்துல்லாஹ் அல்லாஹ்வின் பிரதிநிதி என்று ஹதீஸ்கள் இருக்கும்போது, ஒருவர் செத்தால் தான் அவருக்கு பிரதிநிதி ஏற்பட முடியும்: அல்லாஹ் சாவதில்லை. எனவே அவனுக்கு பிரதிநிதி இருக்க முடியாது என இவரே மூடத்தனமாகக் கற்பனை செய்து கொண்டு, இவரது மொழியாக்கத்தில் பூமியில் நான் ஒரு தலைமுறையைப் படைக்கப் போகிறேன் என்று அறிவீனமாக மொழிபெயர்த்துள்ளார்.

நமது நாடு சுதந்திரமடைய முன், இங்கிலாந்து அரசர் உயிரோடு இருக்கும் நிலையிலேயே அவருடைய பிரதிநிதி நமது நாட்டை ஆண்டதையும், இன்றும் பலர் உயிரோடிருக்கும் நிலையிலேயே, தங்களின் சொத்துக்களை நிர்வகிக்க பிரதி நிதிகளை ஏற்படுத்திக் கொள்வதையும் அறியாத பெரும் மூடராக இருக்கிறார் ததஜ தலைப் புரோகிதர்.

இப்படி அவரது அறிவீனத்தை அடுக்கிக் கொண்டே போகலாம். இப்படிப்பட்டவர்தான், தலைப்பிறையைக் கண்ணால் பார்த்தே தீர்மானிக்க வேண்டும் என்று நபி(ஸல்) கட்டளையிட் டுள்ளபடி, புறக் கண்ணால் பார்த்தே தீர்மானிக்க வேண்டும். அறிவியல் கணக்கீடு மாதம் பிறந்துவிட்டதைத் துல்லியமாகக் கூறினாலும் அது 100% சரியாக இருந்தாலும் அதை ஏற்கக் கூடாது, என புத்தி பேதலித்து உளறுகிறார். குடிகாரனின் உளறலை எப்படி ஆதாரமாக எடுக்க முடியாதோ அதே போல் ததஜ தலைமைப் பூசாரியின் உளறலையும் ஏற்க முடியாது.

பிறையைப் புறக்க கண்ணால் பார்த்தே தீர்மானிக்க வேண்டும் என்ற இவர்களின் பொருளற்ற உளறலுக்கு ஒரேயொரு ஹதீஸ் ஆதாரமும் இல்லாத நிலையில், இவர்கள் எவற்றை ஆதாரங்களாகத் தருகிறார்கள் தெரியுமா? 1430 ஆண்டுகளுக்கு முன்னர் அறிவியல் முன்னேற்றம் அறவே இல்லாத காலத்தில் அன்று நிர்பந்த நிலையில் கடைபிடிக்கப்பட்டவைகளையே ஆதாரமாகத் தருகிறார்கள்.

இப்புரோகிதர்களின் தில்லுமுல்லுகளை சிறிது சிந்தித்தாலும் விளங்க முடியும். மார்க்கக் கடமைகளின் சட்டதிட்டங்கள் கடந்த 1430 ஆண்டுகளாக மாற்றமில்லாமல் ஒன்றாகவே இருக்க முடியும். ஒன்றை நிலைநாட்ட ஒரு குர்ஆன் வசனத்தையோ, ஒரு ஹதீஸையோ கொடுத்தால் அதையே மீண்டும் மீண்டும் கொடுக்க முடியும். புதிய, புதிய ஆதாரங்ளைத் தர முடியாது. ஆனால் அதற்கு மாறாக இப்புரோகித மவ்லவிகள் காலத்திற்குக் காலம் வெவ்வேறு குர்ஆன் வசனங்களையோ, ஹதீஸையோ தந்து அதற்கு தங்களின் சுயவிளக்கத்தைத் தந்து தங்களின் வழிகெட்டக் கொள்கையை நிலைநாட்ட முற்படுவர்.

உதாரணமாக இந்த தலைப்பிறை விஷயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். வாகனக் கூட்டத்தார் பற்றிய ஹதீஸை திரித்து, வளைத்து எடுத்து வைத்து மூக்கறுபட்டபின் பல்ட்டி அடித்து ருஃயத், ரஅய்த்து, அரா, தரா போன்ற பதங்கள் புறக்கண்ணால் பார்பப்பதையே சொல்கின்றன என்றார்கள். அது தவறு அவை பொதுவாக கண்டு, பார்த்து என்ற பொருளையே தருகின்றன என்று குர்ஆன் வசனங்கள். அரபி அகராதி கொண்டு நிலைநாட்டியவுடன், அதிலிருந்து பல்ட்டி அடித்து 29-ல் பிறை

பாருங்கள். மேகமூட்டமாக இருந்தால் 30 ஆக பூர்த்தி செய்யுங்கள் என்று அன்றைய மக்களிடம் எழுந்த சர்ச்சையை முடிவு கட்டும் விதமாக சொன்ன ஹதீஸைக் காட்டி இது கண்ணால் பார்ப்பதற்கு ஆதாரமில்லையா? என்று கேட்டனர். அன்று பிறையைக் கண்ணால் பார்த்து மாதத்தைத் தீர்மானித்தது போல், அன்று நேரத்தைத் தீர்மானிக்க சூரியனைக் கண்ணால் பார்த்தார்களே! இன்று நீங்கள் ஏன் கடிகாரத்தைப் பார்த்து நேரத்தைத் தீர்மானிக்கிறீர்கள் என்று கேட்டவுடன் வாயடைத்துப் போய், அதிலிருந்தும் பல்ட்டி அடித்து, இரண்டாம் பிறை, மூன்றாம் பிறை என சர்ச்சையிட்டுக் கொண்டு தீர்வு நாடி இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களிடம் வந்தபோது, அவர்கள் என்றைய தினம் பார்த்தீர்களோ அன்றைய தினத்தின் பிறை எனப் பொதுவாகக் கூறி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்த ஹதீஸை ஆதாரமாகக் காட்டி பிறையைக் கண்ணால் பார்ப்பதற்கு இதுவே ஆதாரம் என்றார்கள்.

கணினி கணக்கீடு இல்லாத அக்காலத்தில் கண்ணால் பார்த்து சர்ச்சையிட்டுக் கொண்டதை முடிவுக்குக் கொண்டு வந்தார்களே அல்லாமல் பிறையைப் புறக் கண்ணால் மட்டுமே பார்த்துத் தீர்மானிக்க வேண்டும் என்பதற்கு இது ஆதாரமாகாது என்று கூறியவுடன், அதிலிருந்து பல்ட்டி அடித்து சிரியா தேசத்தில் ரமழான் பிறை பார்த்து நோன்பை ஆரம்பித்தவர், ரமழான் இறுதியில் ஷவ்வால் பிறை பார்க்க வேண்டிய கட்டத்தில் கொண்டு வந்த தகவலை இப்னு அப்பாஸ்(ரழி) நிராகரித்ததைப் பெரிய ஆதாரமாக எடுத்து வைத்தனர்.

அன்று காலம் மிகமிக தாழ்ந்து ரமழான் இறுதியில் வந்த தகவலை இப்னு அப்பாஸ்(ரழி) ஏற்றிருந்தால், அன்று மதீனாவாசிகளிடையே பெரும் சர்ச்சையே ஏற்பட்டிருக்கும் என்பதை உணர முடியாத மூடர்கள் அல்ல இந்த மவ்லவி புரோகிதர்கள். அறிந்த நிலையிலேயே அற்ப உலக ஆதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டு மக்களை வழி கெடுத்து நரகில் தள்ளுகின்றனர்.

ஆம்! கழுதை உழவுக்கு வந்தாலும் புரோகித மவ்லவிகள் நேர்வழிக்கு வரமாட்டார்கள் என்று நாம் அடிக்கடிக் கூறி வருவதை உண்மைப்படுத்தி வருகிறார்கள். எனவே தெள்ளத் தெளிவான நேரடியான குர்ஆன் வசனங்களையோ, ஆதாரபூர்வமான

ஹதீஸ்களையோ அவற்றில் உள்ளது உள்ளபடி ஒரு போதும் ஏற்க மாட்டார்கள் இப்புரோகித மவ்லவிகள். ஷைத்தானின் நேரடி ஏஜண்டாக இருக்கும் அவர்கள் அவற்றிற்கு சுய விளக்கம் கொடுத்து அவர்களும் வழிகெட்டு, மக்களையும் வழிகெடுப்பார்கள் என்பதை 2:159 முதல் 162 வரையுள்ள குர்ஆன் வசனங்களைப் படித்து விளங்குகிறவர்கள் உணர முடியும். அவர்களே இப் புரோகித மவ்லவிகளின் பிடியிலிருந்து விடுபடுவார்கள். நேர்வழி பெறுவார்கள்.

இந்தப் புரோகித மவ்லவிகளுக்குள்ள சாதகமான சூழ்நிலை - பிளஸ்பாயிண்ட் என்ன தெரியுமா? அல்குர்ஆனின் எண்ணற்ற வசனங்களின்படி மக்களில் மிகப் பெரும்பான்மையினர் இப்புரோகித மவ்லவிகள் பின்னால் சென்று நரகில் விழக் கூடியவர்களாகவே இருக்கிறார்கள். இப்புரோகித மவ்லவிகளுக்கு அப்பெரும்பான்மை மக்களைக் கொண்டு உலகியல் ஆதாயங்கள் நிறையவே கிடைக்கின்றன. எனவே நாளை மறுமையில் அப்புரோகித மவ்லவிகளும் அவர்கள் பின்னால் செல்லும் பெருங்கொண்ட மக்களும் அடையப்போகும் இழி நிலை, நரக வேதனை இவை பற்றி அவர்கள் உணர்வதாக இல்லை. இப்புரோகித மவ்லவி களின் வசீகர, உடும்புப் பிடியிலிருந்து விடுபட்டு நேரடியாக குர்ஆன், ஹதீஸைப் பார்த்து விளங்கி அதன்படி நடப்பவர்களே பாக்கியசாலிகள். அவர்கள் மிகமிக சொற்பமானவர்களே!

அன்று நபி(ஸல்) அவர்கள் பிறையைப் பார்த்துத்தானே முடிவெடுக்கச் சொன்னார்கள். மேகமூட்டமாக இருந்தால் 30ஆக பூர்த்தி செய்யச் சொன்னது கண்ணால் பார்ப்பதற்கு ஆதாரமில்லையா? என பிதற்றுவார்கள். இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களிடம் 2-ம் பிறை 3-ம் பிறை என சண்டையிட்டுக் கொண்டு வந்தவர்களிடம் என்று பார்த்தீர்களோ அன்றைய நாளின் பிறை என அவர்கள் சொன்னது கண்ணால் பார்ப்பதற்கு ஆதாரமில்லையா? சிரியா தேசத்தில் பிறை கண்ட செய்தி ரமழான் இறுதியில் ஷவ்வால் மாதம் பிறக்க இருக்கும் சமயம் மதீனா வந்து சொன்ன தகவலை இப்னு அப்பாஸ்(ரழி) ஏற்க மறுத்த செய்தி இப்படியான தகவல்களைத்தான் மிகப் பெரிய ஆதாரமாகத் தருகிறார்கள்.

இன்று போல் அன்றும் அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டு சூரிய,

சந்திர சுழற்சிகள் துல்லியமாகத் தெரிந்த நிலையில்தான் பிறையைப் புறக்கண்ணால் பார்த்து தீர்மானிக்கக் காத்திருந்ததாகச் சொல்கிறாரா? இதைவிட அறிவீனம் ஒன்றுண்டா? அன்று பிறையை மட்டுமா கண்ணால் பார்த்து மாத ஆரம்பத்தைத் தீர்மானித்தார்கள்? அன்று சூரிய சுழற்சியைக் கண்ணால் பார்த்து தொழுதார்களா? இன்றுபோல் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்து தொழுதார்களா? அன்று வைகறையையும், சூரிய மறைவையும் கண்ணால் பார்த்து நோன்பை ஆரம்பித்து முடித்தார்களா? இன்று போல் கடிகாரத்தைப் பார்த்து நோன்பை ஆரம்பித்து நோன்பை முடித்தார்களா?

அன்று தூரத்து இறப்புச் செய்தி காலம் தாழ்ந்து நேரடியாக வந்தவர்கள் தகவல் சொல்லி இறந்தவரது மனைவி இத்தா இருந்தாளா? அல்லது இன்று போல் இறப்புச் செய்தி தொலைத் தொடர்பு மூலம் உடனடியாகக் கிடைத்து அவரது மனைவி உடனடியாக இத்தாவை ஆரம்பித்தாளா? அன்று தொலை தூரத்திலிருந்து 22:27-ல் அல்லாஹ் சொல்வது போல் ஒட்டகத்தில் ஹஜ்ஜுக்குப் போனார்களா? அல்லது இன்று போல் விமானத்தில் ஹஜ்ஜுக்குப் போனார்களா? இவை அனைத்தையும் அறிய முடியாத மக்கு மண்டுகங்களா இவர்கள்? இல்லை, அல்லாஹ் 2:42, 75, 146, 6:20 நான்கு இடங்களில் சொல்வது போல் நன்கு அறிந்த நிலையில்தான் மக்களை வழிகேட்டில் இட்டுச் செல்கிறார்கள். புரோகித மவ்லவிகள் அற்ப உலக ஆதாயங்களுக்காக மக்களை வழிகேட்டில் இழுத்துச் சென்று நரகில் தள்ளும் துணிச்சல் மிக்கவர்கள்.

அன்றையை விட இன்றைக்கு மாதம் பிறந்ததையும், சூரிய உதய, மறைவையும் மிகத் துல்லியமாகக் கணக்கிட முடியும் என்பதை உணர்த்தும் ஆதாரபூர்வமான ஹதீஸ் இதோ: **அஸ்மாபின்த் அபீபக்கர்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபி(ஸல்) அவர்கள் காலத்தில் மேகம் சூழ்ந்த ஒரு நாளில் நாங்கள் நோன்பை நிறைவு செய்த பின்னர் அதாவது துறந்த பின்னர் சூரியன் தென்பட்டது.** (புகாரீ ர.அ. 1959)

ஜாக் தலைமைப் புரோகிதரை எடுத்துக் கொள்ளுங்கள். விஞ்ஞான கணினி கணக்கீட்டை ஏற்பது குர்ஆன், ஹதீஸுக்கு உட்பட்டதே என அவரின் கீழ் செயல்படும் S.செய்யித் அலி

பைஸி என்பவர் மூலம் பிரசுரம் வெளியிட்டவர்தான்.

இதோ அப்பிரசுரம்:

**பிறை விஷயத்தில்**

## விஞ்ஞானக் கணிப்பை ஏற்பது குர்ஆன், ஹதீஸுக்கு எதிரானதா?

S. **செய்யித் அலி பைஸி இமாம்,** அல்மஸ்ஜித் அஷ்ரப், இளங்கடை, நாகர்கோவில்.

ஒவ்வொரு ரமழான் மற்றும் அதையடுத்து வரும் பெருநாளின்போது மாதத்தின் முதல் நாளை தீர்மானிப்பதில் பலத்த சர்ச்சைகள் எழுவது வழமையாகி வருகிறது. அறியாமை, பிடிவாதம், மனோ இச்சையைப் பின்பற்றுதல், கௌரவம் பார்ப்பது போன்றவை இந்த சர்ச்சைகளுக்கு முக்கிய காரணங்களாகும். எனவே தான் உண்மையை உரக்கச் சொன்னாலும் உறைக்காமல் போய்விடுகிறது.

ஒரே இறைவன் ஒரே இறுதி இறைத்தூதர், ஒரே கிப்லா ஆகியவற்றால் ஒன்றுபட்டுள்ள முஸ்லிம் சமுதாயம் தனது மகிழ்ச்சிக்குரிய நாள் எது என தீர்மானிப்பதில் குழம்பி நிற்பது நமது ஈமானின் பலவீனத்தையே காட்டுகிறது. உலகிற்கே வழிகாட்ட வந்த மார்க்கத்தை பின்பற்றி வரும் ஒரு மிகப்பெரும் பொறுப்புள்ள சமுதாயம் இது விஷயத்தில் - நவீன யுகத்திலும் - தடுமாற்றம் கொண்டிருப்பது மாற்று சமயத்தவர் மத்தியில் இஸ்லாமைப் பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் செயலாகும்.

அவரவர் பகுதியில் பிறையை புறக்கண்ணால் பார்த்து தான் மாதத்தின் முதல் நாளை தீர்மானிக்க வேண்டும் என்று ஒரு சாராரும் பிறையை புறக்கண்ணால் பார்த்தோ அல்லது பிறை பார்த்த தகவலை அறிந்தோ அதை தீர்மானித்துக் கொள்ளலாம் என்று மற்றொரு சாராரும் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

பிறிதொரு சாரார் பிறையை புறக்கண்ணால் பார்க்கவோ அல்லது பிறையை பார்த்த தகவல் அறியவோ வேண்டிய அவசியமில்லை. விஞ்ஞானக் கணிப்பின் மூலம் முற்கூட்டியே

மாதத்தின் முதல் நாளை முடிவு செய்து கொள்ளலாம் என்று கூறுகின்றனர்.

இந்த மூன்றாவது சாராரின் கருத்து குரஆன் ஹதீஸுக்கு எதிரானதா என்பதை அலசுவதே இங்கு நோக்கம். முந்திய இரண்டு சாராரும் மூன்றாவது சாராரின் கருத்தை கடுமையாக எதிர்க்கின்றனர். அதற்கு அவர்கள் எடுத்து வைக்கும் முக்கியமான ஆதாரம். பிறை பார்த்து நோன்பு வையுங்கள். பிறை பார்த்து நோன்பை விடுங்கள் என்ற பிரபலமான ஹதீஸாகும்.

நோன்பை துவக்கவும் பெருநாள் கொண்டாடவும் பிறை பார்ப்பது அவசியம் என்று ஹதீஸ் சொல்லும்போது விஞ்ஞானக் கணிப்பின் மூலம் முடிவு செய்வது இந்த ஹதீஸுக்கு மாற்றமான செயலாகும், மேலும் ஹதீஸை புறந்தள்ளுவதுமாகும் என்று வாதிடுகின்றனர். இவர்களின் இந்த வாதம் சரிதானா என்று பார்ப்போம்.

சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் இரு பிரம்மாண்டமான படைப்புகளாகும் கால நேரங்களையும், நாட்களையும் கணக்கிட்டுக் கொள்ளவே இவற்றை படைத்திருப்பதாக திருக்குர்ஆனில் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் இறைவன் கூறுகிறான். இவ்வசனங்களில் இந்த இரண்டு கோள்களும் இணைத்தே சொல்லப்படுகின்றன (பார்க்க. அல்குர்ஆன் 6:96, 10:05, 13:02, 21:33, 36:38-40, 55:05, 2:189)

நாம் அன்றாடம் செய்யும் வழிபாடுகளில் சில, SOLAR சிஸ்டத்துடனும், மேலும் சில LUNAR சிஸ்டத்துடனும் சம்பந்தப்பட்டவையாகும்.

1. ஐவேளைத் தொழுகை ஜும்ஆ மற்றும் பெருநாள் தொழுகை, ஸஹர் முடிவு, இஃப்தார் துவக்கம் போன்றவற்றை SOLAR சிஸ்டத்தை அடிப்படையாகக் கொண்டே நிறைவேற்றி வருகிறோம்.

2. நோன்பு ஹஜ் பெருநாள் தினம் ஆகியவற்றை LUNAR சிஸ்டத்தை அடிப்படையாகக் கொண்டே நிறைவேற்றி வருகிறோம்.

இக்கடமைகளை இவ்வாறே நிறைவேற்ற வேண்டுமென்பது மார்க்கத்தின் கட்டளையாகும்.

ஐவேளைத் தொழுகைகளின் நேரத்தைப் பற்றி நபி(ஸல்) கூறும்போது.

கிழக்கு அடிவானத்தில் வைகறை புலர்வது பஜ்ரு தொழுகையின் நேரத்தையும், சூரியன் உச்சி சாய்வது லுஹர் நேரத்தையும், ஒரு மனிதனின் நிழல் அவன் உயரத்தின் அளவுக்கு வருவது அஸர் நேரத்தையும், சூரியன் மறைவது ம.்.ரிப் நேரத்தையும், வானில் செம்மேகம் மறைவது இஷா நேரத்தையும் அறிவிக்கிறது என கூறினார்கள் (முஸ்லிம்-ஹதீஸ் சுருக்கம்)

ஸஹர் நேர முடிவைப் பற்றி குர்ஆன் கூறும்போது கறுப்பு ரேகை விலகி வெள்ளை ரேகை வெளிப்படும் வரை (அதாவது வைகறை புலரும் வரை) உண்ணுங்கள் பருகுங்கள் என்று கூறுகிறது. (2:187)

மேலே கண்ட வழிமுறையைத் தான் தொழுகை நேரம் மற்றும் ஸஹர் நேர முடிவை தெரிந்து கொள்ள நபி(ஸல்) அவர்கள் பயன்படுத்தினார்கள். விஞ்ஞானம் வளர்ச்சியடையாத அன்றைய சூழலில் அவர்களால் இந்த வழி முறையைத் தான் பின்பற்ற முடிந்தது. இன்றிருப்பதுபோல் நேரத்தை துல்லியமாக முன்கூட்டியே கணித்துச் சொல்லும் வசதியை அவர்கள் பெற்றிருக்கவில்லை. குர்ஆனும் இதை உறுதி செய்கிறது.

(இரவு பகல்) நேரத்தை நீங்கள் துல்லியமாக கணக்கிட்டுக் கொள்ள மாட்டீர்கள் என்பதை அவன் (அல்லாஹ்) அறிகிறான் (73:20)

எனினும் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த காலத்தில் வாழும் நாம் நபி(ஸல்) அவர்கள் பின்பற்றிய மேற்கண்ட வழிமுறையை பின்பற்றாமல் நவீன யுகத்தின் விஞ்ஞான கணிப்பின் மூலம் வகுத்துத் தரப்பட்டுள்ள புதிய வழிமுறையைத்தான் பயன்படுத்துகிறோம். லுஹர் தொழுகைக்காக தயாராகும் ஒருவர் சூரியன் உச்சி சாய்ந்து விட்டதா என்று பார்த்து அறிந்து தொழுவதில்லை; ஏற்கனவே கணித்து வைக்கப்பட்டுள்ள நேரத்தை பார்த்தே தொழுகைக்குத் தயாராகிறார்.

இப்படிச் செய்வதால் நபி(ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாற்றம் செய்து விட்டதாக, நம்மில் யாரும் யாரையும் குறை காண்பதில்லை. காரணம், நபி(ஸல்) அவர்களின் காலத்திற்கேற்ப அவர்கள் செயல்பட்டார்கள். நாம் நமது காலத்திற்கேற்ப

செயல்படுகிறோம். இரண்டு செயல்பாடுகளுமே SOLAR சிஸ்டத்திற்கு உட்பட்டவைதான்! என்பதேயாகும்.

இனி LUNAR சிஸ்டத்திற்கு வருவோம்.

நோன்பு, பெருநாள் தினம் உள்ளிட்டவைகளை LUNAR சிஸ்டத்தின் அடிப்படையில் தான் நிறைவேற்ற வேண்டும்.

ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

பிறை பார்த்து நோன்பு வையுங்கள். பிறை பார்த்து நோன்பை விடுங்கள் (புகாரி, முஸ்லிம்)

விஞ்ஞானம் வளர்ச்சியடையாத காலத்தில் மாதத்தின் முதல் நாளை அறிந்து கொள்ள அப்போதிருந்த ஒரே வழி புறக்கண்ணால் பிறையைப் பார்த்து தீர்மானிப்பது ஒன்றுதான்! முன்கூட்டியே துல்லியமாக கணித்துச் சொல்லும் வசதி அவர்கள் காலத்தில் இல்லாததுவே இதற்கு காரணம். இவ்வுண்மையை நபி(ஸல்) அவர்களே தெளிவுபடுத்துவதைப் பாருங்கள்.

**நாம் துல்லியமாகக் கணித்துக் கூறவும், எழுதவும் அறியாத வர்களாக இருக்கிறோம். ஒரு மாதம் இப்படியும் இருக்கலாம் அப்படியும் இருக்கலாம். (அதாவது 29-கவோ அல்லது 30-கவோ இருக்கலாம்)**

அறிவிப்பாளர்: இப்னுஉமர்(ரழி) நூல்கள்:புகாரி, முஸ்லிம்.

இந்த ஹதீஸிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகிறது.

1. LUNAR சிஸ்டத்தின்படி ஒரு மாதம் எத்தனை நாட்களைக் கொண்டது என்பதை முற்கூட்டியே கணித்துச் சொல்லும் ஆற்றல் அவர்களுக்கு இருந்திருக்கவில்லை.

2. கணித்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள் அவ்வசதியை பயன்படுத்திக் கொண்டு தீர்மானிப்பதில் தவறில்லை.

எனவே பிறையை புறக்கண்ணால் பார்த்து மாதத்தின் முதல் நாளை தெரிந்து கொள்ளும் பழைய வழிமுறையை விட்டுவிட்டு புதிய வழிமுறையாகிய விஞ்ஞானக் கணிப்பை ஏற்றுச் செயல்படுவது ஒருபோதும் சுன்னத்துக்கு மாற்றமான செயலாகாது. ஏனெனில் இரண்டுமே LUNAR சிஸ்டத்திற்கு உட்பட்டவைதான்.

LUNAR சிஸ்டத்தின் பழைய மற்றும் புதிய இரண்டு முறை

களையும் பொதிந்தேதான் நோன்பு தொடர்பாக வரும் குர்ஆன் வசனமும் அமைந்துள்ளது. உங்களில் எவர் அம்மாதத்தை **அடைகிறாரோ** அவர் நோன்பு நோற்க வேண்டும் (2:185)

இவ்வசனத்தில் உங்களில் எவர் பிறை பார்க்கிறாரோ என்றோ அல்லது எவர் கணிக்கிறாரோ என்றோ குறிப்பிட்டுச் செல்லாமல் எக்காலத்திற்கும் ஏற்ற வகையில் பொதுவாக எவர் **அடைகிறாரோ** என்றே கூறப்பட்டுள்ளது.

இவற்றிற்கு பிறகும் இக்கருத்தை மறுப்பவர்கள் தொழுகை விஷயத்தில் நாம் பயன்படுத்தி வரும் SOLAR சிஸ்டத்தின் விஞ்ஞானக் கணிப்பையும் தவறு என்று கூறவேண்டியது வரும், கூறுவார்களா?

ஆகவே பிறை பார்த்து நோன்பு வையுங்கள், பிறை பார்த்து நோன்பை விடுங்கள் என்று கூறியது அறிவியல் வளர்ச்சியில்லாத காலத்தை கருத்தில் கொண்டேயாகும் என்பது தெளிவாகிறது.

தொழுகைக்குரிய நேரத்தை அறிவதற்கு SOLAR சிஸ்டத்தின் புதிய விஞ்ஞான கணிப்பு முறையை ஏற்பவர்கள் நோன்பை துவக்குவதற்கு LUNAR சிஸ்டத்தின் அதே புதிய விஞ்ஞான கணிப்பு முறையை நிராகரிப்பது முரண்பாடான நிலையாகும்.

சூரியன் சந்திரன் இரண்டுமே நேர காலங்களை அறிவதற்காக படைக்கப்பட்டிருக்கும்போது, அவற்றில் ஒன்றை மட்டும் துல்லியமான விஞ்ஞான கணிப்பிற்கு உட்படுத்தி விட்டு மற்றொன்றை அதற்கு உட்படுத்தாமல் இரண்டு படைப்புகளுக்கு மிடையில் இத்தகைய வேறுபாட்டை ஏற்படுத்த எந்த ஆதாரமும் இல்லை.

எனவே,

ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுவதற்கு

சூரிய சந்திர கிரகணத் தொழுகை குறித்த அறிவிப்பை முன்கூட்டியே செய்வதற்கு

ஸஹர் நேர முடிவை தெரிந்து கொள்வதற்கு

இ∴ப்தார் ஆரம்ப நேரத்தை அறிந்து கொள்வதற்கு

இன்னும் பலவற்றிற்கு

நவீன விஞ்ஞான கணிப்பை ஏற்றுச் செயல்படுபவர்கள் மாதத்தின் முதல் நாளை அறிந்து கொள்ள LUNAR சிஸ்டத்தின் அதே ரீதியான விஞ்ஞானக் கணிப்பை ஏற்றுக் கொள்வதே யதார்த்தமானது நியாயமானது.

அனைத்து முஸ்லிம்களும் ஒரே நாளில் நோன்பை துவக்கி ஒரே நாளில் பெருநாள் கொண்டாடி மகிழ்ந்து ஒற்றுமையுடன் செயல்பட இதுவே உகந்த வழி முறையாகும்.

செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. (ஹதீஸ்) அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

SOLAR சிஸ்டம் சூரியக் கணக்கு, LUNAR சிஸ்டம் சந்திரக் கணக்கு.

அல்ஜன்னத் மாத இதழிலும் இதே உண்மைக் கருத்தை எழுதியவர்தான், இப்போது தனது தலைமைப் பதவிக்கும், உலக ஆதாயத்திற்கும் ஆபத்து வருகிறது என்றவுடன் அப்படியே அந்தர் பல்ட்டி அடித்து பிறையைப் புறக்கண்ணால் பார்த்த தகவல் எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற கீழ் நிலைக்கு இறங்கி இருக்கிறார். ஆம்! தங்களின் உலகின் பட்டம், பதவி, வருமானம் இவற்றிற்கு ஆபத்து என்றால் குர்ஆன், ஹதீஸுக்கு முரணாக ஃபத்வா கொடுக்கத் தயங்கமாட்டார்கள் இப்புரோகித மவ்லவிகள்.

அல்ஜன்னத் மே 2009 பக்கம் 28-ல்

## மிம்பர் ஏறத் தெரிந்தவர்களெல்லாம் அறிஞர்களா?

என்ற தலைப்பில்

சில ஆலிம்கள் அரசியல்வாதிகளுக்குப் பின்னால் ஓடுகிறார்கள். அவர்களது அராஜகங்களை நியாயப்படுத்தும் வகையில் இவர்களது பத்வா அமைந்து விடுகின்றன. மற்றும் சிலர் வெவ்வேறு பாத்திரங்களிலுள்ள தண்ணீரைப் போன்று பாத்திரங்களின் அமைப்புக்கேற்ப தண்ணீரும் அதன் உருவை மாற்றுவது போன்று சூழலுக்குச் சாதகமாக தமது கருத்துக்களை அடிக்கடி மாற்றிக் கொள்கிறார்கள். இதுவே பிரச்சனைக்கான காரணமாகும் என்று ஒரு பிரபல அறிஞர் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்ததாக எழுதியுள்ளனர்.

கணினி கணக்கீட்டின்படி தலைப்பிறையை ஏற்கலாம் என்று முன்னேறி வந்த ஜாக் தலைமைப் புரோகிதர் இப்போது ஜாக்

தலைமைப் பதவிக்கும், வாங்கும் சம்பளத்திற்கும் அடிமைப்பட்டு அந்தர் பல்ட்டி அடித்து கீழ் இறங்கி பிறையைப் புறக்கண்ணால் பார்த்த தகவலை வைத்தே தலைப்பிறையைத் தீர்மானிக்க வேண்டும் என்று சொல்லி வருவதைக் கண்டித்தே அந்த அறிஞர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஆம்! கூலி-சம்பளத்திற்காக மார்க்கப் பணிபுரியும் புரோகித மவ்லவிகள் அனைவரின் நிலையும், மேலே அந்த பிரபல அறிஞர் விமர்சித்துள்ள கேவலமான இழி நிலையிலேயே இருக்கின்றது.

இதே போல் ததஜ தலைமைப் புரோகிதரும் பெரும் ஆய்வுகளுக்குப் பிறகு சர்வதேச ஒரே தலைப்பிறையை ஏற்று 1997 நவம்பர் அல்ஜன்னத் இதழில் எழுதியவர்தான். பின்னர் உலக ஆதாயம் கருதி பெரும்பான்மை முஸ்லிம்களைத் திருப்திப்படுத்த அந்தர் பல்ட்டி அடித்து தத்தம் பகுதி தலைப்பிறை என பிதற்ற ஆரம்பித்தார். அதற்கு அவர் கூறிய காரணம் நமக்குச் சிரிப்பையே ஏற்படுத்தியது.

வாகனக் கூட்டத்தார் 30-ம் நாள் மாலையில் கொண்டு வந்த முதல்நாள் பிறை பார்த்த செய்தியை ஏற்ற நபி(ஸல்) அவர்கள் நபிதோழர்களுக்கு நோன்பை விடச் சொல்லி கட்டளை யிட்டுள்ளதாக தவறாக விளங்கியதாகவும், உண்மையில் அது வாகனக் கூட்டத்தாருக்கு இட்ட கட்டளை; நபிதோழர்களுக்கு அல்ல என்று சரியாக விளங்கி தன்னுடைய முன்னைய ∴ பத்வாவை(?) திரும்பப் பெற்றதாகவும் அறிவித்தார். 1997க்கு முன்னரும் பலமுறை வாகனக் கூட்டத்தார் பற்றிய ஹதீஸை விளக்கும்போது, அவர்கள் பிறையைப் பார்த்தார்கள்; நோன்பை விட்டார்கள். அடுத்த நாள் காலையில் பெருநாள் தொழுகை தொழுது பண்டிகை கொண்டாடினார்கள். பின்னர் சாவகாசமாக மாலையில் நபி(ஸல்) அவர்களை சந்திக்க வந்தார்கள். அப்போது நபி(ஸல்) அவர்களும், நபி தோழர்களும் 30-ம் நாள் நோன்பை நோற்றவர்களாக இருக்கக் கண்டார்கள். தாங்கள் பிறை பார்த்ததற்கு சாட்சி சொன்னார்கள். நபி(ஸல்) அவர்கள் அதை ஏற்று நபி தோழர்களுக்கு நோன்பை விடும்படியும் அடுத்த நாள் காலையில் தொழும் திடலுக்கு வரும்படியும் கட்டளையிட்டார் கள் என்று சரியாகத் தெளிவாகப் பேசி அவை ஆடியோ கேசட்டு களிலும் பதிவாகி பலர் கேட்டும் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் அந்தர் பல்ட்டி அடித்து அக்கட்டளை நபிதோழர்களுக்கு அல்ல; வந்த வாகனக் கூட்டத்தாருக்கே! அவர்கள் சட்டம் தெரியாமல் நபி(ஸல்) அவர்களிடம் சட்டம் கேட்க வந்தார்கள் என பிதற்றினார். சட்டம் கேட்க வந்தவர்கள் ஷஹிதூ - சாட்சி சொன்னார்கள் என்று எப்படி ஹதீஸில் வரும் என்றும் இன்னும் அவரது மடமைவாதத்தால் ஏற்பட்ட சுமார் 10 கேள்விகளை எழுப்பி இருந்தோம். அந்நஜாத்திலும் பல முறை அக்கேள்விகளை மீண்டும், மீண்டும் பதிவு செய்தோம்.

10 ஆண்டுகளாக அக்கேள்விகளுக்கு பதில் அளிக்க வக்கற்றவர் தான், மீண்டும் மீண்டும் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார். ஆக இப்புரோகிதர்கள் தங்களின் அற்ப சுய நலனுக்காக, முழுச் சமுதாய நலனையும் பலியிடும் சமுதாய துரோகிகள் என்பதை முஸ்லிம்கள் என்று உணர்ந்து அவர்களைப் புறக்கணித்துவிட்டு நேரடியாக குர்ஆன், ஹதீஸை படித்துச் சிந்திக்க ஆரம்பிக்கிறார்களோ அன்றுதான் முஸ்லிம் சமுதாயத்தில் மீண்டும் எழுச்சி ஏற்படும். சமுதாய மறுமலர்ச்சி ஏற்படும் அதற்கு மாறாக,

அவர்களை நம்பி அவர்கள் பின்னால் செல்வது மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்கிய கதைதான். அழிவும், நாசமும் இவ்வுலகில் ஏற்படுவதோடு, நாளை மறுமையிலோ நிரந்தர நரகம் என்பதை 7:3, 33:21,36,66,67,68, 59:7 இவற்றை நேரடியாகப் படித்து விளங்குகிறவர்கள் அறிய முடியும்.

இந்த ஜாக், ததஜ புரோகித மவ்லவிகள் குர்ஆன், ஹதீஸை மட்டுமே பின்பற்றுகிறோம் என்று தார்ப்பாயில் வடித்தெடுத்த பொய்யையே கூறி வருகின்றனர். அவர்கள் குர்ஆன், ஹதீஸை மட்டும் பின்பற்றினால் 21:92, 23:52, 3:103, 105, 6:153,159, 30:32, 42:13,14 இத்தனை இறைவாக்குகளுக்கு லாஜிக், பாலிசி என சுய கருத்தைக் கூறி ஜாக், ததஜ என சமுதாயத்தைப் பிளவு படுத்த முடியாது; சுமார் 50 இறைக் கட்டளைகளை நிராகரித்துப் புறக்கணித்து விட்டு கூலிக்கு-சம்பளத்திற்கு மார்க்கப்பணி செய்ய முடியாது என்பதை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மேற்படி குர்ஆன் வசனங்களை நேரடியாகப் படித்து விளங்கினால் நிச்சயம் எமது இந்த கூற்றை ஏற்பார்கள்.

# மார்க்கப் பணிக்கு கூலி(சம்பளம்) அனுமதிக்கப்பட்டதா?

மார்க்கப் பணிக்கு கூலி பற்றி இறுதி வழிகாட்டல் நூல் அல்குர்ஆன் என்ன சொல்கிறது என்று முதலில் பார்ப்போம்.

## அல்லாஹ் நபிமார்களுக்கு இட்டக் கட்டளை!

khu;f;fj;ijg; gpiog;ghf – njhopyhff; nfhs;sf; $lhJ vd;W my;yh`; egpkhu;fSf;F ,l;lf; fl;lis:

(egpNa!) ,tu;fs; midtiuAk; my;yh`; Neuhd topapy; nrYj;jpdhd;. MfNt> mtu;fSila Neuhd topia ePq;fSk; gpd;gw;Wq;fs;. NkYk; ',e;j Fu;Mid cq;fSf;F mwptpg;gjw;fhf ehd; cq;fsplk; ahnjhU $ypAk; Nfl;ftpy;iy. cyfj;jhu; midtUf;Fk; ,J xU ey;YgNjrkhFk;" vd;W $Wk;. (6:90)

(md;wp) gpd;Dk; ePq;fs; (vd;idg; Gwf;fzpj;(J epuhfupj;)jhy; (mijg;gw;wp vdf;Ff; ftiyapy;iy. Vndd;why;) ehd; cq;fsplj;jpy; ahnjhU $ypAk; vjpu;ghu;f;ftpy;iy. vd;Dila $yp my;yh`;tplNk md;wp (kw;nwtuplKk;) ,y;iy. ehd; mtDf;F Kw;wpYk; topg;gl;L> elf;Fk;gbahfNt fl;lisaplg;gl;Ls;Nsd;" (vd;W $wpdhu;). (10:72)

இந்த இறைவாக்கை கவனமாகப் படித்துப் பாருங்கள். நீங்கள் (என் அறிவுரையை) புறக்கணித்து விட்டால், (எனக்கு எவ்வித இழப்புமில்லை) ஏனெனில் (இதற்காக) நான் உங்களிடம் யாதொரு கூலியும் கேட்கவில்லை; எனக்குரிய கூலி அல்லாஹ்விடமேயன்றி (வேறெவரிடத்திலும்) இல்லை என்ற பாகத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். மக்களிடம் கூலியை எதிர் பாராமல் மார்க்கத்தை உள்ளது உள்ளபடி சொன்னால் பெரும்பாலான மக்கள் ஏற்கமாட்டார்களே என்ற கவலை நபிமார்களுக்கு இருக்கவில்லை. அந்த அடிப்படையில் தனக்குப்பின் ஒருவர் கூட இல்லாத நிலையில் சில நபிமார்கள் தன்னந்தனியாகச் சுவர்க்கம் புகுவார்கள் என ஹதீஸ்களில் பார்க்கிறோம். அதே சமயம் மக்களிடம் கூலியை எதிர்பார்த்திருந்தால் அப்பெரும்பான்மை யினரின் ஆதரவை நோக்கமாகக் கொண்டு குர்ஆன், ஹதீஸை

திரித்துச் சொல்லும் கட்டாயம் ஏற்பட்டிருக்கும் (பார்க்க 17:73,74,75). இப்புரோகிதர்கள் கூலியை மக்களிடம் எதிர்பார்ப்பதாலேயே அவர்களது விருப்பப்படி குர்ஆன், ஹதீஸை திரித்து, வளைத்து, மறைத்துச் சொல்லி வழிகெட்டு நரகிற்கு ஆளாகிறார்கள். அவர்கள் மக்களிடம் பெறும் கூலி - சம்பளமே இப்புரோகிதர்களை அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிந்து நடக்கும் முஸ்லிம்களின் நிலையிலிருந்து வழிகெட வைக்கிறது என்பதை உறுதிப்படுத்தவில்லையா?

'md;wp vd;Dila kf;fNs! ,jw;fhf ehd; cq;fsplk; ahnjhU nghUisAk; ($ypahff;) Nfl;ftpy;iy. vd;Dila $yp my;yh`;tplNk md;wp (cq;fsplk;) ,y;iy. (cq;fspy; kpfj; jho;e;jtu;fshapDk; rup) ek;gpf;if nfhz;ltu;fis ehd; tpul;btpl KbahJ. epr;rakhf mtu;fs; jq;fs; ,iwtid (fz;zpaj;Jld;) re;jpg;gtu;fshfNt ,Uf;fpwhu;fs;. Mdhy;> epr;rakhf cq;fis(j;jhd; kpfj; jho;e;j) %lu;fshff; fhz;fpNwd;. (11:29)

kf;fshy; NguwpQu;fshf kjpf;fg;gl;ltu;fs; jhd; ,q;F my;yh`;thy; %lu;fshf milahsk; fhl;lg;gLfpwhu;fs;.

vd;Dila kf;fNs! ,jw;fhf ehd; cq;fsplj;jpy; ahnjhU $ypAk; Nfl;ftpy;iy. vd;Dila $yp vd;id gilj;jtdplNkad;wp (NtW ahuplKk;) ,y;iy. (,t;tsT $l) ePq;fs; mwpe;Jnfhs;s Ntz;lhkh? (11:51)

(mtu;fis Nehf;fp) ,jw;fhf ehd; cq;fsplk; ahnjhU $ypiaAk; Nfl;ftpy;iy. MapDk; vtd; jd; ,iwtdpd; topapy; nry;y tpUk;Gfpd;whNdh mtd; nry;tij (ePq;fs; jil nra;ahky; ,Ug;gij)Na (ehd; cq;fsplk;) tpUk;Gfpd;Nwd; vd;W (egpNa) ePu;; $Wk;. (25:57)

(,jw;fhf) ehd; cq;fsplk; ahnjhU $ypiaAk; Nfl;ftpy;iy: vd;Dila $yp ahTk; cyfj;jhiug;; gilj;J fhg;ghw;wp tsu;g;gtdplNk ,Uf;fpd;wd. (26:109)

,jw;fhf ehd; cq;fsplj;jpy; ahnjhU $ypiaAk; Nfl;ftpy;iy vd;Dila $ypnay;yhk; cyfj;jhu; midtiuAk; gilj;J tsu;g;gtdplNk ,Uf;fpwJ. (26:127)

,jw;fhf ehd; cq;fsplk; ahnjhU $ypAk; Nfl;ftpy;iy vd;Dila $yp ahTk; cyfj;jhu; midtiuAk; gilj;J

tsu;g;gtdplNkad;wp (NtW ahuplKk;) ,y;iy. (26:145)

,jw;fhf ehd; cq;fsplj;jpy; ahnjhU $ypAk; Nfl;ftpy;iy. vd;Dila $yp ahTk; cyfj;jhu; midtiuAk; gilj;J tsu;g;gtdplNkad;wp (NtW ahuplKk;) ,y;iy". (26:164)

இதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியும் கேட்கவில்லை; என்னுடைய கூலியெல்லாம், உலகத்தாரைப் படைத்து வளர்த்து வரும் இறைவனிடமேயன்றி (வேறெவரிடமும்) இல்லை. (26:180)

(egpNa! NkYk;) ePu; $Wk;.. 'ehd; cq;fsplj;jpy; ahnjhU $ypiaf; Nfl;bUe;jhy; mJ cq;fSf;Nf nrhe;jkhfl;Lk;> vd;Dila $yp my;yhtplNkad;wp (cq;fsplk;) ,y;iy. mtd; midj;ijAk; mwpaf;$batdhf ,Uf;fpd;whd;. (34:47)

MfNt> (egpNa!) ePu;; $Wk;;: (kdpju;fNs) ,jid Xjpf; fhz;gpg;gjw;fhf) ehd; cq;fsplj;jpy ahnjhU $ypiaAk; Nfl;ftpy;iy. (38:86)

ek;gpf;if nfhz;L ew;nray;fs; nra;j jd;Dila (ey;) mbahu;fSf;F my;yh` ew;nra;jp $WtJk; ,JNt. (egpNa!) ePu; $Wk; ,jw;fhf ehd; ahnjhU $ypAk; Nfl;ftpy;iy (vd;W) 'cwtpdu;fis Nerpg;gijj; jtpu> vtu; ew;nray;isj; Njbf; nfhs;fpd;whNuh> mtUf;F ehk; mjpy; gpd;Dk; ed;ikia mjpfupf;fr; nra;fpd;Nwhk;. epr;rakhf my;yh`; kpf kd;dpg;gtDk;> ed;wpia mq;fPfupg;g tdhfTk; ,Uf;fpd;whd;. (42:83)

மார்க்கப் பணியில் எப்படிப்பட்டவர்கள் மட்டுமே நேர்வழியில் இருக்க முடியும்?

உங்களிடம் ஒரு கூலியும் கேட்காத இவர்களையே நீங்கள் பின்பற்றுங்கள். இன்னும் இவர்களே நேர்வழி பெற்றவர்கள் (யாஸீன் 36:21) இதிலிருந்து மார்க்கப் பணிக்கு கூலி - சம்பளம் வாங்குகிறவர்கள் பின்பற்றப்படுவதற்குத் தகுதியானவர்கள் இல்லை. காரணம் அவர்கள் நேர்வழியில் இல்லை. கூலியை - சம்பளத்தை நோக்கமாகக் கொண்டு கோணல் வழிகளையே நேர்வழியாகக் காட்டி மக்களை நரகில் தள்ளுவார்கள் என்பதை விளங்க முடியும்.

மக்களிடம் சம்பளத்தை எதிர்பார்க்கும்போது அதிகமான மக்களைக் கவரும் கட்டாயம் ஏற்படுகிறது. ஆனால் அதிகமான மக்கள் நேர்வழிக்கு வரமாட்டார்கள் என்று அல்லாஹ் எண்ணற்ற இடங்களில் கூறியுள்ளான். (பார்க்க 2:243, 6:116, 7:187, 11:17, 12:21,38,40,68,13:1) அவர்கள் கோணல் வழிகளையே விரும்பு வார்கள். அவர்கள் விரும்பும் கோணல் வழிகளை நேர் வழியாகக் காட்டினால்தான் அதிகமானோர் விரும்பி ஏற்பார்கள். எனவே கூலியை எதிர்பார்க்கும் புரோகிதர்கள் நன்கு அறிந்த நிலையில்தான் கோணல் வழிகளை நேர்வழியாகக் காட்டும் கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள். இதோ அல்குர்ஆனை கூறுகிறது.

**நீங்கள் அறிந்து கொண்டே உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள். உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள்.** (அல்பகரா 2:42)

**எவர்களுக்கு நாம் நெறிநூல்களைக் கொடுத்தோமோ அவர்கள் தம்(சொந்த) மக்களை அறிவதைப் போல் (நேர் வழியை) அறிவார்கள். ஆனால் அவர்களில் ஒரு பிரிவினர், நிச்சயமாக அறிந்து கொண்டே உண்மையை மறைக் கின்றனர்.** (அல்பகரா 2:146)

**எவரும் தம் குழந்தைகளை அறிவதுபோல், நெறிநூல் கொடுக்கப்பட்டவர்கள் (நேர்வழியை) நன்கறிவார்கள். எவர்கள் தமக்குத்தாமே நஷ்டமிழைத்துக் கொண்டார் களோ அவர்கள் தாம் நம்பிக்கைக் கொள்ள மாட்டார்கள்.** (அன்ஆம் 6:20)

புரோகிதர்கள் மார்க்கப் பணிக்கு கூலி-சம்பளம் வாங்குவதே முஸ்லிம் சமுதாயம் கடன் சுமை ஏற்பட்டு பல மூடநம்பிக்கை களிலும், வழிகேட்டில் இட்டுச் செல்லும் வெற்றுச் சடங்குகளை வழிபாடுகளாக எண்ணிச் செய்யும் நிலைக்கு ஆளாகின்றது என்பதை 52:40, 68:46 இறைவாக்குகள் உறுதிப்படுத்துகின்றன.

**நீர் அவர்களிடம் ஏதாவது கூலி கேட்டு, அதனால் அவர்களுக்கு கடன் சுமை ஏற்பட்டுவிட்டதா?** (52:40, 68:46)

சம்பளத்திற்கு மார்க்கப் பணி செய்கிறவர்கள் பல தில்லு முல்லுகளைச் செய்து மக்களை கோணல் வழிகளில் அழைத்துச் சென்று நரகில் தள்ளுகிறார்கள் என்பதைக் கீழ்காணும் இறைவாக்குகள் உறுதிப்படுத்துகின்றன.

**அவர்கள் மற்றவர்களை (நேர்வழியாகிய) அதை (கேட்க விடாது) தடுக்கிறார்கள்: இவர்களும் அதைவிட்டு ஒதுங்கிக் கொள்கிறார்கள், அவர்கள் தங்களைத் தாங்களே நாசமாக்கிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் (இதை) புரிந்து கொள்வதில்லை.** (அல்அன்ஆம் 6:26)

**அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களைச் சொற்ப விலைக்கு விற்கின்றனர். இன்னும் அவனுடைய பாதையிலிருந்து (மக்களை) தடுக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் செய்து கொண்டிருக்கும் காரியங்கள் மிகவும் கெட்டவை.** (அத்தவ்பா 9:9)

**அவர்கள் எந்த மு.ஃ.மினின் விஷயத்திலும் உறவையும், உடன்படிக்கையையும் பொருட்படுத்தமாட்டார்கள். மேலும் அவர்கள் வரம்பு மீறியவர்கள் ஆவார்கள்.**(அத்தவ்பா 9:10)

**நம்பிக்கை கொண்டவர்களே! நிச்சயமாக பாதிரிகளிலும், சந்நியாசிகளிலும் அநேகர் மக்களின் பொருட்களை தவறான முறையில் சாப்பிடுகிறார்கள். மேலும் அல்லாஹ்வின் பாதையை விட்டும்(மக்களை) தடுக்கிறார்கள்..** (அத்தவ்பா 9:34)

**அவர்கள் (மனிதர்களை) அல்லாஹ்வின் பாதையை விட்டுத் தடுக்கிறார்கள். மேலும் அதில் கோணலையும் உண்டுபண்ண விரும்புகிறார்கள். இவர்கள்தாம் மறுமையை நிராகரிப்பவர்கள் ஆவார்கள்.** (ஹுது 11:19)

**மனிதர்களில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அறிவில்லாமல் (பிக்ஹு, சுய கருத்துகள் போன்ற) வீணான செய்திகளை விலைக்கு வாங்கி (அவற்றால் மக்களை) அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழி கெடுக்கவும், அல்லாஹ்வின் பாதையைப் பரிகாசமாக்கிக் கொள்ளவும் (முயல்கிறார்கள்) இத்தகையோருக்கு இழிவு தரும் வேதனையுண்டு**. (லுக்மான் 31:6)

(மேலும் பார்க்க: 2:41,75,78,79,109 3:78,187,188, 4:44,46, 5:41,62,63, 6:21,25, 11:18)

சம்பளத்திற்கு மார்க்கப். பணி புரியும் புரோகிதர்கள் இந்த அளவு தரங்கெட்ட இழி நிலைக்கு ஆளாவதற்குக் காரணம் ஹராமான உணவு அவர்களின் உள்ளங்களை சுருங்கி இறுகச்

செய்து கற்பாறைகள் போல் ஆக்கி விடுவதால் புரோகிதர்களால் சத்தியத்தை - நேர்வழியை உணர முடியாத நிலைக்கு ஆளாகி விடுகிறார்கள். இந்த நிலையையும் அல்லாஹ் அல்குர்ஆனில் கீழ்கண்ட வசனங்களில் சுட்டிக் காட்டுகிறான். 2:74, 5:13, 6:125.

**இதன் பின்னரும் உங்கள் இதயங்கள் இறுகி விட்டன. அவை கற்பாறைகள் போல் ஆகிவிட்டன........** (2:74)

**அப்பால்(புரோகிதர்களாகிய) அவர்கள் தம் உடன்படிக் கையை முறித்துவிட்டதால் நாம் அவர்களைச் சபித்தோம். அவர் களுடைய இருதயங்களை இறுகச் செய்தோம். (இறை) வசனங்களை அவற்றிற்குரிய இடங்களிலிருந்து அவர்கள் மாற்றுகிறார்கள்.......** (5:13)

**அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்ட நாடுகிறானோ அவர் களுடைய நெஞ்சை இஸ்லாத்தின்பால் விசாலமாக்குகிறான். யாரை வழிகெடுக்க நாடுகிறானோ அவருடைய நெஞ்சை வானத்தில் ஏறுபவன் நெஞ்சைப் போல் இறுகிச் சுருங்கும்படிச் செய்கிறான்...** (6:125)

அல்லாஹ்வின் எண்ணற்ற நேரடிக் கட்டளைகளை நிராகரித்துப் புறக்கணித்து முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்துவிட்டு மார்க்கத்தை வயிற்றுப் பிழைப்பாகக் கொண்டிருப் பதால், இப்புரோகிதர்கள் பெரும் பாவிகளாகி விடுவதால் இவர் களுக்கு நேர்வழி பெறும் பாக்கியம் கிட்டவே கிட்டாது. காரணம் பாவிகளுக்கு நாம் ஒருபோதும் நேர்வழி காட்ட மாட்டோம் என்று அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் கண்டிப்பாகக் கூறுகிறான்.(பார்க்க: 5:108, 9:24, 80, 61:5, 63:6)

இந்த இடத்தில் இன்னொரு முக்கிய பொருளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டிருக்கும் புரோகித மவ்லவிகளை விட மிகப் பெரும் பாவிகளாக நாம் வேறு யாரையும் குர்ஆனுடைய வெளிச்சத்தில் பார்க்க முடியாது. ஒருவன் புரோகிதத் தொழில் செய்யாமல், இதர ஹராமான பொருள்கள் அனைத்தையும் சாப்பிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம்.

உதாரணமாக, அவன் வட்டி, பன்றிக்கறி, செத்தது, இரத்தம், அனாதைகள் சொத்து, திருட்டு, வழிப்பறி, கொள்ளை, கொலை, விபச்சாரம், குடி என அல்குர்ஆனில் ஹராமாக்கப்

பட்ட அனைத்து வகை மூலம் சாப்பிட்டு வயிற்றை நிரப்புகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவனைப் பொருத்தமட்டிலும் அல்குர்ஆனிலுள்ள சுமார் 43 இடங்களில் அல்லாஹ் தடுத்துள்ள வற்றில் ஈடுபடுகிறான். அதற்கு மேலும் அவன் தனக்குத்தானே தீங்கிழைத்து தன்னுடைய மறுமை வாழ்க்கையை நட்டப் படுத்தி நரகில் வீழ்கிறான். மேலும் சிலரின் இவ்வுலக வாழ்க்கையில் மட்டும் நட்டத்தை உண்டாக்குகிறானே அல்லாமல் அவர்களில் ஒருவருடைய மறு உலக வாழ்க்கையையும் நட்டப்படுத்தி அவர்களை நரகில் விழச் செய்வதில்லை.

அதற்கு மாறாக இப்புரோகித மவ்லவிகள் அல்குர்ஆனின் சுமார் ஐம்பதுக்கும்(50) மேற்பட்ட இறைக் கட்டளைகளை நிராகரித்துப் புறக்கணித்துவிட்டு, முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்துவிட்டு, துணிந்து மார்க்கத்தை மதமாக்கி அதையே பிழைப்பாகக் கொண்டிருக்கின்றனர். தங்களை நரகத்திற்குரியவர் களாக ஆக்கும் மிகப் பெரும் பாவிகளாக இருப்பதோடு மற்ற மக்களுக்கு இவ்வுலகிலும் பெருந்தீங்குகள், நட்டங்கள் இழைப்பதோடு, அவர்களின் மறு உலக வாழ்க்கையிலும் ஈடு செய்ய முடியாத மாபெரும் நட்டத்தை உண்டாக்கி அவர்களை நரகில் தள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இப்போது சிந்தியுங்கள்! வானத்தின் கீழ் இவர்களை விட கேடுகெட்ட படைப்புகள் இருக்க முடியுமா? படைப்புகளிலேயே மிகமிக இழிவானவர்கள், கேடுகெட்டவர்கள் இவர்களே. இதை நாம் சொல்லவில்லை. இறைவனுடைய அத்தாட்சிகளைப் பெற்றிருந்தும் இப்புரோகித மவ்லவிகள் அவற்றை நழுவவிட்டு விட்டு, சம்பளம் என்ற அற்ப உலக ஆதாயத்தைக் குறிக் கோளாகக் கொண்டு அவற்றில் மூழ்கியதால் ஷைத்தான் அவர்களைப் பின் தொடர்கிறான். அதனால் வழி தவறியவர் களாகி விடுகிறார்கள். அல்லாஹ் நாடியிருந்தால், தனது அத்தாட்சி களைக் கொண்டு அவர்களை உயர்த்தி இருப்பான். ஆனால் இப்புரோகிதர்கள் மறுமையில் அல்லாஹ்விடம் மார்க்கப் பணிக்காகக் கூலி பெற்று சுவர்க்க வாழ்வை அடைவதைவிட இவ்வுலகிலேயே மார்க்கப் பணிக்கு கூலி-சம்பளம் வாங்குவதன் மூலம் இவ்வுலக வாழ்வையே சதம் என மதித்து அவர்களுடைய மன இச்சைகளையே பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். அதனால் அல்லாஹ்வின் பார்வையில் நாயை விட இழிவானவர்களாக கேடுகெட்டவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதை அல்குர்ஆன்

அல் ' அ.'.ரா.'.ப் 7:175 முதல் 179 வரையுள்ள வசனங்களை நீங்களே நேரடியாகப் படித்து அறிந்து கொள்ள முடியும்.

இப்புரோகித மவ்லவிகளின் மார்க்கப் பணிக்குரிய கூலி-சம்பளம் நாளை மறுமையில் இருக்கிறது என்பதை பல இறை வாக்குகள் உறுதிப்படுத்துகின்றன. இந்த நிலையில் அப்பணிக்காக மக்களிடம் கூலி வாங்குவது 2:188 கண்டித்துக் கூறும் இலஞ்சத்திலேயே சேரும். அரசு அதிகாரிகளுக்கு அவர்களுடைய பணிக்காக அரசு சம்பளம் கொடுக்கிறது. ஆனால் அந்த அரசு அதிகாரிகள் தாங்கள் எந்தப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அதே பணிகளை மக்களுக்குச் செய்து கொடுப்பதற்கு அந்த மக்களிடமிருந்தும் பணம் பெறுவது தண்டனைக்குரிய குற்றமா? இல்லையா? லஞ்சம் இல்லையா?

அந்த அதிகாரிகளுக்குத் திறமை இருந்தால், இவ்வுலக அரசுகளிடமிருந்து தப்பலாம். நாளை மறுமையில் அல்லாஹ்விடம் தப்ப முடியுமா? முடியாது. ஆனால் இந்த இலஞ்சம் பெறும் அரசு அதிகாரிகளை விட கேடுகெட்டவர்களாக இருக்கிறார்கள் புரோகித மவ்லவிகள் அரசு அதிகாரிகளோ தங்களைப் போன்ற மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஆட்சியாளர்களையே ஏமாற்றுகிறார்கள். ஆனால் இப்புரோகித மவ்லவிகளோ அரசர்களுக்கெல்லாம் பேரரசனான, ஆட்சிகளுக்கெல்லாம் மாபெரும் ஆட்சியாளனான சர்வ வல்லமை மிக்க அல்லாஹ்வையே ஏமாற்றும் நெஞ்சழுத்தத்தோடு, சர்வசக்தி மிக்க ஆட்சியாளனான அல்லாஹ்வே மார்க்கப் பணக்கு கூலி தானே கொடுப்பதாக வாக்களித்துள்ள நிலையில், இப்புரோகிதர்கள் மக்களிடம் கூலி-சம்பளம் வாங்குவது இலஞ்சங்களிலேயே மாபெரும் இலஞ்சமில்லையா? படைத்த அல்லாஹ்வையே ஏமாற்ற முற்படுவதாக இல்லையா? அல்லாஹ் இவர்களை விட்டு வைப்பானா? இப்புரோகித மவ்லவிகளுக்காக மாபெரும் தண்டனை காத்திருப்பதில் சந்தேகமுண்டா? சொல்லுங்கள்.

அரசு அதிகாரிகளாவது மக்களின் தேவைகளை முடித்துக் கொடுத்தே லஞ்சம் பெறுகிறார்கள்; அதற்கு மாறாக இப்புரோகித மவ்லவிகளில் பலர் தங்களால் செய்து கொடுக்க முடியாதவற்றை செய்து கொடுப்பதாக மக்களை நம்பச் செய்து அவர்களது பொருள்களை அபகரிக்கிறார்கள்.

இதோ அல்குர்ஆனே கூறுகிறது. படித்துப் பாருங்கள்!

**எவர்கள், அல்லாஹ் நெறிநூலில் அருளியவற்றை மறைத்து, அதற்குக்கிரயமாக சொற்பத் தெகையைப் பெற்றுக் கொள்கிறார்களோ, நிச்சயமாக அவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தவிர வேறெதனையும் உட்கொள்ள வில்லை. மறுமை நாளில் அல்லாஹ் அவர்களிடம் பேசவும் மாட்டான்: அவர்களைப் பரிசுத்தமாக்கவும் மாட்டான்; அவர் களுக்கு துன்புறுத்தும் வேதனையும் உண்டு.**

**அவர்கள்தாம் நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டையும், மன்னிப்பிற்குப் பதிலாக (கடும்) வேதனையையும் விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள். இவர்களை நரக நெருப்பைச் சகித்துக் கொள்ளச் செய்தது எது?** (அல்பகரா 2:174,175)

**இதற்குக் காரணம், நிச்சயமாக அல்லாஹ் இந்நெறி நூலை உண்மையுடன் அருள் செய்தான். நிச்சயமாக இன்னும் இந்நெறி நூலில் கருத்து வேறுபாடு கொண்டவர் கள் பெரும் பிளவிலேயே இருக்கின்றனர்.** (அல்பகரா 2:176)

ஆக, இப்புரோகித மவ்லவிகள் தர்கா, தரீக்கா, மத்ஹபு, மஸ்லக், இயக்கம், கழகம், அமைப்பு என பல்வேறு பிரிவுகளில் பிளவுபட்டுக்கிடப்பதற்கு மார்க்கம் அதாவது குர்ஆனோ, ஹதீஸோ காரணமல்ல. மார்க்கத்தைத் தங்களின் வயிற்றுப் பிழைப்பாகக் கொண்டிருப்பதே இப்பிளவுகளுக்குக் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்குகிறதா? இல்லையா? அவர்கள் பல கோணல் வழிகளிலும், வழிகேட்டிலும் நரகிற்குரியவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதையும் இந்த 2:174,175,176 இறைவாக்குகளை மீண்டும் மீண்டும் படித்து விளங்குகிறவர்கள் கண்டிப்பாக உணர முடியும்.

மேலும் ஹதீஸ்களில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்று பாருங்கள்.

**இந்தச் சமுதாயத்திற்கு உயர்வும், மதிப்பும் இப்பூமியில் வசதியாக வசிப்பதும் உள்ளது என்று நற்செய்தி கூறுவீராக! அவர்களில் யாரேனும் மறுமைக்குரிய அமலை (செயலை) இவ்வுலகிற்காக (பொருளுக்காக) செய்தால் மறுமையில் அவருக்கு எந்தப் பயனுமில்லை என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.** உபைபின் கஃபு (ரழி) அஹ்மது, இப்னு ஹிப்பான், ஹாகிம், பைஹகி.

**ஒரு மனிதன் நீண்ட பிரயாணம் செய்து, புழுதி படிந்த**

**வனாக, பரட்டைத் தலையனாக, இரண்டு கைகளையும் உயர்த்தி இறைவா! இறைவா! என்று பிரார்த்திக்கிறான். ஆனால் அவனது உணவும் ஹராமானதாக உள்ளது; அவன் அருந்திய பானமும் ஹராமானதாக உள்ளது. அவன் அணிந்துள்ள ஆடையும் ஹராமானதாக உள்ளது. இந்த நிலையில் அவனது பிரார்த்தனை எங்ஙனம் ஏற்றுக் கொள்ளப்படும்? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள்.**
அபூஹுரைரா(ரழி), முஸ்லிம்.

மிகவும் கடுமையான பிரயாண சிரமங்களுக்கிடையில் இருக்கும் ஒரு பிரயாணியின் பிரார்த்தனை அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட எந்தத் தடையும் இல்லை. ஆனால் அவனது உணவு, பானம், ஆடை ஹராமாக இருப்பதால் அந்தப் பிரயாணியின் பிரார்த்தனை நிராகரிக்கப்படுகிறது. இந்த நிலையில் பிரயாணத்தின் எவ்விதக் கஷ்டத்தையோ, துன்பத்தையோ அனுபவிக்காமல் வீட்டில் சுகமாக இருக்கும் இந்த புரோகித மவ்லவிகளின் உணவு, பானம், உடை, இருப்பிடம் அனைத்தும் ஹராமாக இருக்கும் நிலையில், அவர்கள் அவர்களுக்காகவும், சமுதாய மக்களுக்காகவும் கேட்கும் பிரார்த்தனைகளை அல்லாஹ் அங்கீகரிப்பானா? நிராகரித்து அப்புரோகிதர்களின் முகத்திலேயே தூக்கி எறிவானா? சகோதரர்களே நிதானமாக சிந்தியுங்கள். வழிகேட்டிருக்கும் இப்புரோகித மவ்லவிகள் மக்களுக்கு நேர்வழி காட்ட முடியும் என்று நம்புவதைவிட அடிமுட்டாள்த்தனம் வேறொன்று இருக்க முடியுமா?

அதனால்தான் முகல்லிது, கைரமுகல்லிது, தவ்ஹீது என்ற வேறுபாடு எதுவும் இல்லாமல் தார்ப்பாயில் வடித்தெடுத்த பொய்களையும், பொய்ச் சத்தியங் களையும், அவதூறுகளையும், எவ்வித சுய கருத்துக்களையும் புகுத்தாமல் குர்ஆன், ஹதீஸை மட்டும் மக்களிடம் எடுத்துச் சொல்பவர்கள் மீது இப்புரோகித மவ்லவிகளால், சுமத்த முடிகிறது. காரணம் அல்லாஹ்வைப் பற்றியோ மறுமையைப் பற்றியோ அச்சம் அவர்களுக்கு சிறிதளவும் இல்லை என்பதே! இன்னும் பாருங்கள் நபி(ஸல்) அவர்களது எச்சரிக்கைகளை!

**குர்ஆனை ஓதுங்கள்! அதன் மூலம் சாப்பிடவோ, பொருள் திரட்டவோ செய்யாதீர்கள்.** (நபிமொழி, அஹ்மத், தஹாவி, தப்ரானி, இப்னு அசாகிர்)

**எவன் குர்ஆனை ஓதுகிறானோ அவன் அல்லாஹ்விடமே**

**கேட்கட்டும். வருங்காலத்தில் குர்ஆனை ஓதிவிட்டு மக்க ளிடமே (கூலி) கேட்பவர்கள் தோன்றுவார்கள்!**

(நபிமொழி : திர்மிதி, அஹ்மத்)

இப்புரோகித மவ்லவிகளின் கேடுகெட்ட புத்தியை நபி(ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளனர்.

இப்புரோகித மவ்லவிகளின் முயற்சியினால் சில சீர்திருத்தங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அதற்கும் அவர்களின் சுயநலமே காரணமாகும். நேர்வழியை உள்ளது உள்ளபடி நிலைநாட்ட வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு அவர்களது முயற்சிகள் அமைவதில்லை. இந்த முஸ்லிம் சமுதாயத்தினர் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக சூ∴பிஸ புரோகித மவ்லவிகளின் வலையில் சிக்கி தர்கா வணக்க வழிகேடுகளையும், கந்தூரி, மவ்லிது, கத்தம், ∴பாத்திஹா போன்ற வழிகேட்டுச் சடங்குகளையும் வழிபாடுகளாகச் செய்து வந்தனர்; வருகின்றனர்.

இந்த நிலையில் சில புரோகித மவ்லவிகள் அந்த முஸ்லிம் பெருங்கூட்டத்திலிருந்து ஒரு கூட்டத்தை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் கெட்ட நோக்கத்துடன் தர்கா சமாதி சடங்குகளைக் கடுமையாக எதிர்க்கவும், அதே சமயம் அதற்கு வழி வகுக்கும் தரீக்கா, மத்ஹபுகளை ஆதரிக்கும் நிலையை எடுத்தார்கள். இவர்கள் பரேல்வி புரோகித மவ்லவிகளிலிருந்து வேறுபட்டு தேவ்பந்த் புரோகித மவ்லவிகள் என தங்களை அறிமுகப்படுத்தினார்கள்.

தர்கா-சமாதிச் சடங்குகளில் மூழ்கி இருப்பவர்கள் பரேல்வி கொள்கையுடையோர் என்றும் தர்கா சடங்குகளை எதிர்க்கும் அதே வேளை தரீக்கா, மத்ஹபுகளை ஆதரிப்போர் தேவ்பந்த் கொள்கையுடையோர் எனவும் அடையாளம் காணப்பட்டனர். இரு சாராரும் புரோகித மவ்லவிகளே!.

அந்த தேவ்பந்த்-தப்லீ∴க் கொள்கையில் மூழ்கி இருந்தவர்களிலிருந்து ஒரு கூட்டத்தைப் பிரித்தெடுக்க தரீக்காக்களை எதிர்த்தும் அதே சமயம் மத்ஹபுகளை ஆதரித்தும் ஒரு புரோகித மவ்லவி கூட்டம் கிளம்பியது. அவர்கள் தரீக்காக் களை கடுமையாகச் சாடினாலும் மத்ஹபுகளை ஆதரித்தார்கள். இன்றைய ஜமாஅத்தே இஸ்லாமி புரோகித மவ்லவிகள் இந்த வகையினரே.

அடுத்த ஒரு புரோகித மவ்லவி கூட்டம் கிளம்பியது. அவர்கள்

மத்ஹபுகளை எதிர்த்து, அவர்களை முகல்லிதுகளாகவும், தங்களை கைர முகல்லிதுகளாகவும், குர்ஆன், ஹதீஸை பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டு, தங்களது பிரிவை மத்ஹபுக்கு மாற்றமாக மஸ்லக் என்று கூறிக்கொண்டு செயல்பட ஆரம்பித்தனர். அவர்கள் பின்னால் சென்ற கூட்டம் தங்களை அஹ்லஹதீஸ் என்று கூறிக்கொண்டாலும் அவர்கள் நம்பிக்கை வைத்துள்ள அஹ்லஹதீஸ் புரோகித மவ்லவிகளையே தக்லீது செய்யும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களும் தங்களால் குர்ஆன், ஹதீஸை நேரடியாகப் படித்து விளங்க முடியாது என்ற நம்பிக்கையில் மூழ்கியவர்களே.

இன்னொரு புரோகித மவ்லவி கூட்டம் தங்களை ஸலஃபிகள், ஸலஃபி மின்ஹாஜ் என்று கூறிக்கொண்டு தங்கள் கட்டுப் பாட்டில் ஒரு கூட்டத்தை வைத்துள்ளனர். அவர்கள் கலஃபிகளான பின்னோர்களைத்தான் பின்பற்றக் கூடாது. ஸலஃபிகளான முன்னோர்களைப் பின்பற்றலாம் எனக் கூறி எப்படியும் அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் இடைத்தரகர்களை ஏற்படுத்தவே முற்படுகின்றன.

இப்போது தமிழகத்தில் புதிதாக முளைத்துள்ள ததஜ தலைமை புரோகித மவ்லவியோ கலஃபிகளையும் பின்பற்றக் கூடாது: ஸலஃபிகளையும் பின்பற்றக் கூடாது: ஆனால் நான் குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் கொடுக்கும் சுயவிளக்கங்களை தாராளமாகப் பின்பற்றலாம் என்கிறார். இப்படி புரோகித மவ்லவிகளில் ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் பின்னால் ஒரு மக்கள் கூட்டத்தை வைத்துக் கொண்டு பிழைப்பு நடத்த முற்படுகிறார்களே அல்லாமல் எந்தப் புரோகிதக் கூட்டமும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் நேரடியாக குர்ஆன், ஹதீஸ் மொழி பெயர்ப்புகளைப் பார்த்து தாராளமாக மார்க்கத்தை விளங்கலாம். அந்த அளவு அல்லாஹ் மார்க்கத்தை எளிதாக்கித் தந்துள்ளான் என்று மக்களிடம் கூறுவதாக இல்லை. அவர்கள் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும். தங்களின் தனிப்பட்ட, குடும்ப இவ்வுலக வாழ்க் கையை ஹலாலான வழியில் உழைப்பின் மூலம் நிறைவேற்ற வக்கற்றுப்போய், பொதுமக்களிடம் ஹராமான வழியில் பிச்சை கேட்டு கையேந்தும் இப்புரோகித மவ்லவிகள் மார்க்கத்தை விளங்கிய ஆலிம்களா? அவர்களால் பொதுமக்களுக்கு நேர் வழியைக் காட்ட முடியுமா? குருடன் கண் உள்ளவர்களுக்கு வழிகாட்டினான் என்றால் அதை யாரும் நம்புவார்களா?

மேலும், இந்தப் புரோகித மவ்லவிகள் பின்னால் செல்லும் ஒவ்வொரு கூட்டமும் தாங்கள் நம்பியுள்ள புரோகித மவ்லவிகள் தங்களைப் பேராபத்திலிருந்து காப்பாற்றியுள்ளதாக நம்பிக்கை வைத்துள்ளனர். தேவ்பந் கொள்கையுள்ள தப்லீ.்.க் புரோகித மவ்லவிகள் தங்களை தொழுகை, நோன்பு மற்றும் மார்க்கக் கடமைகளில் பொடுபோக்காக இருந்த நிலையிலிருந்து கரையேற்றி யுள்ளதாக நம்பி, தப்லீ.்.க் பிரசாரத்தில் ஈடுபடுகிறவர்கள் தப்லீ.்.க் புரோகித மவ்லவிகளை உயிருக்குயிராக நேசித்து அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர்.

அதே போல் தரீக்கா வழிகேட்டிலிருந்து விடுபட்டுள்ள மக்கள் கூட்டம், தரீக்காக்களை எதிர்த்துப் பேசும் புரோகித மவ்லவிகளை உயிருக்குயிராக நேசித்து அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். மத்ஹபு பிடியிலிருந்து விடுபட்டு ஸல.்.பிகளைப் பின்பற்றும் கூட்டம் ஸல.்.பி புரோகித மவ்லவிகளை உயிருக்குயிராக நேசித்து அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின் றனர். தமிழகத்தில் ததஜ தலைமைப் புரோகித மவ்லவியின் பிரசாரத்தின் காரணமாக தர்கா, தரீக்கா, மத்ஹபு வழிகேடு களிலிருந்து விடுபட்டுள்ள கூட்டம் தங்களை அந்த பேராபத்தி லிருந்து விடுவித்து கரையேற்றிய ததஜ தலைமைப் பூசாரியை தங்களின் ஆபத்பாந்தவனாக நம்பி அவரை உயிருக்குயிராக நேசித்து அவருக்கு அடிமைப்பட்டு அவரது காலடியில் கிடக்கின்றனர்.

இப்படி முஸ்லிம்களில் மிகப் பெருங்கொண்ட கூட்டம் இந்தப் புரோகித மவ்லவிகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனரே அல்லாமல், தாங்கள் அல்லாஹ்வின் அடிமை, அவனது கட்டளை களுக்கே முற்றிலும் அடிபணிந்து நடக்க வேண்டும்: இப்புரோகித மவ்லவிகளின் சுய விளக்கங்களைப் புறக்கணித்து நேரடியாக குர்ஆன், ஹதீஸைப் படித்து விளங்கி அதன்படி நடக்க வேண்டும் என்பதை உணர மறுக்கிறார்கள். பெரும் நட்டத்திற்குரியவர்கள். (33:36,66,67,68)

புரோகிதர்கள் பின்னால் கண்மூடிச் செல்லும் பெருங்கொண்ட கூட்டம் பலதரப்பட்ட இப்புரோகிதர்கள் பெரும் சேவை செய்து தங்களை நரகத்திலிருந்து காப்பாற்றுவதாக எண்ணுவது அவர்களின் வடிகட்டின அறியாமையாகும். அவர்கள் இவர்களை நரகிலிருந்து காப்பாற்றவில்லை. வேறு புரோகிதர்களை தக்லீது செய்த இவர்களை தங்களை தக்லீது செய்யும் நிலைக்கு

மாற்றி இருக்கிறார்கள். அவ்வளவுதான் மற்றபடி நேரடியாக குர்ஆன், ஹதீஸ்படி நடக்க தங்களுக்குப் போதிக்கவில்லை என்பதை அறியாதிருக்கிறார்கள்.

மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட அனைத்துப் பிரிவுகளின் புரோகித மவ்லவிகளும், தங்களின் சுய நலனுக்காக, அற்ப இவ்வுலக ஆதாயத்திற்காக முஸ்லிம் சமுதாயத்தைக் கூறு போட்டு, பிளவுபடுத்தி தங்களை தக்லீது செய்ய வைத்திருப்பதால் அவர்கள் பெரும் பாவிகளாகவே இருக்கிறார்கள். அவர்களது நிய்யத் - எண்ணம் போல் அவர்களுக்கு உலக ஆதாயம் கிடைத்து விட்டது. (பார்க்க புகாரீ(ர.அ) முதல் பாகம் முதல் ஹதீஸ்) ஆயினும் அவர்கள் பெரும் பாவிகளாக இருப்பதால் அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழி காட்டமாட்டான்; நரகிற்குரியவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை பல குர்ஆன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் இப்புரோகிதப் பாவிகளைக் கொண்டும் அல்லாஹ் மார்க்கத்திற்கு வலுவூட்டுகிறான் என்ற நபி(ஸல்) அவர்களின் எச்சரிக்கைப்படி (புகாரீ(ர.அ) 3-ம் பாகம் 3062 அறிவிப்பு: அபூஹுரைரா (ரழி) ) அவர்கள் பின்னால் கண்மூடிச் செல்லும் (தக்லீது) பெரும்பாலான முஸ்லிம்கள் நம்புவது போல் பாவிகளான புரோகித மவ்லவிகளைக் கொண்டும் மார்க்கத்தில் சில முன்னேற்றங்கள் ஏற்படுவதை மறுப்பதற்கில்லை. இந்த இடத்தில் வழி கெடுக்கும் ஷைத்தானே அபூ ஹுரைரா(ரழி) அவர்களுக்கு நல்லுபதேசம் செய்தது நினைவு கூரத்தக்கது.

(அபூ ஹுரைரா(ரழி) புகாரீ)

எனவே இந்தப் புரோகித மவ்லவிகள் சமுதாயத்திற்கு நல்லதுதானே செய்கிறார்கள் என்று மயங்க வேண்டியதில்லை.

மார்க்கப் பணிக்குக் கூலி-சம்பளம் கூடவே கூடாது, கொடிய ஹராம் என பல இறைவாக்குகள் நேரடியாகக் கூறிக் கொண்டிருந்தும், அந்த இறைவாக்குகள் அனைத்தையும் நிராகரித்துவிட்டு (2:39) ஹராமான உணவு, பானம், உடை, இருப்பிடம் என அனைத்தையும் தவறான வழியில் அனுபவித்துக் கொண்டு அதுபற்றி எவ்வித சலனமும், வருத்தமும் இல்லாமல் இப்புரோகிதர்கள் செயல்படுவதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

அதுமட்டுமல்ல அன்று அபூபக்கர்(ரழி) மற்றும் கலீ..ஃபாக்கள் சம்பளம் வாங்கவில்லையா? அன்று கவர்னர்கள் சம்பளம் வாங்கவில்லையா? அதுபோல்தான் நாங்கள் சம்பளம் வாங்குவது என்று தங்களின் ஹராமான செயலை நியாயப்படுத்த

முற்படுகின்றனர். கலீ∴பாக்களும், கவர்னர்களும் அவர்கள் மீது கடமையில்லாத மக்களின் இவ்வுலகத் தேவைகளை நிறைவு செய்து கொடுக்கும் ஆட்சிப் பணியைச் செய்ததற்காக சம்பளம் பெற்றார்களே அல்லாமல், அவர்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாக்கப்பட்ட மார்க்கப் பணிக்குச் சம்பளம் பெறவில்லை என்பதை நன்கு அறிந்த நிலையிலேயே இப்புரோகித மவ்லவிகள் மக்களை ஏமாற்றுகிறார்கள்.

அடுத்து மார்க்கப் பணியை முழுநேரப் பணியாகச் செய்வதால் பொருளீட்ட எங்களுக்கு நேரமில்லை என்றும் காரணம் கூறுகிறார்கள். கடமையாக்கப்பட்ட (9:71, 103:1-3, 3:110) மார்க்கப் பணியை முழு நேரம் செய்ய வேண்டியதில்லை. ஒரு இமாம் ஐங்காலம் தொழவைக்க, பிள்ளைகளுக்கு கிளிப்பிள்ளை பாடமாக அர்த்தம் புரியாமல் குர்ஆன் ஓதிக்கொடுக்க அதிகபட்சம் ஒரு நாளையில் ஐந்து மணி நேரத்திற்கு மேல் ஆகாது. எஞ்சியுள்ள 19 மணி நேரத்தை எப்படிச் செலவிடுகிறார்கள். மார்க்கப் பிரசாரமும் அதிகபட்சம் ஒரு நாளைக்கு ஓரிரு மணி நேரம் மட்டுமே ஆகும். எனவே அவர்கள் முழுநேரப் பணியாளர்கள் என்று கூறி சம்பளம் பெற முற்படுவது பொய்யும் பித்தலாட்டமு மாகும். இப்படி கடமையாக்கப்பட்ட மார்க்கப்பணிக்கு கூலி- சம்பளம் வாங்க புரோகித மவ்லவிகள் கூறும் அனைத்துக் காரணங்களும் ஏற்கத்தக்கவை அல்ல.

இமாமத் பணிக்கு குறிப்பிட்ட பள்ளிக்கு நேரம் ஒதுக்கி வர வேண்டியுள்ளது. அதற்காக சம்பளம் வாங்குகிறோம் என்கின்றனர். இமாம்களைவிட முஅத்தின்கள் முன்கூட்டியே நேரம் ஒதுக்கி பள்ளிக்கு வந்து பாங்கு சொல்லும் கட்டாயத்தில் இருக்கிறார்கள். இமாம்களோ மற்ற தொழுகையாளிகள் போல் ஜமாஅத் நடக்கும் நேரத்திற்கே ஆஜராகிறார்கள். பெரும்பாலான தொழுகையாளிகள் வந்த பின்னர் இகாமத் கூறும் சமயம் வரும் இமாம்களும் உண்டு. இந்த நிலையில் முஅத்தினுக்கே சம்பளம் கொடுக்க அனுமதி இல்லை என்ற நபி(ஸல்) அவர்களின் எச்சரிக்கையைப் பாருங்கள்.

**முஅத்தினை நியமனம் செய்தால் எந்தவிதமான பிரதி பலனும் (கூலி-சம்பளம்) பெற்றுக் கொள்ளாத ஒருவரை நியமிக்க வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் என்னிடம் இறுதியான உறுதி மொழியாக வாங்கினார்கள் என்று உஸ்மான் இப்னு அபில் ஆஸ்(ரழி) அவர்கள் கூறினார்கள்.**

(அபூதாவூது, திர்மிதீ)

தொழுகையாளிகள் வரும் முன்னரே முன்கூட்டியே வந்து பாங்கு சொல்லும் முஅத்தினுக்கே கூலி-சம்பளம் அனுமதி இல்லை எனும்போது, தொழுகையாளிகளுடன் ஒரு தொழுகை யாளியாக வந்து தொழவைக்கும் இமாம் கூலி-சம்பளம் வாங்குவதை மார்க்கம் அனுமதிக்குமா? என்பதை முஸ்லிம்கள் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் ஓர் ஊரில், ஒரு மஹல்லாவில் இருக்கும் முஸ்லிம் களில் சிறந்தவர், அதிகம் குர்ஆன் ஓதத் தெரிந்தவர், தொழுகைச் சட்டங்கள் அறிந்தவர் இமாமத் செய்ய வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்களே அல்லாமல், வெளியூரி லிருந்து இமாமை இறக்குமதி செய்து அவரே தொழ வைக்க வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கட்டளை இடவில்லை என்பதை முஸ்லிம்கள் உணர வேண்டும். கூலியை-சம்பளத்தை எதிர்பார்த்தே இந்த இமாம்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் பின்னால் தொழக் கூடியவர்களுக்குப் பெரும் இடையூறாக பித்அத்தான-பத்துஆவான ரெடிமேட் துஆவை(?) செய்வதில் முனைப்புக் காட்டுகின்றனர்.

மார்க்கப் பணிக்கு கூலி-சம்பளம் வாங்குவதை நியாயப்படுத்தி அவர்கள் வைக்கும் வாதங்கள் அனைத்தும் தரைமட்டமான பின்னர், அவர்கள் எடுத்து வைக்கும் வாதம் என்ன தெரியுமா? கூலி-சம்பளம் இல்லாவிட்டால், மார்க்கப் பணி செய்கிறவர்களும், அவர்களது குடும்பத்தாரும் எப்படி உயிர் வாழ்வது?: அவர்கள் மண்ணைத் தின்றா உயிர் வாழ்வார்கள்? என்று இப்புரோகித மவ்லவிகளும் அவர்களது பக்தர்களும் கேள்விக் கணை தொடுப்பார்கள்? அவர்களது ஈமான்-நம்பிக்கையின் நிலையைப் பார்த்தீர்களா?

இன்று மார்க்கப் பணிக்கு சம்பளம் வாங்குவதால் ஏற்படும் கெடுதிகளை விவரித்து, அதனால் மார்க்கப் பணிக்கு கூலி கூடாது, என்று எமது சுய கருத்தை-சொந்த அபிப்பிராயத்தை வெளிட்டால் அவர்களின் இக்கேள்வியில் நியாயம் உண்டு. அல்லாஹ் பாதுகாப்பானாக. எமது சுய கருத்துக்களை எந்த நிலையிலும் மார்க்கத்தில் திணிக்க நாம் ஒருபோதும் துணிய மாட்டோம். பெரியாரிய சிந்தனையில் சிக்கமாட்டோம். மார்க்கப் பணிக்குக் கூலி-சம்பளம் கூடவே கூடாது என்ற எண்ணற்ற குர்ஆன் வசனங்களை அதாவது அல்லாஹ்வின் நேரடிக் கட்டளைகளையே மக்கள் மன்றத்தில் எடுத்து வைக்கிறோம்.

இந்த நிலையில் அது நடைமுறை சாத்தியமில்லை என்று இப்புரோகிதர்களும், அவர்களது பக்தர்களும் கூறுவார்களே யானால், அதன் பொருள் என்ன? அல்லாஹ்வின் இக்கட்டளைகள் இக்காலத்திற்குப் பொருந்தாது, செல்லுபடியாகாது என்று அவர்கள் கூறுகிறார்கள் என்பதுதானே அதன் பொருள்? அப்படியானால் அவர்கள் அல்லாஹ் மீதும் மறுமை வாழ்க்கை மீதும் நம்பிக்கை உடையவர்கள்தாமா? ஈமானில்லாதவர்கள் மட்டுமே இப்படிக் கூற முடியும். இறை நம்பிக்கையில் உறுதி உடையவர்கள் இறைக் கட்டளைகள் முக்காலத்திற்கும் நடைமுறை சாத்தியமானவை; மனிதன் செயல்படுத்த வேண்டியவை என்றே கூற முடியும். இதற்கு மாற்றமான கருத்து ஓர் உண்மை நம்பிக்கையாளனின் நாவிலிருந்து ஒருபோதும் வராது.

உலகில் தோன்றிய பல்லாயிரக்கணக்கான நபிமார்கள் மக்களிடம் கூலி வாங்காமல்தான் மார்க்கப்பணி புரிந்தார்கள். இறுதி நபி(ஸல்) அவர்கள் கூலி வாங்காமல்தான் மார்க்கப் பணி புரிந்தார்கள், நபிதோழர்கள் அனைவரும் கூலி வாங்காமல் தான் மார்க்கப்பணி புரிந்தார்கள். ஹிஜ்ரி 400க்கு முன்னால் வாழ்ந்த மார்க்க அறிஞர்கள் மக்களிடம் கூலி வாங்காமல் தான் மார்க்கப் பணி புரிந்தார்கள். எந்த இமாம்களின் பெயரால் இவர்கள் கற்பனையாக மத்ஹபுகள் அமைத்துக் கொண்டு மக்களை சுரண்டி வாழ்கிறார்களோ அந்த இமாம்கள் கூலி வாங்காமல் தான் மார்க்கப்பணி புரிந்தார்கள். இத்தனைக்கும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் முழுநேரமாக மார்க்கப் பணி புரிந்ததாக இவர்களே ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார்கள்.

இப்படி நபிமார்கள், நபிதோழர்கள், தாபியீன்கள், தப்அதாபியீன்கள், இமாம்கள் அனைவரும் மக்களிடம் கூலி வாங்காமல், மார்க்கப்பணி செய்திருக்கிறார்கள் என்றால், அவர் களுக்கு அது சாத்தியப்பட்டது என்றால், அதற்குக் காரணம் அவர்கள் அல்லாஹ்வையும், மறுமையையும் உறுதியாக நம்பிச் செயல்பட்டார்கள். அதற்கு மாறாக இப்புரோகித மவ்லவிகளுக்கு அல்லாஹ்மீதும், மறுமைமீதும் உறுதியான நம்பிக்கை இல்லை என்பதுதானே நிதர்சனமான மறுக்க முடியாத உண்மை.

ஆனால் மக்களை ஆட்சி புரிவது எப்படி கடமையாக்கப் பட்ட பணி இல்லையோ அதேபோல் அல்குர்ஆனை, ஹதீஸை எழுதிக்கொடுப்பது, பிற மொழிகளில் மொழி பெயர்த்துக் கொடுப்பது, மார்க்கப் பத்திரிகைகள் நடத்துவது, ஊர்விட்டு

ஊர் பணம் செலவழித்துக் கொண்டு போய் பிரசாரம் செய்வது இவை அனைத்தும் கடமையாக்கப்பட்ட மார்க்கப்பணி அல்ல. கடமையாக்கப்பட்ட மார்க்கப்பணியை செய்யாவிட்டால் நாளை மறுமையில் கேள்வி உண்டு; தண்டனை உண்டு. கடமை அல்லாத உபரி மார்க்கப்பணியை செய்யாவிட்டால் மறுமையில் கேள்வியும் இல்லை; தண்டனையும் இல்லை. அப்படிப்பட்ட கடமையாக்கப்படாத உபரி மார்க்கப் பணியை செய்வதற்காக கூலி-சம்பளம் வாங்குவதற்கு மார்க்கத்தில் தடை ஏதும் இல்லை.

அன்று நபிமார்கள்மீது கடமையாக்கப்பட்டு அவர்கள் செய்து கொண்டிருந்த மார்க்கப்பணி அனைத்தும், இறுதி நபி முஹம்மது(ஸல்) அவர்களுக்குப் பிறகு நபி வருகை இல்லாததால் அவர்களது சமுதாயத்தினராகிய நம்மீது கடமையாக்கப்பட்டு ள்ளது. (3:110, 9:71, 103:1-3) அக்கடமையை முறையாகச் செய்வது கொண்டு மட்டுமே முஸ்லிம்களாகிய நாம், அரபி மொழி தெரிந்தவர், தெரியாதவர் என்ற எவ்வித பாகுபாடுமின்றி அனைவரும் வெற்றி பெற முடியும்; மறுமையில் சுவர்க்கம் புக முடியும். அப்பணியை நபிமார்களைப் போல் கூலி வாங்காமல் செய்யத்தவறினால் 103:1 எச்சரிப்பது போல் பெரும் நட்டமே; நரகமே! அன்று நபிமார்கள் மீது விதிக்கப்படாத, கடமையாகப் படாத உபரி மார்க்கப் பணிகள் முஸ்லிம் சமுதாயத்தினர் மீதும் விதிக்கப்படவில்லை. கடமையும் இல்லை. அப்படிப்பட்ட பணிகளை ஏன் செய்யவில்லை என்று கேள்வியும் நாளை மறுமையில் அல்லாஹ்வால் கேட்கப்படவும் மாட்டாது. அப்படிப்பட்ட குர்ஆனை, ஹதீஸ்களை எழுதிக் கொடுப்பது, இதர மொழிகளில் மொழி பெயர்த்துக் கொடுப்பது, நூல்கள், தினசரி, வார, மாத இதழ்கள் நடத்துவது, இத்தியாதி, இத்தியாதி உபரி மார்க்கப் பணிகளுக்காக கூலி-சம்பளம் வாங்குவது மார்க்கத்தில் தடை செய்யப்பட்டதல்ல. இவ்விரு வகை பிரசார பணிக்குமுள்ள வேறுபாட்டை நாம் தெளிவாக விளங்கி அதன்படி நடக்க வேண்டும்.

இந்த விபரங்களைத் தெளிவாகப் புரிந்து கூலிக்கு மாரடிக்கும். அதனால் வழிகேட்டிலிருக்கும் புரோகித மவ்லவிகளின் மாயஜால, வசீகர உடும்புப் பிடியிலிருந்து விடுபட்டு, தன்னம்பிக்கையுடன் குர்ஆன், ஹதீஸை நமக்குத் தெரிந்த மொழிகளில் நேரடியாகப் பார்த்து விளங்கி அதன்படி நடந்து ஈருலகிலும் வெற்றிவாகை சூடுவோமாக.

# அல்குர்ஆன் உலக மக்கள் அனைவருக்கும் விளங்குமா? அல்லது மவ்லவிகளுக்கு மட்டும் விளங்குமா?

அல்குர்ஆன் அகில உலக மக்களுக்கும் வாழ்க்கை வழிகாட்டி யாக நெறிநூலாக எல்லாம் வல்ல ஏகனாகிய அல்லாஹ்வால் சுமார் 1430 ஆண்டுகளுக்கு முன்னர் இறக்கியருளப்பட்டது. அது இதற்கு முன்னர் அல்லாஹ்வால் இறக்கியருளப்பட்ட அனைத்து நெறிநூல்களின் சாராம்சத்தையும் உள்ளடக்கியதாகும். முஸ்லிம் களுக்கு மட்டுமல்ல; ஆதத்தின் சந்ததிகள் அனைவருக்கும் அல்குர்ஆன் சொந்தமானது. அல்குர்ஆன் முஸ்லிம்களுக்குரிய வேதம்(?), அவர்களுக்கு மட்டுமே சொந்தம். முஸ்லிம் அல்லாதவர்கள் அல்குர்ஆனை தொடக்கூடாது. அல்குர்ஆனில் உரிமை கொண்டாட முடியாது என்று புரோகித மவ்லவிகள் கூறித் திரிவது கடும் கண்டனத்திற்கு உரியதாகும். ஒருவருக்கு சொந்தமானதை அவருக்கு சொந்தமில்லை என்று கூறுவதை விட பெருத்த மோசடி பிறிதொன்று இருக்க முடியுமா? அப்படிப்பட்ட பெரும் மோசடியாளர்களாகத்தான் புரோகித மவ்லவிகள் இருக்கின்றனர். அதனால் அல்லாஹ்வின் முன்னால் பெரும் பாவிகளாக இருக்கிறார்கள்.

அல்குர்ஆனை விட்டு முஸ்லிம் அல்லாதவர்களை மட்டும் அந்நியப்படுத்தவில்லை: முஸ்லிம்களையும் அந்நியப்படுத்தி அவர்கள் அல்குர்ஆனை தொடவிடாமல் ஆக்கி வைத்திருக் கின்றனர். ஒளு-அங்க சுத்தி இல்லாமல் அல்குர்ஆனை தொடக் கூடாது; தொடுவது பெரும் பாவம் என்று அல்லாஹ்வோ அவனது தூதரோ விதிக்காத ஒரு சட்டத்தை இப்புரோகித மவ்லவிகள் விதித்து வைத்திருக்கிறார்கள். அதன்மூலம் 42:21-ல் அல்லாஹ் விதிக்காததை விதித்து அல்லாஹ்வுக்கு இணையாளர்கள் ஆவதோடு, 49:16 இறைவன் கூறுவதுபோல் அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்கும் அதிகப் பிரசங்கிகளாகவும் இருக்கிறார்கள்.

அது மட்டுமா? அரபி மதரஸாக்களில் ஏழு வருடங்கள் தெண்டச்சோறு சாப்பிட்டு காலத்தை ஓட்டியவர்களே மவ்லவிகள்

- ஆலிம்கள்; அவர்களுக்கு மட்டுமே அல்குர்ஆன் விளங்கும்: அம்மதரஸாக்களில் தெண்டச் சோறு சாப்பிட்டு காலத்தை ஓட்டாதவர்கள், அவர்கள் கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் பணம் கட்டி முறையாகப் படித்து பட்டங்கள் பல பெற்று அவர்கள் மருத்துவர்களாக இருந்தாலும், பொறிஞர்களாக இருந்தாலும், விஞ்ஞானியாக இருந்தாலும், வேறு எந்தத் துறையில் பேரறிஞராக இருந்தாலும், அவர்களால் அல்குர்ஆனை அவர்களுக்குத் தெரிந்த மொழிகளில் படித்து விளங்க முடியாது என்பதுதான் புரோகித மவ்லவிகளின் பிடிவாதமான வாதம்.

இன்னும் வெட்கத்தை விட்டு இப்புரோகித மவ்லவிகள் வெளிப்படையாகச் சொல்வதாக இருந்தால், ஏழு வருடங்கள் குப்பை கொட்டிய எங்களாலும் அல்குர்ஆனை விளங்க முடியாது. குர்ஆனை விளங்க 14 கலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட மேதைகள் இப்போது யாரும் இல்லை. அல்குர்ஆனை ஆய்வு செய்து அதில் பொதிந்து கிடக்கும் மார்க்கச் சட்டங்களை வெளிக்கொண்டு வரும் ஆற்றல் அதாவது இஜ்திஹாது செய்யும் ஆற்றல் அந்த இமாம்களின் காலத்தோடு முற்றுப் பெற்றுவிட்டது. இன்று அவர்கள் ஆய்வு செய்து - இஜ்திஹாது செய்து சொன்னவற்றை அப்படியே கண்மூடி ஏற்று நடப்பதே நம் கடமை என்றே கூறி வருகிறார்கள். அதன்படி மனிதக் கற்பனைகள் நிறைந்த குர்ஆன், ஹதீஸ் சுய கற்பனை விரிவுரைகள் மற்றும் பிக்ஹு நூல்களில் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

இந்த பிதற்றல்கள், உளறல்கள் அனைத்தும் ஏன் தெரியுமா? இப்புரோகித மவ்லவிகள் மார்க்கத்தை மதமாக்கி ஒரே நேர்வழியை பல கோணல் வழிகளாக்கி அவை கொண்டு வயிற்றை ஹராமான - கூடாத வழியில் நிரப்புவதால், அவர்களது இந்த தில்லுமுல்லுகள் அனைத்தையும் மற்ற மக்கள் கண்டு விடக் கூடாது என்ற அச்சமே - நடுக்கமே அவர்களை இவ்வாறு பிதற்ற, உளற வைக்கிறது.

இப்புரோகித மவ்லவிகளின் பிதற்றல்கள், உளறல்கள் அனைத்தும் கால் காசும் பெறாது என்று முடிவு செய்து, அவற்றைத் தூக்கி அம்பட்டனின் அழுக்குக் கூடையில் எறிந்து விட்டு, அல்லாஹ்வின் 29:69 கட்டளைப்படி அல்குர்ஆனை நேரடியாக அவர்களுக்குத் தெரிந்த மொழியாக்கத்தில் படித்து

சிந்தித்து ஆய்வு செய்கிறவர்களுக்கு அது இரவும் பகலைப் போல் தெள்ளத் தெளிவாக விளங்கும் நிலையிலேயே அல்குர்ஆன் வசனங்கள் இருக்கின்றன. இதோ அல்குர்ஆன் கூறுகிறது.

**எவர்கள் நம்முடைய வழியில் முயல்கிறார்களோ, நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான வழியில் நாம் செலுத்துவோம்; நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கிறான்.** (அன்கபூத் 29:69)

**தக்வா-பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ் கற்றுக் கொடுக்கிறான்.** (2:282)

**அல்லாஹ்வை (முழுமையாக) அஞ்சி நடப்பவர்களே உலமாக்கள் எனும் அறிஞர்களாவர்.** (35:28)

உலமாக்களாகிய நாங்கள்தான் அல்லாஹ்வை முழுமையாக அஞ்சி நடக்கிறோம் என புரோகித மவ்லவிகள் புருடா விடுவார்கள். இது பகிரங்கமான பொய்யாகும். அல்லாஹ்வின் சுமார் 50 இறைவாக்குகளை நிராகரித்துவிட்டு மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டவர்கள் எப்படி அல்லாஹ்வை முழுமையாக அஞ்சி நடப்பவர்களாக இருக்க முடியும். இவர்களை 2:39 இறைவாக்கு தெளிவாக அடையாளம் காட்டுகிறது. அது வருமாறு.

**அன்றி யார் (நம்முடைய வாக்குகளை ஏற்க) மறுத்து, நம் அத்தாட்சிகளைப் பொய்ப்பிக்க முற்படுகிறார்களே, அவர்கள் நரகவாசிகள்: அவர்கள் அ(ந்நரகத்)தில் என்றென்றும் தங்கி இருப்பர்.** (அல்பகரா 2:39)

இன்னும் அல்லாஹ் கூறுவதைக் காது கொடுத்துக் கேளுங்கள்!

**"இந்த குர்ஆனை (அவன்தான் கற்றுக்கொடுத்தான்"** (அர்ரஹ்மான் 55:2)

**"அவனே மனிதனைப் படைத்தான்."** (55:3)

**"அவனே மனிதனுக்கு (அனைத்து) விளக்கங்களையும் கற்றுக் கொடுத்தான்."** (55:4)

**"......(நபியே!) நீர் அறியாதிருந்தவற்றையும் அவன் (அல்லாஹ்) உமக்குக் கற்றுக் கொடுத்தான்....."** (4:113)

**“நீங்கள் அறியாமல் இருந்ததை அவன் உங்களுக்குக் கற்றுக் கொடுத்ததைப் போன்று அல்லாஹ்வை நினைவு கூறுங்கள்”** (2:239)

அல்குர்ஆனை தனக்குத் தெரிந்த மொழியில் பெயர்க்கப் பட்டதை ஒருவர் முறையாகப் படித்து வருவாரானால், மனிதனைப் படைத்த அல்லாஹ் தனது அடிமைக்கு, இவ்வாறு தெளிவு படுத்துகிறோம், விவரிக்கிறோம், புரிய வைக்கிறோம் என எண்ணற்ற இடங்களில் கூறி இருப்பதை அறிய முடியும்.

**நிச்சயமாக அல்குர்ஆனை (நீங்கள்) விளங்கிக் கொள்வதற்காகவே (மிக) எளிதாக்கி வைத்திருக்கிறோம். எனவே (இதை) விளங்கி நல்லுணர்வு பெறுவோர் உண்டா?** (54:17,22,32,40)

மேலும் அல்குர்ஆன் விளங்குவதற்கு எளிதாக்கப்பட்டுள்ளது என்று 19:97, 44:58, 80:20 இறைவாக்குகள் கூறுகின்றன.

அல்குர்ஆனை விளங்குவதற்கு மனிதர்களுக்கு எவ்வித சிரமமும் இல்லை என்று 5:6, 7:2, 9:91, 22:78 ஆகிய இறை வாக்குகள் உறுதிப்படுத்துகின்றன.

அல்குர்ஆன் நேரடியாக விளங்குவதற்கு மிகமிகத் தெளிவானது, எளிதானது என்று 12:1, 15:1, 16:64, 27:1, 28:2, 36:69, 43:2 ஆகிய இறைவாக்குகள் கட்டியம் கூறுகின்றன.

அல்குர்ஆனை விளங்குவதில் சிரமத்தை உண்டாக்கும் எவ்வித முரண்பாடும் அதில் இல்லை என்று 4:82, 18:1, 39:23,28 ஆகிய இறைவாக்குகள் உறுதி அளிக்கின்றன.

அல்குர்ஆன் மனிதர்களுக்கு அல்லாஹ்வாலேயே கற்றுக் கொடுக்கப்பட்டது என்று 55:2,4, 4:113, 87:6 ஆகிய இறைவாக்குகள் சாட்சியமளிக்கின்றன.

இதற்கெல்லாம் மேலாக, நெத்தியடியாக அல்குர்ஆன் குறிப்பாக எழுதப்படிக்கத் தெரியாத, புரோகித மவ்லவிகளால் அல்அவாம் கல் அன்ஆம் - அவாம்களாகிய பாமர மக்கள் கால்நடைகளைப் போன்றவர்கள் என்று இழிவு படுத்தப்படுகின்ற சாதாரண மக்களுக்காகவே குறிப்பாக எளிமையான, தெளிவான நிலையில் அருளப்பட்டது என்று அல்ஜுமுஆ 62:2 இறைவாக்கு கூறுகிறது. கேளுங்கள்.

**அவன்தான், எழுதப்படிக்கத் தெரியாத மக்களிடம் அவனுடைய வசனங்களைப் படித்துக் காட்டி அவர்களைத் துாய்மையாக்கி, அவர்களுக்கு நெறி நூலையும் (அல்குர்ஆன்) விவேகத்தையும் கற்பிக்கும்படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான். அவர்களோ அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்.** (62:2)

பொதுவாக ஆதத்தின் சந்ததிகளான மனிதர்கள் அனைவருக்கும் அல்குர்ஆன் தெள்ளத் தெளிவாக விபரமாக விளக்கப்பட்டுவிட்டது என்று எண்ணற்ற வசனங்களை எடுத்துக் காட்டி விட்டோம். அதற்கு மாறாக அரபி மொழி கற்ற அறிஞர்களாலேயே அல்குர்ஆனை விளங்க முடியும் என்று கூறும் ஒரேயொரு வசனம் உண்டா? ஒரேயொரு ஆதாரபூர்வமான ஹதீஸ் உண்டா? இந்தப் புரோகித மவ்லவிகளால் காட்ட முடியுமா? காட்ட முடியாது.

இப்போது சிந்தியுங்கள்! நம்மைப் படைத்த சர்வ வல்லமை மிக்க அல்லாஹ்வே நமது எஜமானனே, நாளை மறுமையில் நமது செயல்கள் அனைத்தையும் எடைபோட்டு நமக்குத் தீர்ப்பு அளிக்கும் அல்லாஹ்வே, ஒவ்வொரு தொழுகையிலும், ஒவ்வொரு ரகாஅத்திலும், தீர்ப்பு நாளின் அதிபதி என்று நாம் உறுதி அளிக்கும் அல்லாஹ்வே அல்குர்ஆனிலுள்ள மனிதர்கள் நேர்வழியாக எடுத்து நடக்க வேண்டிய அனைத்தையும் தெள்ளத் தெளிவாக, விளக்கமாக, நேரடியாக எவ்வித கோணலோ, முரண்பாடோ இல்லாத நிலையில் விளக்கிய பின்னர், மேலும் ஒரு தூதரைக் கொண்டு அவை அனைத்தையும் செயல் முறையில் நடைமுறைப் படுத்திக் காட்டச் செய்த பின்னர் அல்குர்ஆன் உங்களுக்கு விளங்காது, அரபி படித்து பட்டம் வாங்கியுள்ள எங்களுக்கு மட்டுமே விளங்கும் என்று இந்தப் புரோகிதர்கள் சொல்வது எந்த அளவு அகந்தைமிக்கது, ஆணவத்திற்குரியது, தலைக்கணம் கொண்டு அலைவது என்பதைப் புரிய முடியவில்லையா? இப்படி அகந்தை பேசியவர்கள் யார்? நபிமார்களை எதிர்த்து அகந்தை பேசிய புரோகிதர் பட்டாளம் தானே! இப்ராஹீம்(அலை) அவர்களை எதிர்த்து, அகந்தை பேசிய நம்ரூது தானே? மூஸா(அலை) அவர்களை எதிர்த்து அகந்தை பேசிய ஃபிர்அவ்ன் தானே? இறுதி நபி முஹம்மது

(ஸல்) அவர்களை எதிர்த்து அகந்தை பேசிய அபூ ஜஹ்லும்தானே?

இப்போது சொல்லுங்கள் அல்லாஹ் உங்களுக்கு விளக்கி யுள்ள குர்ஆன் உங்களுக்கு விளங்காது; நாங்கள் தான் விளக்க வேண்டும் என்று அகந்தை பேசும் புரோகித மவ்லவிகள் நம்ரூது, ஃபிர்அவ்ன், அபூஜஹ்ல் போன்ற நரகிற்குரியவர்களின் வாரிசுகளா? அல்லது நபிமார்களின் வாரிசுகளா? நீங்களே முடிவு செய்யுங்கள்.

அல்லாஹ் விளக்கியுள்ளது உங்களுக்கு விளங்காது, அல்லாஹ்வின் கண்காணிப்பில் (52:48) அவனது தூதர் விளக்கியது விளங்காது; அதை நாங்கள் விளக்கித்தான் பொதுமக்களாகிய நீங்கள் விளங்க முடியும் என்று பிதற்றும் இப்புரோகித மவ்லவிகளின் ஆணவமும், அகங்காரமும் இமய மாலை உச்சிக்கும் மேலாகச் சென்றுள்ளதைப் புரிய முடிய வில்லையா? “அனரப்புக்குமுல் அஃலா - நானே ரப்புகளுக்கும் மேலான ரப்பு என்று பிதற்றிய ஃபிர்அவ்ன் இப்புரோகித மவ்லவி களிடம் பிச்சை கேட்க வேண்டும். அந்த அளவு இப்புரோகித மவ்லவிகள் 42:21-ல் அல்லாஹ் சொல்வதுபோல் அல்லாஹ்வுக்கே இணையாளர்கள் ஆகிறார்கள். 49:16-ல் அல்லாஹ் சொல்வது போல் அல்லாஹ்வுக்கே மார்க்கம் சொல்லிக் கொடுக்கத் துணிந்து விட்டார்கள். நாளை மறுமையில் இவர்களைவிட பெரும்பாவிகள், முஷ்ரிக்குகள், காஃபிர்கள் என்று அடையாளம் காட்டப்படும் வேறு யாரையும் சுட்டிக்காட்ட முடியுமா? அல்லாஹ் அல்அஃ ராப் 7:175லிருந்து 179 வரை சுட்டிக் காட்டியவர்களின் பட்டியலில் இவர்கள் முதல் இடத்தைப் பெறுவார்கள் என்பதை மேலே கண்டுள்ள குர்ஆன் வசனங்களை நடுநிலையோடு படித்து விளங்குகிறவர்கள் மறுக்க முடியுமா?

அல்குர்ஆன் அல்லாஹ்வால் கற்றுக் கொடுக்கப்பட்டது, தெளிவாக்கப்பட்டது, எளிதாக்கப்பட்டது, ஒரே நேர்வழியைச் சொல்வது, முரண்பாடற்றது, கோணல் அற்றது, எழுதப் படிக்கத் தெரியாத கைநாட்டுப் பேர்வழியும் விளங்க எளிதானது, அதில் சிரமத்திற்கு, கஷ்டத்திற்கு இடமே இல்லை. அந்த அளவு விபரமாக விவரிக்கப்பட்டது என்று பலவிதமாகக் கூறும் இறைவாக்குகளை நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் அவை எண்ணிக்கையில் சுமார் நானூறு(400)ஐத் தாண்டும். இப்படி எல்லாம் அல்குர்ஆன் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கும்

நிலையில் இப்புரோகித மவ்லவிகள் குர்ஆன் பொதுமக்களுக்கு விளங்காது என்று கோரஸ் பாடினால், அவர்களின் உள்ளங்கள் அல்லாஹ் 2:74, 5:13, 6:125 இறைவாக்குகளில் சுட்டிக் காட்டுவது போல் சுருங்கி, இறுகி கற்பாறைகள் போல் ஆகிவிட்டன என்பது தானே அதன் பொருள். மார்க்கப் பணிக்கு ஹராமான வழியில் அவர்கள் கூலி-சம்பளம் வாங்கி அதன் மூலம் அவர்கள் தங்கள் வயிறுகளை நரக நெருப்பால் நிரப்புவதுதானே (2:174) அதற்குக் காரணம்.

மேலே கண்ட 2:74, 5:13, 6:125 மற்றும் 2:174 அல்லாஹ்வின் கடுமையான எச்சரிக்கைகளை பொருட்படுத்துவதாக இல்லை ஜாக் அமீர் S.K. துணிந்து அபூ ஜஹ்லின் வாதத்தை எடுத்து வைப்பதில் முன்னணியில் இருக்கிறார் அவர். அவரது அல்ஜன்னத் 2009 மே மாத இதழின் 26-ம் பக்கம் காணப்படும் மிம்பர் ஏறத் தெரிந்தவர்களெல்லாம் அறிஞர்களா? என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள கட்டுரையும், 30-ம் பக்கம் காணப்படும் “மார்க்கத்தைப் போதிப்பது ஆலிம்கள்தான் ஜாஹில்கள் அல்ல!” என்ற கட்டுரையும் இதை உண்மைப்படுத்துகிறது.

அவரது மடமை அபூ ஜஹ்ல் வாதம் இதுதான். அரபி மொழி கல்லாதவர்கள் ஒருபோதும் ஆலிம்-அறிஞர் ஆக முடியாது; அவர்கள் குர்ஆன், ஹதீஸ் இரண்டையும் அரபி மொழி அல்லாத வேறு எந்த மொழியில் கற்றிருந்தாலும் அவர்கள் ஆலிமாக முடியாது. அவர்கள் ஜாஹில்களே-மடையர்களே என்றே வாதிடுகிறார். புரோகிதம் மூலம் அவர் வயிறு வளர்ப்பதால் அவரது உள்ளம் சுருங்கி, இறுகி கற்பாறை போல் ஆகிவிட்டதால், 1430 ஆண்டுகளுக்கு முன்னர் அன்றைய அபூஜஹ்ல் வாதத்தை இன்றைய அபூ ஜஹ்ல் எடுத்து வைத்துள்ளார்.

அரபிமொழி எழுதப் படிக்கக் கற்றவர்கள்தான் அல்குர்ஆனை விளங்க முடியும் என்ற S.K.யின் மடமைவாதத்தின்படி பார்த்தால், அன்று அபூ ஜஹ்ல் என்று நபி(ஸல்) அவர்கள் இழிவுபடுத்திய அபுல் ஹிக்கமும், அரபு மொழி பண்டிதர்களான தாருந்நத்வா உலமா - பெருமக்களாக அன்று மக்களால் கருதப்பட்டு, நபி(ஸல்) அவர்களால் ஜாஹில்கள் என அடையாளம் காட்டப்பட்ட தாருந்நத்வாவினரே அல்குர்ஆனை விளங்கி இருக்க வேண்டும்.

அந்த அரபி பண்டிதர்கள் அல்குர்ஆனை விளங்கினார்களா? இல்லையே?

அதற்கு மாறாக அல்குர்ஆனை தெளிவாக விளங்கியது யார்? அரபி எழதப் படிக்கத் தெரியாத உம்மிகளான கைநாட்டுப் பிரமுகர்கள்தான் அல்குர்ஆனை சரியாக விளங்கி-ஏற்று அதன்படி நடந்தார்கள். இந்தச் சாதாரண அடிப்படை அறிவும் இல்லாதவர் தான் தன்னை அரபி மொழி பண்டிதர் ஆலிம் என பீற்றிக் கொள்கிறார்.

அன்றைய தாருந்நத்வாவினரின் அரபி மொழி பாண்டித்யம், இலக்கண இலக்கிய ஆற்றல், கவி புனையும் மேலாண்மை, எதுகை முகனையுடன் எழுத, கவிபாட அவர்களுக்கிருந்த தனித் திறமையோடு, எஸ்.கே., பீ.ஜை மற்றும் அரபி அகந்தைப் பேசும் புரோகித மவ்லவிகளை ஒப்பிட்டால் அவர்களின் கால் தூசுக்குக் கூட இவர்கள் ஒப்பாக மாட்டார்கள்.

அது போகட்டும்; இன்றைய யூதர்களின் அரபி மொழித் திறமைக்கும் இவர்கள் ஈடு கொடுக்க முடியாது. அரபி மொழி அகராதி, ஹதீஸ் தொகுப்புகளின் அட்டவணை இவற்றைத் தயாரித்தவர்கள் யூதர்களே. இந்த லட்சணத்தில் இப்புரோகித மவ்லவிகள் அரபி மொழி பெருமை பேசி, நாங்கள்தான் ஆலிம் கள் என அகந்தை பேசுவது குருடன் ராஜமுழி முழிப்பதாகச் சொல்வது போன்ற அறிவீனமான வாதமாகும்.

அவர்கள் உண்மையிலேயே ஆலிம்களாக இருந்தால் சுமார் 50க்கும் மேற்பட்ட வசனங்களை நிராகரித்து மார்க்கத்தை மதமாக்கிப் பிழைப்பு நடத்துவார்களா? 21:92, 23:52 இறைக் கட்டளைகளையும், நபி(ஸல்) அவர்களின் 23 வருட வாழ்க்கை நடைமுறைகளையும் நிராகரித்துவிட்டு (2:39) சமுதாயத்தை ஆலிம்-அவாம் என பிளவு படுத்துவார்களா? நபி(ஸல்) அவர்களது அந்த 23 வருட வாழ்க்கையில் முஸ்லிம்களை ஆலிம்கள் என்றும், அவாம்கள் என்றும் பிரித்து நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள் என்பதற்கு இவர்களிடம் ஆதாரம் இருக்கிறதா?

அல்ஜன்னத் மே 2009 இதழில் 30,31 பக்கங்களில் எடுத்து எழுதியுள்ள 39:9, 58:11, 35:28, 47:19 இன்னும் இவைபோலுள்ள வசனங்கள் அனைத்தும், முஸ்லிம் சமுதாயத்திலுள்ள ஆண்கள்,

பெண்கள் அனைவரும் குர்ஆன், ஹதீஸைக் கற்று மார்க்கம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனவே அல்லாமல், சமுதாயத்தை ஆலிம்-அவாம் என பிளவு படுத்தக் கூறவில்லை. அல்லாஹ்வின் பொருத்தம் பெற்றவர்களும், பெறாத வர்களும் சமமானவர்களா? என்றும் சுவர்க்கவாதிகளும், நரக வாதிகளும சமமானவர்களா? என்றும் கேட்டால், அதன் பொருள் என்ன? அனைவரும் அல்லாஹ்வின் பொருத்தம் பெற்று சுவர்க்கம் செல்ல முனைய வேண்டும் என்பது அதன் பொருளா? அல்லது இவ்வுலகிலேயே சுவர்க்கத்திற்குரியவர்கள், நரகத்திற்குரியவர்கள் என சமுதாயத்தைப் பிளவு படுத்துவது என்பது அதன் பொருளா? இதைக்கூட விளங்க முடியாத ஜாஹில்கள்தான் தங்களை ஆலிம்கள் என பீற்றிக் கொள்கிறார்கள்.

இவர்கள் நடத்தும் மதரஸாக்கள் நபி(ஸல்) அவர்கள் நடத்திக் காட்டிய மதரஸா என்று இவர்களால் கூற முடியுமா? ஆதாரம் இருக்கிறதா? இவர்களது மதரஸாக்களில் கற்றுக் கொடுப்பது குர்ஆன், ஹதீஸ் அல்ல; குர்ஆன், ஹதீஸை முறையாகக் கற்றுக் கொடுத்தால், அதிலிருந்து வெளி வருபவர்கள் ஒருபோதும் மார்க்கத்தைக் கொண்டு வயிறு வளர்க்க மாட்டார்கள். மாறாக மார்க்கத்தை மதமாக்கி அதையே பிழைப்பாகக் கொள்ளும் புரோகிதக் கல்வியே இவர்களது மதரஸாக்களிலும் போதிக்கப் படுகிறது என்பதை இவர்களால் மறுக்க முடியுமா? இவர்களது மதரஸாக்களிலிருந்து பட்டம் பெற்று வெளி வந்தவர்கள் கூலிக்கு - சம்பளத்திற்கு இவர்களின் புரோகித மதஸாக்களில் ஆசிரியர்களாகப் பணிபுரிகிறார்கள், பள்ளிகளில் இமாமத் செய்கிறார்கள் அல்லது கூலிக்கு - சம்பளத்திற்கு பிரசார பணி புரிகிறார்கள். இவர்களின் மதரஸாக்களிலிருந்து பட்டம் பெற்றவர்களில் எத்தனை பேர் கூலியை மறுமையில் எதிர்பார்த்து அல்லாஹ்வுக்காக மார்க்கப் பணி புரிந்து கொண்டு ஹலாலான முறையில் உழைத்துச் சாப்பிடுகிறார்கள்? காட்ட முடியுமா?

**நாங்கள்தான் மார்க்கம் கற்ற ஆலிம்கள் என பீற்றிக் கொண்டு மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டுள்ள அபூ ஜஹ்லின் வாரிசுகளையே கடுமையாக விமர்சிக்கிறோம். முறையாக குர்ஆன், ஹதீஸைக் கற்று, அரபி மொழி ஆணவம் பேசாமல் அடக்கமாக அல்லாஹ்வுக்காக கூலி-சம்பளம் வாங்காமல் மார்க்கப் பணி**

**புரியும் நபிமார்களின் வாரிசுகளான ஆலிம்களை நாங்கள் ஒருபோதும் விமர்சித்ததில்லை. விமர்சிக்கவும் மாட்டோம்.**

அதனால் தானே இப்புரோகிதர்கள் அல்குர்ஆன் நேரடியாகச் சொல்லும் இறைவாக்குகளே அவர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டாலும் அவற்றை மறுத்து சுய விளக்கம் கூறி நிராகரிக்கிறார்கள். 2:6,8, 10-12,15,16,18,44,79,99,146,159-162,175,176,188,204-206,208,209,212,213, 3:4,105, 5:104, 6:159, 7:175-179,182,183,186,193, 30:32, 42:14 இன்னும் இவைபோல் எண்ணற்ற இறைவாக்குகள் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட புரோகிதர்களையும், அவர்களைக் கண் மூடிப் பின்பற்றும் அவர்களது பக்தர்களையும் கடுமையாக எச்சரிக்கின்றன. ஆனால் இவற்றை படித்து உணர்ந்து திருந்தும் பக்குவம்தான் இப்புரோகிதர்களிடம் இல்லை. அதேபோல் நேர்வழி இதுதான் என்று 6:71,157, 7:152,193,198,203, 9:33, 10:57, 16:64,89,102, 17:94, 18:57, 19:76, 20:123, 22:8,67, 27:2,77, 28:50,57,85, 31:3,5,20, 34:24,32, 39:23, 41:44, 45:11,20, 47:17,25,32, 48:28, 53:23, 61:9, 72:13, 92:12 போன்ற எண்ணற்ற இறைவாக்குகள் மிக உறுதியாகக் கூறிக் கொண்டிருந்தும் இப்புரோகித மவ்லவிகள் உணர்வு பெறுவதாக இல்லை.

இப்புரோகித மவ்லவிகள் முஸ்லிம் சமுதாயத்தில் எந்த ஆதார அடிப்படையில் மதகுருமார்களாக உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதை நோட்டமிட்டால், குர்ஆன், ஹதீஸில் ஒரேயொரு ஆதாரத்தையும் பார்க்க முடியவில்லை. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டும் எனக் கூறும் எண்ணற்ற வசனங்கள் இருக்கின்றன. இறைத் தூதரின் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டும் எனக் கூறும் எண்ணற்ற வசனங்கள் இருக்கின்றன. சமூகக் கட்டுப்பாட்டையும், ஒற்றுமை யையும் நிலை நிறுத்த அமீருக்குக் கட்டுப்படவேண்டும் என 4:59 இறைவாக்குக் கூறுகிறது. அந்த அமீருக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் குர்ஆன், ஹதீஸுக்கு உட்பட்டுத்தான்.அந்த அமீரும் குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமாகக் கட்டளையிட முடியாது. அப்படிக் கட்டளையிட்டால் அதற்குக் கட்டுப்படக் கூடாது என்பதை யும் 4:59 இறைவாக்கு தெளிவாக வலியுறுத்துகிறது.

ஆனால் மவ்லவிகள், ஆலிம்கள், அல்லாமாக்கள், இமாம்கள் என மார்தட்டிக் கொள்ளும் இந்தப் புரோகிதர்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று கூறும் ஒரேயொரு குர்ஆன் வசனமும் இல்லை: ஒரேயொரு ஆதாரபூர்வமான ஹதீஸும் இல்லை. பின் எப்படி இந்தப் புரோகித மவ்லவிகள் முஸ்லிம் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தத் துணிகிறார்கள்? ஆம்! இதர மதங்களிலுள்ள மதகுருமார்கள் என்ற புரோகிதர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே இவர்கள் முஸ்லிம் சமூகத்திலும் ஆதிக்கம் செலுத்த முற்படுகிறார்கள். இது பற்றியும் நபி(ஸல்) முன் அறிவிப்பு செய்துள்ளனர்.

இதர மதங்களிலுள்ள புரோகிதர்கள் எப்படிப்பட்டவர்கள்? 5:46, 6:91, 7:154, 12:111, 20:47, 28:43, 32:23, 40:53, 54, 41:17 அல்குர்ஆன் இறைவாக்குகள் சுட்டிக்காட்டுவதுபோல், முன்னைய நபிமார்களுக்கு இறைவனால் இறக்கி அருளப்பட்ட ஒரே நேர் வழியை, தங்களின் அற்ப உலக ஆதாயத்திற்காக பல கோணல் வழிகளாக்கி அவை மூலம் வயிறு வளர்த்து வரும் புரோகிதர்களே அவர்கள். அவர்கள் வழியிலேயே முஸ்லிம் மதப் புரோகிதர்களும் அல்லாஹ் கொடுத்த ஒரே நேர்வழியை பல கோணல் வழிகளாக்கி அவை கொண்டு ஹராமான வழியில் தங்கள் வயிறுகளை நரக நெருப்பால் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். (2:174)

மற்ற மதங்களிலுள்ள குருமார்களையும் அவர்களைப் பின்பற்றும் மாற்று மதங்களின் மக்களையும் அல்குர்ஆன் கூறும் நேர்வழியை தவறவிட்டு கோணல் வழிகளில் செல்வதின் மூலம் வழிகேட்டிலாகி நரகத்திற்குரியவர்கள் ஆகிறார்கள் என்று இந்த முஸ்லிம் மதகுருமார்கள் துணிந்து சொல்கிறார்கள். அவர்களும் ஆதத்தின் சந்ததிகள்தான், மனிதர்கள்தான் என ஒப்புக் கொண்டு மனித பாசத்துடனும், மனித நேயத்துடனும் அவர்களுடன் பழகுவதையும் வெறுக்கிறார்கள் இந்த முஸ்லிம் மத குருமார்கள். இந்த நிலையில்,

புரோகித மவ்லவிகள் தங்களை முஸ்லிம் மதகுருமார்கள் என்று சிறிதும் வெட்கமின்றி கூறிக் கொள்கிறார்களே இவர்கள் குர்ஆன் கூறும் ஒரே நேர்வழியிலா இருக்கிறார்கள். இவர்களும் குர்ஆன் கூறும் ஒரே நேர்வழியை தவறவிட்டு பல கோணல்

வழிகளில் அதாவது வழிகேட்டில் சென்று நரகை நிரப்புகிறவர் தானே! இவர்கள் முஸ்லிம் சமுதாயத்தை ஆலிம்-அவாம் என இரு கூறாகப் பிளந்து தங்களை மதகுருமார்கள் என்று சொல்லிக் கொள்ள ஒரேயொரு குர்ஆன் வசனத்தையாவது இவர்களால் காட்ட முடியுமா? ஒரேயொரு ஆதாரபூர்வமான ஹதீஸையாவது காட்ட முடியுமா? நிச்சயமாக முடியாது.

அதற்கு மாறாக இந்துக்கள் அவர்களின் மதகுருமாருக்கு பின்னால் செல்வது போல், கிறித்தவர்கள் அவர்களின் குருமார்களான பாதிரிகளுக்குப் பின்னால் செல்வதுபோல; இப்படி ஒவ்வொரு மதத்தினரும் அவர்களின் மத குருமார்களின் பின்னால் செல்வது போல், முஸ்லிம்களாகிய நீங்கள் முஸ்லிம் மத குருமார்களாகிய எங்கள் பின்னால் வரவேண்டும் என்று மட்டுமே பிதற்ற முடியும்.

மேலும் அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா? (39:9) பார்வையுள்ளவனும், குருடனும் சமமாவார்களா? (35:19) உங்களிலுள்ள நம்பிக்கையாளர்களுக்கும், கல்விமான்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் (58:11) போன்ற குர்ஆன் வசனங்களை காட்டி மக்களை, ஏமாற்ற முடியும். இப்படிப்பட்ட வசனங்கள் அனைத்தும் அனைவரும் அறிந்தவர்களாக, பார்வையுடையவர்களாக, கல்விமான்களாக ஆகவேண்டும் என்று அல்குர்ஆன் வலியுறுத்துகிறதே அல்லாமல், மதகுருமார்கள் என்ற கூலிக்கு மாரடிக்கும் புரோகித வர்க்கத்தை, சமுதாயத்தைப் பிளவுபடுத்தி ஆலிம்-அவாம் வேறுபாட்டை உண்டாக்கிக் கொள்ள அனுமதிக்கவில்லை என்பதை அறியாத மூடர்களா? இப்புரோகித மவ்லவிகள்.

தங்களின் குருத்துவத்தை நிலைநாட்டிக் கொள்ள அவர்கள் எடுத்து வைக்கும் வாதங்கள் அனைத்தும் தவிடு பொடியாகி தரைமட்டமான பின், உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள் என்று நபி(ஸல்) கூறி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நபிமார்கள் செய்த மார்க்கப்பணியை செய்வதற்கு உரிமை பெற்றவர்கள் நாங்களே என மார்தட்டுவார்கள். உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள் என்று சொன்ன நபி(ஸல்) அவர்கள், அவர்கள் திர்ஹத்திற்கோ தீனருக்கோ வாரிசாக மாட்டார்கள் என்று அதைத் தொடர்ந்து கூறியிருப்பதை அவர்களின் புரோகிதத்

தொழில் வசதிக்காக மறந்து விடுவார்கள், அல்லது மறைத்து விடுவார்கள்.

ஆம்! அவர்கள் நபிமார்களின் வாரிசுகளாக இருந்து மார்க்கப் பணி செய்ய தகுதியானவர்கள்தான்! எப்போது? நபிமார்கள் கூலியை-சம்பளத்தை மக்களிடம் கேட்காமல், அல்லாஹ்விடம் மட்டுமே கூலியை எதிர்பார்த்து மார்க்கப்பணி செய்தது போல் இந்த மவ்லவிகளும் மக்களிடம் கூலி-சம்பளத்தை கேட்காமல், அல்லாஹ்விடம் மட்டுமே எதிர்பார்த்து செய்ய முன்வந்தால், அவர்களை நபிமார்களின் வாரிசுகளாக ஏற்கலாம். அதற்கு மாறாக கூலிக்காக-சம்பளத்திற்காக மார்க்கப்பணி புரியும் இப்புரோகித மவ்லவிகள் ஒருபோதும் நபிமார்களின் வாரிசுகளாக மாட்டார்கள். அதற்கு மாறாக நம்ரூது, ஃபிர்அவ்ன், அபூஜஹீல் மற்றும் தாருந்நத்வா ஜாஹில்களின் வாரிசுகளாக மட்டுமே ஆக முடியும். அவர்களுக்கு ஏற்பட்ட கதியே இவர்களுக்கும் ஏற்படும் என்று கடுமையாக எச்சரிக்கிறோம்.

நபிமார்கள் அல்லாஹ்வுக்காக மார்க்கப்பணி புரிந்ததால் அல்லாஹ் வஹீ மூலம் அறிவித்த ஒரே நேர்வழியிலிருந்து கடுகளவும் விலகாமல் நூல் பிடித்ததுபோல் அந்த நேர்வழியில் மக்களை அழைத்துச் சென்றார்கள். அந்த நிலையிலும் அல்லாஹ்வின் கண்காணிப்பில் இருந்து (52:48) செயல்பட்டார்கள். ஒரு சிறு பிசகு ஏற்பட்டாலும் உடனுக்குடன் அல்லாஹ்வால் எச்சரிக்கப்பட்டு திருத்தப்பட்டார்கள். அதைக் கூறும் பல குர்ஆன் வசனங்களையும் உங்களால் பார்க்க முடியும். உதாரணமாக 5:67, 6:52, 17:73,74,75, 69:44-47 இவை போன்ற குர்ஆன் வசனங் களைப் படித்துப் பார்த்து உணர்வு பெறுங்கள்.

இந்த மவ்லவிகளும் மக்களிடம் கூலியை எதிர்பாராமல், அல்லாஹ்விடம் மட்டுமே கூலியை எதிர்பார்த்து மார்க்கப் பணி புரிந்தால் குர்ஆனில் உள்ளதை உள்ளபடி திரிக்காமல், வளைக்காமல், மறைக்காமல் மக்களுக்குச் சொல்ல முடியும். அதற்கு மாறாக மார்க்கத்தை மதமாக்கி அதையே பிழைப்பாக்கிக் கொண்டால் அல்லாஹ் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டுவது போல் பல தில்லுமுல்லுகளைச் செய்யும் கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள். அல்லாஹ் தெள்ளத் தெளிவாக நேர்வழியையும், ஆதாரங்களையும் விளக்கிய பின்னர், நாங்கள்தான் அதற்கும்

மேலாக விளக்கும் பேர்வழிகள் எனக் கிளம்பும் இப்புரோகித மவ்லவிகள் நேர்வழியை பல கோணல் வழிகளாக்குவதன் மூலம், அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி நிரந்தர நரகை அடைகிறார்கள் என்பதை 2:159,160,161,162 இறைவாக்குகளை நேரடியாகப் படித்து விளங்குகிறவர்கள் நிச்சயமாக அறிய முடியும்.

**....உங்களுடைய இறைவனிடமிருந்து மிகத் தெளிவாக (வழிகாட்டும் நெறி) நூலும், நேர்வழியும், அருளும் வந்து விட்டது. எவன் அல்லாஹ்வின் வசனங்களைப் புறக் கணித்து அவற்றை விட்டு, விலகி விடுகிறானோ அவனை விட அதிக அநியாயக்காரன் யார்? நம்முடைய வசனங் களை விட்டு விலகிக் கொள்கிறவர்களுக்கு, அவர்கள் விலகிக் கொண்ட காரணத்தால் கொடிய வேதனையைக் கூலியாகக் கொடுப்போம்.** (அன்ஆம் 6:157)

**எவன் தன் இறைவனுடைய வசனங்களைக் கொண்டு அறிவுரைக்கப்பட்டும் அவற்றைப் புறக்கணித்து தன்னிரு கரங்களும் செய்த குற்றங்களை மறந்து விடுகிறானோ அவனைவிடப் பெரிய அக்கிரமக்காரன் எவன் இருக்கிறான்? நிச்சயமாக நாம் அவர்களுடைய இருதயங்களின்மீது, இவற்றை விளங்கிக் கொள்ளாதவாறு, திரைகளையும், அவர்களுடைய செவிகளில் செவிட்டுத்தனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆதலால் நீர் அவர்களை நேர்வழியின் பால் அழைத்தாலும் அவர்கள் ஒருபோதும் நேர்வழியடைய மாட்டார்கள்.** (அல்க.ஃ.பு 18:57)

சுமார் 50 அல்குர்ஆன் வசனங்களை நிராகரித்து, மார்க்கத்தை மதமாக்கி வயிறு வளர்க்கும் புரோகித மவ்லவிகள் அல்குர்ஆன் பொதுமக்களுக்கு விளங்காது என்று கூறும் தந்திரம் புரிகிறதா? புரோகித மவ்லவிகள் நேர்வழியை அடைய முடியாது என்று அல்லாஹ்வே இந்த 18:57-ல் கூறியிருப்பதை யாரால் மறுக்க முடியுமா?

**நிச்சயமாக எவர்கள் நேர்வழி இன்னதென்று அவர் களுக்குத் தெளிவானபின், தம் முதுகுகளைத் திருப்பிக் கொண்டு போகிறார்களோ, (அவ்வாறு போவதை) ஷைத்**

**தான் அழகாக்கி, (அவர்களுடைய தவறான எண்ணங்களை யும்) அவர்களுக்குப் பெருக்கிவிட்டான்.** (முஹம்மது 47:25)

அரபி படித்த மவ்லவிகளாகிய நாங்கள் மட்டுமே குர்ஆனை விளங்க முடியும், மார்க்கத்தை மக்களுக்குப் போதிக்கும் அதிகாரம் பெற்றவர்கள் என்று கூறி வருவது கடைந்தெடுத்த ஆணவமிக்க பொய் என்பதை மேலே கண்ட இறைவாக்குகளைப் படித்து விளங்கலாம். மார்க்கத்தில் ஃபத்வா கொடுக்கும்-தீர்ப்பளிக்கும் அதிகாரமும் எங்களுக்கே என்று கூறி இப்புரோகித மவ்லவிகள் மார்தட்டுவதும் குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் முற்றிலும் முரணான வழிகேடாகும். மதரஸாக்களில் காலம் கழித்து வெளிவருகிறவர் களில் சிலருக்கு இவர்கள் "முஃப்தி" என்ற பட்டம் கொடுப்பதும் "மவ்லவி" என்று பட்டம் கொடுப்பது போன்ற ஒரு வழிகேடே! அல்குர்ஆன் 42:21, 49:16 இறைவாக்குகளுக்கு முரணான செயலே. அப்படி மனிதர்களில் யாரும் ஃபத்வா கொடுக்கும் முஃப்திகளாக ஒருபோதும் ஆக முடியாது.

அவர்கள் உண்மையான ஆலிம்களாக இருந்தால், நபிமார் களின் வாரிசுகளாக இருந்தால், அது கொண்டு, பிழைப்பு நடத்த மாட்டார்கள். கூலி வாங்கும் நோக்கத்துடன் குர்ஆன், ஹதீஸில் இல்லாத ஒன்றை மார்க்கமாக்கி ஃபத்வா கொடுக்க மாட்டார்கள். அதற்கு மாறாக தங்களிடம் வரும் கேள்விகளுக்கு குர்ஆன் வசனத்தையோ, ஆதாரபூர்வமான ஹதீஸையோ மட்டுமே எடுத்து வைப்பார்கள். தங்கள் புரோகித முன்னோர்களின் கற்பனையில் உருவான "பிக்ஹு" சட்டங்களை ஒருபோதும் எடுத்து வைக்க மாட்டார்கள்.

இன்று இந்திய நீதித்துறையில் "முஹம்மடன்லா" என்ற பெயரால் நடைமுறையிலிருப்பவை குர்ஆன், ஹதீஸுக்கு முரணாக இப்புரோகிதர்களின் முன்னோர்கள் தங்களின் சுயநலத்தை மையமாக வைத்துக் கற்பனை செய்து புனையப்பட்ட ஷரீஅத் சட்டமே. நீதிமன்றங்கள் அவற்றை ஆதாரமாகக் கொண்டே தீர்ப்பு அளிக்கின்றன. எப்படி இந்து மத குருமார்களான ஆரியப் புரோகிதர்கள் தங்களின் சுயநலத்தை மையமாக வைத்து இந்து மதச் சட்டமாகக் கற்பனை செய்தவை இன்று இந்து மக்களை

ஆட்டிப்படைக்கின்றனவோ அது போலவே முஸ்லிம் மதப் புரோகிதர்கள் கற்பனை செய்த பிக்ஹு அடிப்படையிலான ஷரீஅத் சட்டமே முஸ்லிம் மக்களையும் ஆட்டிப் படைக்கிறது. அனைத்து மதங்களிலும் அகிலங்களையும், அனைத்துப் படைப்புகளையும், மனிதனையும் படைத்த சர்வ வல்லமைமிக்க அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முரணாக அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் தரகர்களாக சட்ட விரோதமாக புகுந்து கொண்ட இப்புரோகிதப் பூசாரிகளே கோலோட்சுகின்றனர். மனித இனத்தின் மிகமிக பெரும்பான்மையினர் இப்புரோகிதர்களின் வலையில் சிக்கி நரகிற்குரியவர்களாகின்றனர். இந்த மதப் புரோகிதர்களின் அட்டூழியங்களை கண்டு ஜீரணிக்க முடியாத சில அறிவு ஜீவிகள், இந்த மதப் புரோகிதர்கள்தான் இறை கொடுத்த நேர்வழிக்கு அதிகாரம் பெற்றவர்கள் என்று நம்பி கடவுள் மறுப்புக் கொள்கையை - நாத்திகத்தை மக்களுக்கு போதிக்கத் தலைப் பட்டனர்.

முடிவு, புரோகிதப் பண்டாரங்கள் ஐம்பது சதவிகித ஒழுக்க மாண்புகளையும், மனிதப் பண்பாடுகளையும், மனித நேயத்தையும் சிதைத்துச் சீரழித்தார்கள் என்றால், எஞ்சியுள்ள ஐம்பது சதவிகித ஒழுக்க மாண்புகளையும், மனிதப் பண்பாடுகளையும், மனித நேயத்தையும் சிதைத்துச் சீரழித்து வருகிறார்கள் இந்த நாத்திகர்கள் அதன் விளைவு பகுத்தறிவு வாதம், பகுத்தறி வாளர்கள் என்று கூறிக்கொண்டு ஐயறிவு மிருக வாழ்க்கையை ஆறறிவு மனிதன் வாழும் சூழ்நிலைகளை பெரும் முயற்சிகள் எடுத்து வளர்த்து வருகிறார்கள்.

மனித வர்க்கத்தின் இந்த சீர்கெட்ட வாழ்க்கையை தீர ஆராய்ந்து, மனித வாழ்வு மேம்பட உள்ள ஒரே வழி, மனித அறிவில் படும் சட்டதிட்டங்கள் அல்ல: அது பரீட்சை எழுதும் மாணவனிடமே கேள்வித்தாள் தயாரிக்கக் கொடுக்கும் அறிவீனமான செயல். எனவே மனித சட்டங்களை தூக்கி எறிந்துவிட்டு, மனிதனைப் படைத்த ஒரே இறைவனாகிய அல்லாஹ் கொடுத்த வாழ்க்கைத் திட்டம், நேர்வழி கடந்த 1430 ஆண்டுகளாக மனிதக் கரம்பட்டு சிதையுறாமல் இருந்து வருகிறது. அதுவே வாழ்க்கை வழிகாட்டி நெறிநூல் அல்குர்ஆன் என்பதை உணர்ந்து

அதிலுள்ளவற்றைக் கூடுதல் குறைவு இல்லாமல் செயல்படுத்த முனைந்தோம். அவ்வாறு முயற்சியில் ஈடுபடும்போது சில மவ்லவிகளும் நமக்கு உறுதுணையாக இருந்து செயல்படுவதாக வாக்களித்து வந்தார்கள்.

இங்குதான் நாம் ஏமாந்தோம். அவர்கள் நமது திட்டத்தைக் கூட இருந்தே குழி பறித்துப் புதைத்துவிடும் சூது மதியோடு, நயவஞ்சக சிந்தனையோடு நம்மோடு வந்து இணைகிறார்கள் என்பதை அறியத்தவறினோம். அதன் விளைவு குர்ஆனைப் பற்றிப் பிடித்து ஒன்றிணைந்து செயல்பட முன்வந்தவர்களை, இப்புரோகித மவ்லவிகள் தங்களின் வசீகர சூன்யப் பேச்சால் மயக்கி தங்களைத் தக்லீது செய்ய வைத்து விட்டார்கள். அதனால் நான்கு மத்ஹபுகளாக இருந்த நிலையை மாற்றி ஒரே மத்ஹபில் முஸ்லிம் என்று செயல்பட முனைந்த மக்கள் இன்று 4+7=11 மத்ஹபுகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சுன்னத் ஜமாஅத் பள்ளி, ஹனஃபி பள்ளி, ஷாஃபி பள்ளி, அஹ்ல ஹதீஸ் பள்ளி என்ற நிலையிலிருந்து உயர்ந்து அனைத்தும் அல்லாஹ்வின் பள்ளி (2:114, 72:18) என்ற உயர் நிலைக்கு உயர்வதற்கு மாறாக அவற்றோடு மேலும் ஜாக் பள்ளி, தமுமுக பள்ளி, ததஜ பள்ளி, இதஜ பள்ளி என கீழ் நிலைக்கு, இழி நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். நமது திட்டத்தை இப்புரோகித மவ்லவிகள் ஒப்புக் கொண்டபடி உண்மையுடன் செயல்பட்டிருந்தால், இந்த 24 வருடங்களில் முஸ்லிம்கள் ஒரே ஜமாஅத்தாக (21:92, 23:52) ஆகி இருப்பார்கள், அனைத்தும் அல்லாஹ்வின் பள்ளிகளாக (2:114, 72:18) ஆகி இருக்கும். முயற்சி செய்து வழக்காடி நீதி மன்றங்களில் குர்ஆன், ஹதீஸ்படி உள்ள ஷரீஅத் சட்டத்தை, முஹம்மடன்லா என்ற புரோகித முல்லாக்களின் ஷரீஅத் சட்டத்திற்குப் பகரமாக நிலை நாட்ட வழி பிறந்திருக்கலாம். இந்த நல்ல முயற்சியைப் பாழாக்கிய சுய நலமிக்க சமுதாய துரோகிகளை முஸ்லிம்கள் இனம் கண்டு ஆலிம்-அவாம் என்ற அவர்களின் சுயநல பிரித்தாலும் முயற்சியை முறியடித்து ஒன்றுபட முன் வருவார்களாக. அதுவே இம்மையிலும் மறுமையிலும் வெற்றியை ஈட்டித்தரும். அல்லாஹ் அருள் புரிவானாக.